## ªð£¼÷ì ,è‹


முன்னுரை .......................... 2

1.1 பாதுகாப்பு .......................... 5

2. கல்வி இளைஞர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு

2.1 கல்வி ..........................14

2.2 இளைஞர் மேம்பாடு ..........................21

2.3 வேலை வாய்ப்பு ..........................24

3.1 மருத்துவம் ..........................28

3.2 மனநலம் பாதிக்கப்பட்டோர் ..........................29

3.3 கர்ப்பிணிகள் மற்றும்
பாலூட்டும் தாய்மார்கள் ..........................30

3.4 தாயகத்தில் உள்ள மருத்துவ வசதிகள் ..........................34

4.1 காணி மற்றும் விவசாயம் ..........................43

5.1 மகளிர் மேம்பாடு ..........................51

5.2 வாழ்வாதாரம் மற்றும் மேம்பாடு ..........................58

5.3 ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் வாகனங்கள் ..........................60

6.1 ஆவணம் ..........................64

7.1 முதியவர் மாற்றுத் திறனாளிகள் கணவரால்
கைவிடப்பட்டோர், விதவைகள், ஆதரவற்றோர்கள் 64

8.1 பொது வினாக்கள் ..........................90

9. இலங்கை சனநாயகச் சோலிசக் குடியரசின்
அரசியலமைப்பு அத்தியாயம் III
அடிப்படை உரிமைகள் ..........................94

10 சொற்களஞ்சியம் ..........................107

# º¡Â¬ó

தாயகச் சூழலில் நடந்த போர் பேரழிவின் விளைவாக நாட்டை விட்டு வெளியேறி 1983ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை தமிழக முகாம்களில் தஞ்சமடைந்து வாழ்ந்து வரும் தாயக தமிழ் மக்கள் மனதில் 2009ம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் தம் தாயகத்திற்குத் திரும்பிட வேண்டுமென்ற எண்ணம் முகிழ்ந்தது. இதனடிப்படையில் சொந்தமாகவோ அல்லது **UNHCR** உதவிகளுடனோ சிறிது சிறிதாக தாயகம் திரும்பி வருகின்றனர். அதே வேளை எம்மக்கள் மனதில் தாயகம் திரும்பிட வேண்டும் என்ற எண்ணம் மேலிடும் போதெல்லாம், அங்கும் இங்கும் எதிர் கொள்ள கூடிய பிரச்சினைகள், தடைகள், நிதர்சனமான நிலைமைகள் தொடர்பாக போதிய தெளிவின்மை மற்றும் தாயகம் தொடர்பாக கிடைக்கும் மாறுபட்ட தகவல்கள் போன்ற பல்வேறு அம்சங்கள், அவர்கள் மனதில் தெளிவான முடிவெடுப்பதற்கு தடைக்கற்களாக அமைந்திருந்தன.

இந்நிலைமையை மாற்றிட முயற்சி மேற்கொண்ட கழகம், அம்மக்களை முகாம் மட்டத்தில், மாவட்ட மட்டத்தில், மண்டல மட்டத்தில் குழுக்களாகக் கட்டமைத்து அவர்கள் மனதில் எழுகின்ற கேள்விகளை குழுநிலை வெளிப்படுத்தல்கள் மூலம் வெளிக்கொணர்ந்து, அவை அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கேள்விக்கொத்தாக தயார் செய்தது. இதன்மூலம் அவர்களிடமிருந்து ஏறத்தாழ 600 வினாக்கள் பெறப்பட்டன. பின்னர் அவை மறுசீராக்கம், ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு ஏறத்தாழ 220 வினாக்களாகத் தொகுத்து எடுக்கப்பட்டது. பின்னர் 12 தலைப்புக்களின் கீழ்த் தொகுதிகளாக பிரிக்கப்பட்டது.

இவ்வினாத் தொகுதிகளுக்குரிய பகுதிகளை இலங்கையில் களப்பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர்களை ஒருங்கிணைத்து பயிலரங்கொன்று நடத்தப்பட்டது. இதன் பின்னர் 12 தொகுதி வினாக்களும் ஏதாவது ஒரு குழுவினர் குறிப்பிட்ட வினா தொகுதி வினாக்களை வாசிக்க, ஏனைய குழுவில் உள்ளோர் அதற்கான பதில்களை வழங்கிட கேட்டுக் கொள்ளப்பட்டனர். குழுவில் உள்ளவர்களும் மாறி மாறி தமக்கு தெரிந்த பதில்களை

வழங்கினர். ஒரு சில கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கு சிரமப்பட்டதையும் காணமுடிந்தது. இந்நிகழ்வு மூலம் இத்தொண்டர் குழுவானது இக்கேள்விகளுக்குரிய பதில்களை தயாரிக்கும் செயல்பாட்டுக்குத் தகுதியுள்ள குழு என கண்டறிப்பட்டது. எனினும் மேலதிக தகவல் வளங்கள் தேவையெனவும் உணரப்பட்டது. மேலும் இவ்வினாக்களுக்குரிய பதில்கள் துல்லியமானதாகவும், நம்பகத்தன்மையுடையதாகவும் அமைய வேண்டும் என்ற எமது உள்ளத்து உந்துதலும் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஒவ்வொரு தொகுதி வினா தலைப்புக்களுக்கும் விடை எழுதுவதற்கு, தகுதியான குழுவினரை அவர்களது இத்தலைப்புக்களின் கீழ்க் களப்பணி ஆற்றிய அனுபவம் மற்றும் சொந்த அனுபவங்கள் போன்றவற்றின் அடிப்படையில் 12 தலைப்புக்களுக்கும் பொருத்தமான, தகுதியான 12 குழுக்கள் தயார் செய்யப்பட்டன. இவர்களின் அனுபவங்களை தகுதியினை ஆய்வு செய்யும் முகமாக, ஒவ்வொரு குழுவினருக்கும் தங்கள் களப்பணி அனுபவம் மற்றும் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் 3 நிகழாய்வுச் செய்திகளை வெளிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவ்வாறே குழுக்களும் செயல்பட்டன. இதன் மூலம் தத்தம் கேள்விகளுக்குரிய பதில்களை எழுதுவதற்கு ஒவ்வொரு குழுவும் தகுதி வாய்ந்தன என்பதும் உறுதி செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில் ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப்பட்ட வினாத் தொகுதியின் வினாக்களுக்கு தமது அனுபவம் மற்றும் தொடர்புகளின் அடிப்படையில் பதில் எழுத முற்பட்டனர். மேலதிக உதவி அல்லது வளம் தேவையென உணரப்பட்ட வினாக்களுக்கு அங்குள்ள அதிகாரிகள், அமைச்சக பொறுப்பிலுள்ளவர்கள், துறைசார் நிபுணர்கள், பல்வேறுதுறைகளில் கடைமையாற்றி ஒய்வு பெற்றவர்கள் எனப் பலரின் உதவியுடன் இதற்கான பதில்கள் தெள்ளத்தெளிவாகப் பெறப்பட்டன. இந்நிகழ்வுகளை பேராசிரியர் கிளாட்சன் சேவியர் அவர்களும், அவருக்கு உதவியாக திரு. இரவீந்திரராஜா அவர்களும் ஒருங்கிணைத்தனர்.

இவ்வினாக் கொத்து அதற்கான விடைகள்

அனைத்தையும் ஒருங்கிணைத்து "பூத்தெழும் புதுவாழ்வு" என்ற கையேடு நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூால் தாயகம் திரும்பிட வேண்டும் என்று எண்ணும் ஒவ்வொரு தாயக தமிழருக்கும், சுயமாகவே ஒவ்வொரு விடயத்தையும் சீர்தூாக்கிப் பார்த்து தெளிவான முடிவுகளை எடுப்பதற்கு கலங்கரை விளக்கமாக விளங்கிடும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

**இலங்கை இந்திய நூல் உருவாக்கக் குழு**

## 1.1.ð£¶è£Š¹

## º ¡ Â¬ó

பாதுகாப்பு என்பது தனி மனிதப் பாதுகாப்பு, குடும்ப-சமூகப் பாதுகாப்பு, அரசியல்ப் பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு, கலாச்சாரப் பாதுகாப்பு, நாட்டினது பாதுகாப்பு, சர்வதேசரீதியான பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியதாகும். இந்தியாவிலிருந்து நாடு திரும்பவுள்ள எமது மக்களின் மனங்களில் பாதுகாப்பு தொடர்பாக தோன்றியுள்ள வினாக்களுக்கான நடைமுறையிலுள்ள, உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடைகளை, கேள்விகளின் அடிப்படையில் உங்களுக்குத் தொகுத்து வழங்கியுள்ளோம். மேலும் பாதுகாப்பு தொடர்பான சந்தேகங்கள் மற்றும் அவை தொடர்பான தெளிவுத்தன்மையினைப் பெற, இவை தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய இணையதள முகவரியினை இத்துடன் இணைத்துள்ளோம். **www.defence.lk**

### 1.1.1போர் முடிந்த சூழ்நிலையில் ராணுவச் செயற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன?

பொது மக்களோடு மக்களாக வேலை செய்கின்றார்கள். இராணுவம் மற்றும் காவல்துறை சேவையில்; (சில பகுதிகளில்) தமிழ் இளைஞர், யுவதிகள் உள்வாங்கப்பட்டு தமிழ்ப்பகுதிகளில் இராணுவத்தின் உற்பத்தி நிலையத்தில் வேலை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ததன் மூலம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இராணுவத்தினர் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தங்களுக்குள் பணம் (அல்லது) பொருள் சேர்த்து அருகிலுள்ள நலிவடைந்தவர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல், மருத்துவ சேவைகள் போன்றவைகளை செய்வதுடன், சில இடங்களில் அவர்களால் வாழ்வாதார உதவிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

இராணுவத்தினர் தங்கள் சுயவாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள தோட்டச் செய்கை, மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல், செங்கல் தயாரித்தல் போன்றவைகளை செய்கின்றனர்.

தங்களின் பகுதிகள் அதாவது அவர்களின் முகாம் இருக்கும் பகுதிக்குள் பாடசாலை, கோயில் போன்ற பொது இடங்களில் தேவைக்கேற்ப தங்களின் சேவைகளைச் செய்கின்றனர் (சிரமதானம், தண்ணீர் வழங்கல்)

**குறிப்பு:**

இத்தகைய மாற்றங்களுக்குகிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக இராணுவ அத்து மீறல்கள் இடம் பெறுவதையும் அவதானிக்க முடிகிறது. எனினும் இதற்கான தங்கள் அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்தக்கூடிய ஜனநாயகச் சூழலும் வாய்ப்புக்களும் தற்சமயம் அங்கு உள்ளன.

### 1.1.2 தாய் நாட்டிற்குச் சென்றால் இரண்டாந்தர பிரஜைகளாக எங்களை பார்க்கும் நிலை உருவாக எந்தளவு சாத்தியக்கூறு உள்ளது.

தற்பேதைய நிலையில் தாய் நாட்டிற்கு திரும்பினால் இரண்டாம் தர பிரஜையாகப் பார்க்கும் நிலை இல்லை. ஆனால் அவர்கள் இயக்கத்தில் இருந்து பாரிய குற்றங்கள் செய்து வெளியேறியிருந்தால் மீண்டும் வரும்போது புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

### 1.1.3 காணாமல் போனவர்களின் நிலைமை தொடர்பாக ஏதேனும் நம்பகத் தன்மையான செயற்பாடுகள் உள்ளதா?

காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான விசாரணைக்குழு அரசால் அமைக்கப்பட்டு, அவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இச்செயல்பாட்டுக்கு சர்வதேச அழுத்தமும், ஐ.நா. மனிதவுரிமை ஆணையத்தின் தொடர் செயல்பாடுகளும் காரணமாக உள்ளது.

### 1.1.4 போராளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஏதேனும் திட்டங்கள் நடைமுறையில் இருந்தால் குறிப்பிடவும்.?

பெரும்பாலான போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, பல்வேறு வாழ்வாதாரப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, சமூக நீரோட்டத்தில் வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் பொது

மன்னிப்பு வழங்கப்படவில்லை. மேலும், அரசு மற்றும் தனியார் வங்கிகள் மூலம் வாழ்வாதாரக் கடன் திட்டங்கள் வழங்கப்படுகிறது. தொழிலை மேற்கொள்ள சுழற்சி முறைக்கடன் உதவிகள் மற்றும் அரசாங்கத்தின் ஊடாக மாதம் 3000 உதவு தொகையும் வழங்கப்படுகிறது. இத்துடன் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஊடாக நிதி மற்றும் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படுகின்றன.

### 1.1.5 இயக்கங்களில் இருந்து தற்போது பொதுவாழ்விற்கு திரும்பியுள்ளவர்கள் நாட்டிற்குச் சென்றால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் என்ன?

இயக்கத்தில் இருந்து வெளியில் வந்த பின் வெளிநாடுகளுக்குச் சென்று, தற்போது எவ்வித பிரச்சனையும் இல்லாமல் வாழ்கின்றனர். அதேபோல் இலங்கையில் சிறப்பு முகாம்களில் இருந்தவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு எவ்வித பிரச்சனைகளும் இல்லாமல் வாழ்கின்றனர். ஆனால் இவர்களில் இயக்கத்தில் இருந்த போது பாரிய குற்றங்கள் செய்து வெளியேறியவர்கள் மீண்டும் தாயகம் வரும் போது, அவர்கள் உளவுத்துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

### 1.1.6 போராளிகளாக இருந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களை இப்போதும் இராணுவத்தார் விசாரணைக்கு அழைத்துச் சென்று துன்புறுத்துவதாக கூறுகின்றனர்? உண்மை நிலவரம் என்ன?

குடும்ப உறுப்பினர்களை துன்புறுத்துவது இல்லை. ஆனால் குடும்ப உறுப்பினர்கள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அடிப்படையில் அதற்கேற்ப விசாரணைகள் நடைபெறுகின்றன.

### 1.1.7 பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் குறைக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

- சோதனைச்சாவடிகள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்திற்கு இடையூறு இல்லை (சோதனைகள் இல்லை)
- வீடுவீடாக சோதனைகள் செய்வது இல்லை.

• சுற்றிவளைப்பு இல்லை.

• படையினர் மக்களோடு இணைந்து பல்வேறு சமூகவேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். மக்களிடையே அச்சுறுத்தல்களை போக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஏற்கெனவே புனர்வாழ்வு பெற்ற சிலர், அரசு அலுவலகங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். மற்றும் சிலர் கூட்டுறவுக் கல்வி நிலையத்தில் **(Office Cooperative Education Department)** இணைந்துள்ளனர்.

### 1.1.8 பயணம் செய்யும் போது தமிழ்ப்பகுதிகளில் எங்கெல்லாம் சோதனைச்சாவடிகள் அமைத்து மக்களை சோதனைக்கு உட்படுத்துகிறார்கள்?

இன்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்பாக இவை இருந்தன. இப்போது எந்த சோதனைச்சாவடிகளிலும் எவ்விதசோதனைகளும் நடத்தப்படுவதில்லை.

### 1.1.9 இலங்கையில் மீண்டும் போர் நடக்க வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது என்று எனது நண்பர் கூறுகிறார். இதில் தங்களது கருத்து என்ன?

மீண்டும் போர் நடக்க வாய்ப்புகள் இல்லை. மக்கள் தங்களது இடங்களில் குடியேறி வீடமைத்து சாதாரண வாழ்க்கை முறைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். மீள்குடியேறிய மக்களுக்கான அடிப்படை வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அரசு சலுகைகள், சகலருக்கும் சம அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது, பாகுபாடுகள் குறைக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான அடிப்படை வசதிகள், உரிமைகள் கிடைக்கும் போது போராடி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படாது. எனவே அவர்கள் யுத்தம் பற்றி சிந்திக்க வாய்ப்புகள் இல்லை.

பல தசாப்தகாலமாக உடமைகள், உறவுகள், சொத்துக்களை இழந்து நிற்கதியான மக்கள், மென்மேலும் இழப்புகளை எதிர்கொள்ள நினைக்க மாட்டார்கள். போர் ஏற்பட காரணமான சூழ்நிலைகள் தற்போது இங்கு காணப்படவில்லை.

### 1.1.10 நாட்டின் எந்தப் பகுதிக்கும் தமிழர்கள் சென்று வரக்கூடியவகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா?

நாட்டில் எந்த பகுதிக்கும் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் உள்ளன. எந்த நேரத்திலும் பாதுகாப்பான நிலையில் சென்றுவரக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

### 1.1.11 உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணிகள் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா?

உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணிகள் பகுதி பகுதியாக திரும்ப வழங்கப்பட்டு வருகின்றது.

**உதாரணமாக:**

கீரிமலைப் பிரதேசம் வளலாய்; குரும்பசிட்டி போன்ற இடங்களில் திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

### 1.1.12 உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள காணிகள் எவ்வளவு திருப்பி வழங்கப்பட்டுள்ளன?

1100 ஏக்கர் வடபகுதியில் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. முடிந்த அளவு மிக குறுகிய காலப்பகுதிக்குள் அனைத்துப் பகுதிகளிலும் காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதியினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

### 1.1.13 பிரச்சனை காலங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ள இடங்களை குறிப்பிடுக?

- ஓமந்தை
- குருக்கல் புதுக்குளம்
- கீரிமலை
- ஆனையிறவு
- காங்கேசன்துறை
- இரனைமடு
- பளை

### 1.1.14. தமிழ்ப்பிரதேசங்களில் இருந்து இராணுவம் இன்னும் முழுமையாக அகற்றப்படவில்லையா?

இல்லை. படிப்படியாக அகற்றப்பட்டு வருகின்றது. சிறிய காவல் அரண்கள் அகற்றப்பட்டுள்ளன. மக்கள் சென்று வாழும் இடங்களில் பெரும்பாலும் அகற்றப்பட்டுள்ளது. பிரதானமான இடங்களைத் தவிர மற்றைய இடங்கள் ஏற்கனவே அகற்றப்பட்டு மக்களின் பாவனைக்கு உகந்த வகையில் உள்ளது.

### 1.1.15 தமிழ்ப்பகுதிகளில் சிங்களவர்களை அரசு அதிகாரிகளாக நியமிக்கும் நிலை தொடர்கிறதா?

தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்கள் அரசு அதிகாரிகளாக பணிபுரிந்து வந்த போதும், தற்போது அந்நிலைமை படிப்படியாகக் குறைந்துள்ளது. சில அலுவலகங்களில் குறிப்பிட்டு கூறக்கூடிய அதிகாரிகள் மட்டுமே சிங்களவர்களாக உள்ளனர்.

பெரும்பாலும் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் அதிகாரிகள் தான் சாதாரண அதிகாரிகள் முதல் உயர் அதிகாரிகள் வரை காணப்படுகின்றனர். சிங்களவர்கள் தமிழ்ப் பகுதிகளில் நியமிக்கப்படுவது மிகவும் குறைவு. தற்போது தமிழ் அதிகாரிகள் சிங்களம் படித்திருக்க வேண்டும், சிங்கள அதிகாரிகள் தமிழ்மொழி படித்திருக்க வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### 1.1.16 தமிழ்-சிங்கள குடியேற்ற பகுதியில் தமிழர் சிங்களவரிடையே உறவு நிலை சுமூகமாக உள்ளதா?

தமிழ், சிங்கள மக்களிடையே நல்ல உறவு நிலை உள்ளது. தமிழ், சிங்கள மக்களிடையே கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் முறையும் சில இடங்களில் உள்ளது.

### 1.1.17. தமிழ்ப் பகுதிகளில் இரவில் எந்நேரம் வரை கடைகள் திறந்துள்ளன? மக்கள் பயமின்றி நடமாடும் நிலை உள்ளதா?

நகரங்களில் உள்ள கடைகள் இரவு 10 மணிக்கு மூடப்பபடும். கிராமங்களில் உள்ள கடைகள் இரவு 8 மணிக்கு மூடப்படும். பஸ்நிலையம் அருகில் உள்ள கடைகள் விடியும்வரை மூடப்படுவது இல்லை. தற்பொழுது தமிழர் பகுதிகளில் மட்டுமில்லாமல் எல்லா பகுதிகளிலும் பயமில்லாமல் நடமாடக்கூடிய சாத்தியக்கூறு உண்டு.

### 1.1.18 பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்களை குறைக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இராணுவத்தின் பொறுப்பில் இருந்த பாதுகாப்பு நடைமுறைகள் தற்போது காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சகல மக்களுக்கும் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் அச்சமின்றி சென்று வரகூடிய சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளது.

கிராமமட்டத்தில் உள்ள சிவில் பாதுகாப்புகுழுக்களில் பொலிஸ் அதிகாரிகள் உள்வாங்கப்பட்டுள்ளனர். மாதத்தில் ஒரு தடவை சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் நடைபெறும். இதில் கிராமசேவையாளர் தலைவராக செயல்படுவார். நெடுங்காலமாக பாதுகாப்பு தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வந்த தனியார் வீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அது தவிர மற்ற வீடுகளுக்கான வாடகையும் வழங்கப்பட்டுவருகின்றது.

### 1.1.19 தமிழர்களின் நடவடிக்கைகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறது என்பதில் ஏதேனும் உண்மைத்தன்மை உள்ளதா?

பொதுவாக தமிழரின் நடவடிக்கைகள் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படவில்லை.

### 1.1.20 நாடு திரும்பும் மக்களுக்கு இலங்கை அரசு எவ்வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும்?

உள்நாட்டில் உள்ள மக்களுக்கான பாதுகாப்பு சட்டதிட்டங்களின் அடிப்படையிலேயே உள்வாங்கப்படுகின்றனர். சிறப்பு திட்டங்கள் எதுவும் விசேடமாக இல்லை.

### 1.1.21 தமிழகத்திலுள்ள மக்கள் நாடு திரும்புவதை அங்குள்ள மக்கள் விரும்புகிறார்களா? எதிர்க்கிறார்களா?

தமிழகத்திலுள்ள மக்கள் நாடு திரும்புவதை இலங்கையில் உள்ள மக்கள் விரும்புகின்றார்கள். எதிர்ப்புகள் இல்லை. தங்களது குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொள்ளும் மனநிலை மக்களிடையே உள்ளது.

## 1.22 இலங்கைச் சிறையில் உள்ள கைதிகள் விடுதலை செய்யப்படுவார்களா? அவர்களது குற்றங்கள் மன்னிக்கப்பட்டு புதுவாழ்வுக்கு அனுமதிக்கப்படுவார்களா?

உரிய வழக்கு விசாரணைக்குப் பிறகு படிப்படியாக விடுதலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் குற்றங்களுக்கு ஏற்ப அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். சிறைகளில் உள்ளவர்களில் அதிகமானவர்கள் நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை பெற்றுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்களுக்கான சமூக மீளிணைப்பு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைக்குப் பின்னர் வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கான உதவிகள், மற்றும் விடுதலை செய்யப் பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு மூலம் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கு கைத்தொழில் பயிற்சி வழங்கி தமக்கான தொழிலை பெற்றுக் கொள்ள உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 1.1.23 இராணுவத்தால் காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதா?

காணாமல் போனவர்களுக்கான ஆணைக்குழு அமைத்து அதனூடாக காணாமல் போனவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கை களை இலங்கை அரசு மேற்கொள்கிறது. இக்குழுவின் தேடல் நடவடிக்கைகளின் போது, காணாமல் போனவர்களின் குடும்பங்களை விசாரணைக்குட்படுத்தும் போது அவர்களின் மொழிப் பிரச்சனைக்கு உரியமுறையில் தீர்வு காண தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தெரிந்தவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

## 1.1.24 காணாமல் போனவர்கள் நிலைமை தொடர்பாக ஏதேனும் நம்பகத்தன்மையான செயற்பாடுகள் உள்ளதா?

காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான விசாரணைக்குழு அரசால் அமைக்கப்பட்டு, விபரங்கள் சேகரிக்கப்பட்டு, விசாரணைகள் நடைபெற்று வருகிறது. மேலும் சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு திணைக்களத்தினூடாக குடும்பங்களை தேடுதலும் மீளிணைத்தலும் என்ற அலகினூடாக யுத்தத்தின் போது

காணாமல் போனோரை கண்டறிந்து அவர்களை குடும்பங்களுடன் இணைக்கும் பணியையும் நடைபெற்று வருகின்றது.

## 1.1.25 கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளை மக்களுக்கு தெரியப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

அரச வர்த்தமானி **(Government Gazette)** மூலமும், அரசு உத்தியோகஸ்தர்களான **DS, GS,** பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஊடாக மக்களுக்குத் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்ட தங்களது நிலங்களை இனம் காணுவதற்குள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய நிலைமையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் 90% கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

## 1.1.26. சிறுவர் துஸ்பிரயோகத்தைத் தடுக்கவும், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கவும் அரசின் நடவடிக்கை என்ன?

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பெண் காவலர்கள், சிறுவர் பிரிவு, மாவட்ட சிறுவர் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் போன்றோர்களால் கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் தோறும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துதல், துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல், மேலும் சிறுவர் பெண்கள் அமைப்பின் மூலமாக தற்போது துஸ்பிரயோகத் தடுப்புக்குழு ஒன்று அமைப்பது தொடர்பான கலந்துரையாடலும் நடைபெற்று வருகிறது.

குழந்தைகளை (17 வயதிற்குற்பட்ட சிறுவர்களை) வேலைக்கு அமர்த்தும் கடை உரிமையாளருக்கு தொழில் திணைக்களச் சட்டத்தின்படி 7 முதல் 10 வருட சிறைத்தண்டனை வழங்கும் நடவடிக்கை தற்போது உள்ளது. இதனை மாவட்ட தொழில் திணைக்களம், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய திணைக்களங்கள் தொடர்கண்காணிப்பு செய்து வருகின்றன. இதன் மூலம் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கலாம். அவசர நடவடிக்கைக்கு 1929 என்ற எண்ணுக்குத் தொடர்பினை ஏற்படுத்தி துரிதமான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும.

# è™M, Þ¬÷ë˜ ïô‹ ñŸÁ‹ «õ¬ô õ£ŒŠ¹, èœ

## 2.1.è™M

### 2.1.1. இந்தியாவில் வழங்கப்பட்ட கல்விச் சான்றுகள் அதே தராதரத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா? அவ்வாறெனில் அங்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நடைமுறைகள் தொடர்பாக விளக்கம் தருக?

இந்தியாவில் வழங்கப்பட்ட கல்விச் சான்றிதழ்கள் அதே தரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். நடைமுறைகள்:

• கோரிக்கை கடிதம் (சமவலு சான்று கோரி எந்தப் பல்கலைக் கழகத்தில், எந்த கல்வி ஆண்டில் கற்றது என்ற விபரம் சமர்ப்பித்தல்) (இணைப்புப் பார்க்க)

1. மதிப்பெண் சான்றின் மூலப் பிரதி (நகல் படிவம்)

2. மதிப்பெண் சான்றிதழின் நகலை சமாதான நீதவான் **(JP)** உண்மை நகல் என உறுதிப்படுத்தல் வேண்டும்.

**10th = O/L** (சமவலுச் சான்று)

**+2 = A/L** (சமவலுச் சான்று)

**°PŠ¹:**

பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்கள் இலங்கையில் சமவலுச் சான்று பெற எந்தவொரு பட்டப்படிப்புக்கும் ரூபாய் 2500 செலுத்தினால் போதுமானது. பட்டயப் படிப்பை பொறுத்தவரை எடுத்த பாட நெறிகளுக்கு ஏற்ப கட்டணங்கள் மாறுபடுகின்றன. இதன் தொகைகளும் அதிகமாகவே உள்ளது.

குறிப்பு: இவ்விடயம் தொடர்பாக அகதிகளை பொறுத்தவரை இத்தொகையை செலுத்துவது கடினம் என்பதால் இத்தொகையை நீக்கிட கழகம் அரசு மட்டத்தில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

கிராம சேவையாளர் வதிவிடச் சான்று (இணைப்பு சான்று) மருத்துவ, சட்டத் துறைகளுக்கு நுழைவுத்தேர்வுகள் எழுதிடல்

வேண்டும். இதற்கான மேலதிக விபரங்களை இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்தினைத் தொடர்பு கொண்டு பெற்றிடலாம்.

### 2.1.2. இலங்கையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகள் என்ன?

1. இலவசக் கல்வி திட்டம்.
2. இலவசச் சீருடை.
3. இலவசப் பாடநூல்.
4. சீசன் பஸ் பயணச்சீட்டு.
5. திறனாய்வுத் தேர்வில் சித்தி அடைந்தால் கல்வி உதவி

6. ஊட்டம் குறைந்த மாணவர்களுக்கு மதிய உணவு (9ம் வகுப்பு வரை) இவையனைத்தும் சலுகைகளாக வழங்கப்படுகிறது.

**° PŠ1:**

கல்வியின் முக்கியத்துவம் தொடர்பான பெற்றோர் களுக்கான விழிப்புணர்வுகள் மற்றும் கருத்தமர்வு.

### 2.1.3. இந்தியாவில் இளங்கலை பட்டப் படிப்பை நிறைவு செய்த மாணவர்கள் இலங்கையில் முதுநிலை படிப்பை தொடர்வதற்கு என்ன வழிவகை உள்ளது?

தொடர வாய்ப்புகள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் என **UGC** ஆல் உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் சமவலுச் சான்றிதழ் பெற வேண்டும். பின்னர் அதனூடாக எந்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கின்றோமோ அவர்களின் பதிவிற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதனூடாக நீங்கள் உங்கள் முதுகலைப் படிப்பை தொடரலாம்.

தேவையான ஆவணங்கள்:

- சமவலுச் சான்றிதழ்
- **UGC** உறுதிப்படுத்தல்.

### 2.1.4. இலங்கையில் உள்ள அரசு தேர்வுகள் என்ன? எந்தெந்த மாதத்தில் நடைபெறும்? தனியாக தேர்வு எழுத என்ன செய்ய வேண்டும்?

- 5ம் ஆண்டு புலமைப்பரிசில் (ஆகஸ்ட் மாதம்)
- **O/L (GCE O/L)** (டிசம்பர் மாதம்)
- **A/L (GCE A/L** (ஆகஸ்ட் மாதம்)

அதே மாதங்களில் **O/L & A/L** தேர்வுகளைத் தனியாகவும் எழுதலாம். ஆனால் **O/L** இல்லாமல் **A/L** தேர்வு/பரீட்சை எழுத முடியாது.

### 2.1.5. 9ஆம் ஆண்டு முடிந்து 2 வருடங்கள் படிக்காமல் இருந்து விட்டு திரும்ப இந்த பிள்ளை 10ம் ஆண்டு படிக்க முடியுமா?

முடியும். தனியார் கல்வி நிலையங்களில் படிக்கலாம்.

### 2.1.6. இலங்கையில் எங்கு மருத்துவக் கல்லூரிகள் உள்ளது? அதில் நாடு திரும்பியவர்கள் சேர்ந்து படிக்க வாய்ப்புள்ளதா?

| **இலங்கையில் மருத்துவக் கல்லூரி மாவட்டங்கள்** | | |
|---|---|---|
| **மாவட்டம்** | **பல்கலைக்கழகம்** | **அமைவிடம்** |
| கண்டி | பேராதெனிய | பேராதெனிய |
| கொழும்பு | ஸ்ரீ ஜயவர்த்தனபுர | கங்கொடவில (நுகேகொடை) |
| கொழும்பு | கொழும்பு | பொரள்ள |
| கொழும்பு | களனி | ராகம |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
| காலி | றுகுணு | கராப்பிட்டிய |
| மட்டக்களப்பு | கிழக்கு | மட்டக்களப்பு |
| அனுராதபுரம் | ரஜரட்ட | மிகிந்தலை |

- **மட்டக்களப்பு - சித்த வைத்திய சாலை**

இங்கு 12ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தவர்கள் அங்கு நேரடியாக மருத்துவ கல்லூரிகளுக்கு சேர முடியாது. அங்கு கல்வியை தொடர வேண்டுமெனில் இந்தியாவில் 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மதிப்பெண் பட்டியலை காண்பித்து சமவலுச்சான்று பெற்று பின்னர் கா.பொ.தா. உயர்தர வகுப்பில் சேர்ந்து அதனூடாக பல்கலைகழகத்திற்கு விண்ணப்பித்து மாவட்ட அளவில் வெட்டுப்புள்ளி உயர்தர பெறுபேறு பெற்றவராக இருப்பின் அத்தகுதி அடிப்படையில் மருத்துவ படிப்பினை மேற்கொள்ளலாம்.

### 2.1.7. இந்தியாவில் இருப்பது போன்று சிறார்களுக்கான பாலர்பள்ளிகள் பள்ளிகள் இயங்குகின்றனவா?

நாற்றங்கால் பள்ளிகள் (மழலையர் பள்ளிகள்) உள்ளன. இதில் 3 வயது முதல் சேர்த்துக் கொள்வார்கள். இப்பள்ளிகளில் சத்துணவு பால் போன்றவை வழங்கப்படுகிறது.

### 2.1.8. விமானம் தொடர்பான பட்டப்படிப்பு அங்கு இருக்குமாயின் எந்த எந்தப் பல்கலைக்கழகத்தில் பயிற்றப்படுகிறது?

விமானம் தொடர்பான பட்டப்படிப்பு கொழும்பில் உள்ளது.

### 2.1.9. பல்கலைக்கழக மாணவர்கள் பட்டப்படிப்பிற்கு எவ்வாறு தெரிவு செய்யப் படுகிறார்கள்? அதற்கான நடைமுறைகள் என்ன?

இலங்கையில் உயர்தர **A\L** தேர்வில் சித்தி பெற்ற துறைசார் பகுதிகளில் (கலை, விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) மாவட்ட ரீதியாக வெட்டுப்புள்ளி **(Z-Score)** ஊடாக முன்னுரிமை அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தேர்வு செய்யப்படுவர்கள்.

பல்கலைக்கழகம் செல்ல முடியாதவர்கள் கல்வியற் கல்லூரியில் மாவட்ட அளவிலான மதிப்பெண்களின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவார்கள். வெட்டுப்புள்ளிகள் குறையும் பட்சத்தில் விளையாட்டு, தனித்திறமைகள் மற்றும் சமூக ஈடுபாடு அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு அவர்கள் கல்வியற் கல்லூரிக்கு அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு:**

ஒரு முறை பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பை தவறவிட்டவர்களுக்கு மீளவும் இரு முறை வாய்ப்பு வழங்கப்படும்.

2.1.10. இந்தியாவில் 12ம் வகுப்பில் சித்தி அடைந்தவர்கள் நாடு திரும்பும் பட்சத்தில் அங்கு சென்று இந்தியாவில் உள்ள பாடப்பிரிவுகளுக்கு ஏற்றால் போல் எவ்வாறான பட்டயப், பட்ட, **(Diploma, Degree)** படிப்புகளில் சேர வாய்ப்பு உள்ளதா?

12ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்து நாடு திரும்புபவர்கள் மருத்துவம், பொறியியல், விவசாயம், சட்டம் போன்ற துறைகளில் கல்வி பயில்வதாக இருப்பின் 10ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழை சமவலுசான்று பெற்று க.பொ.த உயர்தர தேர்வு **(A/L)** எழுதி மேல் காணும் துறைகளில் இணைந்து கல்வியைத் தொடர முடியும்.

**2.1.11. தமிழ் நாட்டில் பொறியியல் பட்டயப் படிப்பை நிறைவு செய்தவர்கள் இலங்கையில் உள்ள பொறியியல் பட்டப்படிப்பை தொடர்வதற்கு என்ன செய்ய வேண்டும்?**

இந்தியாவில் பொறியியல் பட்டயப் படிப்பை நிறைவு செய்து நாடு திரும்பினால் இங்கு சமவலு சான்று பெற்று (பாடவாரியாக) தொடர்ந்து மேற் படிப்பினைத் தொடரலாம்.

**2.1.12. ஆங்கிலக் கல்வி மற்றும் மெட்ரிக்குலேசன் போன்ற பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் நாடு திரும்பும் பட்சத்தில் அங்கு பயிலுவதற்கு அதே முறையிலான பாடத்திட்டத்தைத் தொடர முடியுமா?**

ஆங்கிலக் கல்வி மற்றும் மெட்ரிக்குலேசன் போன்ற பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் நாடு திரும்பும் பட்சத்தில் இங்கு அதே பாடத்திட்டங்களை தொடர முடியாது. ஆனால் இங்கு சில பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடங்களை மாத்திரம் ஆங்கில மொழியில் கற்கலாம்.

### 2.1.13. உயர்கல்வி மாணவர்கள் தொடர்ந்து இந்தியாவிற்கு வந்து படித்துவிட்டு செல்வதற்கு வாய்ப்புகள் உண்டா?

படிப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இலங்கையில் பெற்ற உயர் கல்விச் சான்றிதழை அங்குள்ள கல்லூரிகளில் கொடுத்து பாடத்திற்கு ஏற்ற மேற்படிப்பினைத் தொடரலாம்.

### 2.1.14. கிராமங்களில் அறிவு சார்ந்த புத்தகங்களுடன் கூடிய நூலகங்கள் அமைக்க அரசு எடுத்த முயற்சிகள் என்ன?

1. வெளியீட்டு நிறுவனங்களை இணைத்தல்.

2. பொது நூலகங்கள். (குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் உள்ளது)

3. ஊரில் உள்ள சங்கங்களான மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

### 2.1.15. சில தேவைகளுக்காக கொழும்பில் உள்ள அரச அலுவலகங்களுக்குச் செல்கிறோம். அங்கு சிங்கள மொழி மூலம் அரச கருமங்கள் நடைபெறும். எங்களுக்கு சிங்கள மொழி தெரியாது. எப்படி எங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது?

அனைத்து அரச மட்டங்களிலும் உள்ள ஊழியர்கள் இரண்டு மொழிகளிலும் எழுத, உரையாட தெரிந்திருக்க வேண்டும் என்ற அரச ஆணை உள்ளது. அது நடைமுறையிலும் உள்ளது. எந்த இடையூறும் இன்றி எமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளலாம். இலங்கை அரசியல் யாப்புச் சட்ட திருத்தத்தின் கீழ், அனைத்து அரசு அலுவலகங்களிலும் இரு மொழிச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. எனவே எல்லா அலுவலகங்களிலும் இரு மொழி தெரிந்தவர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களை அணுகி உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

### 2.1.16 .இலங்கை கிராமங்களில் மாணவர் தொகைக்கேற்ப பள்ளிக்கூடங்களை அமைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

இலங்கையில் உள்ள அனைத்து அரசு பாடசாலைகளிலும் இலவச கல்வி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் ஒவ்வொரு 5கிலோ மீட்டர் தூர இடைவெளியில் அரசு ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு 7 கிலோ மீட்டர் இடைவெளியில் அரசு உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 2.1.17. இந்தியாவில் பள்ளிக்கல்வியை பயின்று இடைநிறுத்திய மாணவர்கள் நாடு திரும்பி தங்கள் கல்வியை அதே வகுப்பில் தொடரலாமா?

இலங்கையில் தை மாதம் பள்ளிகள் தொடங்கி மார்கழி மாதம் தேர்வுகள் முடிவடைந்து விடுமுறை விடப்படும். இந்தியாவில் ஆனி மாதம் பள்ளி தொடங்கி சித்திரை மாதத்தில் முடிவடையும். காலமாற்றம் தொடர்பாக அதே வகுப்பில் இலங்கையில் கல்வியைத் தொடர வாய்ப்புகள் உள்ளன. இடைநிறுத்திய மாணவர்கள் கல்வியைத் தொடரலாம். இலங்கையில் சில பள்ளிகளில் தகுதித் தேர்வு எழுத வேண்டும்.

### 2.1.18. தமிழ் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் சிங்கள பாடத்தைக் கட்டாயப்படுத்தி படிக்கும் நிலை உள்ளதா?

இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களப் பாடம் உள்ளது. ஆனால் சிங்களப் பாடம் கட்டாயம் இல்லை.

### 2.1.19. இலங்கையில் உள்ள அரசு பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இலங்கையில் உள்ள அரசு பாடசாலைகளில் தரம் 1 முதல் **10 (O/L)** வரையில் ஆங்கிலக் கல்வியை கற்க முடியும். மேலும் குறிப்பிட்ட சில தேசிய பாடசாலைகளில் தரம் 01 முதல் **A/L** வரையிலும் ஆங்கில வழிக் கல்வியை கற்க முடியும். மற்றும் இலங்கையில் உள்ள அனைத்து தேசிய பாடசாலைகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் கற்கும் நடைமுறை உள்ளது.

கொழும்பு போன்ற வளர்ச்சியடைந்த இடங்களில் ஆங்கில வழியில் கற்பிக்கும் தேசிய பாடசாலைகள் உள்ளன. இவை தவிர அரசு சாரா தனியார் ஆங்கில வழிப் பாடசாலைகளும் மாவட்டங்கள் தோறும் இயங்க அரசு அனுமதி வழங்கி ஊக்குவிக்கின்றது.

### 2.1.20. இந்தியாவில் விடுதியில் தங்கி படிப்பது போன்று நாடு திரும்பும் மாணவர்கள் இலங்கையில் விடுதியில் தங்கி படிக்க என்ன வசதிகள் உள்ளன?

இந்தியாவில் விடுதியில் தங்கி படிப்பது போன்று நாடு திரும்பும் மாணவர்கள் பாடசாலை விடுதியில் தங்கி படிக்க முடியும். இலங்கையில் சில குறிப்பிட்ட பாடசாலைகளில் மட்டும் குறிப்பாக அரசு உதவியோடு இயங்கும் தனியார் அமைப்புச் சார்ந்த பள்ளிகளில் மட்டும் தங்கும் விடுதி ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றது.

## 2.2 Þ¬÷ë˜ «ñ‹ð£´

### 2.2.1. இந்தியாவில் என்னென்ன திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் பெற்றுக்கொண்டால் அங்கு பயனுள்ளதாக இருக்கும்?

- இசை தொடர்பான பயிற்சிகள்.
- வெல்டிங்.
- மெக்கானிக்கல்.
- மேசன் வேலை.
- தச்சு வேலை.
- எலக்ரீசியன்.

### 2.2.2 இளைஞர்களின் விளையாட்டு மேம்பாடு பற்றிய தகவல்கள் தெரியுமா?

கிராம மட்டங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் ஊடாக போட்டிகள் நடைபெறும். அவற்றில் வெற்றியடைந்தால் மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய மட்டம் வரை செல்லும் வாய்ப்பு உள்ளது.

### 2.2.3. பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்வு குறித்து என்ன மாதிரியான விடயங்கள் தெரிந்துள்ளீர்கள்?

இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு குற்றவாளியாக இனம் காணப்பட்டால் அவர்களின் குற்றங்களுக்கு ஏற்றவாறு தண்டனை அல்லது புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்படுகின்றனர்.

வழக்கு விசாரணை நிறைவு செய்யப்பட்டாலும் விடுதலை செய்யப்படாமல் உள்ள நிலைமையும் உள்ளது. அவ்வாறு உள்ளவர்களுக்கு பிணையில் செல்வதற்கான சந்தர்ப்பம் உண்டு.

மேலும் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு வழக்குகளை நிவர்த்தி செய்வதற்காக செயற்படுத்தும் திட்டமும் உள்ளது. இலங்கை இந்திய அரசுகள் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொண்டு இது போன்ற பிரச்சினைகளை தீர்க்க முற்பட வேண்டும்.

### 2.2.4. தாயகத்தில் சமூக குற்றங்களுக்கான தண்டனைகள் பற்றிய தகவல்கள் ஏதும் தெரியுமா?

சிவில் சட்டத்தின் அடிப்படையில் சமூக குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது.

### 2.2.5. திறமையின் அடிப்படையில் விளையாட்டுத்துறையில் தமிழர்களை சேர்த்துக்கொள்ளும் நிலை பின்பற்றப்பட அரசின் நடவடிக்கை என்ன?

தமிழர்களை திறமையின் அடிப்படையில் விளையாட்டு துறையில் சேர்த்துகொள்ளும் திட்டம் பின்பற்றப்படுகிறது. திறமைக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. எந்த விதமான பாகுபாடுகளும் பார்க்கப்படுவதில்லை.

### 2.2.6. தமிழகத்தில் பல இளைஞர்கள் காவலர்களாக வேண்டும் என்ற ஆசையில் உள்ளனர். தாயகம் சென்றால் அவர்களது கனவு நனவாகுமா?

1. தகுதி இருப்பின் பொலிஸில் இணைந்து பணியாற்ற முடியும்.

2. விண்ணப்பதாரியின் தகுதியின் அடிப்படையில் கட்டாயமாக

உள்வாங்கப்படுவர்.

### 2.2.7. இலங்கையில் இளைஞர்களுக்கு பாதுகாப்பு நிறைவாக உள்ளதா? எந்தெந்த வகையில்?

சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடாமல் இருப்பின், எந்த விதமான அச்சுறுத்தல்களும் இல்லை.

### 2.2.8. பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்வு குறித்து என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்வு தொடர்பாக அரசினாலும், ஏனைய சமூக நிறுவனங்களினாலும் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றில், இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

- போன் திருத்தம்
- உலோகத் தட்டு வேலைகள்.
- வாகன திருத்த வேலை.
- வீட்டு மின்சார கட்டமைப்பு
- கட்டட வேலைகள்

போன்ற பயிற்சிகளை வழங்குவதோடு அதற்கான கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகிறது. (அரசு மற்றும் NGO)

• இளைஞர்களுக்கான தொழில் வாய்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் இதனடிப்படையில் இளைஞர்கள் சிறுதொழில் மற்றும் கைத்தொழில்களை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

• இவர்களுக்கு கைத்தொழில் மானியங்கள், சிறு கடன் உதவிகள், குறைந்த வட்டிக் கடன்கள் என தேவையின் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

• மேலும் இங்குள்ள இளைஞர்களின் தொழில் முன்னேற்றத்துக்கு எத்தொழிலையும் செய்யும் உரிமை, தொழில் ரீதியான பயணங்கள், தொழில் ரீதியான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல், விரும்பிய

இடத்தில் தொழில் ரீதியான, வர்த்தக ரீதியான பாதுகாப்பு என்பனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.8.9. வயது வந்த இளைஞர்களை நாட்டுக்கு அழைத்துச் செல்ல பயமாக இருக்கிறது. இவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளது?

இன்றைய நிலவரங்களின் அடிப்படையில் இங்குள்ள இளைஞர்கள் மற்றும் நாடு திரும்பிய இளைஞர்களுக்கு மனதளவான மற்றும் சிறப்பான பாதுகாப்பு அம்சங்கள் காணப்படுகின்றன.

மேலும் இங்குள்ள அரசின் இளைஞர்கள் விவகார அமைச்சின் ஊடாக அவர்களின் தேவைகள், பிரச்சினைகள், கல்விசார் விடயங்கள் சம்மந்தமான விவகாரங்கள் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இன்னும் இலங்கையைப் பொறுத்த வகையில் இளைஞர்கள் விரும்பிய இடத்திற்கு சென்று கல்வி கற்கலாம். தொழில்களை மேற்கொள்ளவும், காவலர் சேவைகளில் இணைவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. திறமை சார்ந்த விடயங்களில் முன்னேறிச் செல்லவும் (விளையாட்டு, கலை, கலாசாரம் சம்மந்தமான திறமைகள்) அவற்றை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது. இளைஞர்களின் திறமைகள் மற்றும் கல்வித் தகைமைகளின் அடிப்படையில் அரசாங்கத்திலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமைகளும் இங்கு காணப்படுகின்றது.

## 2.3 «õ¬ôõ£ŒŠ¹

### 2.3.1. இங்குள்ள பட்டபடிப்பு முடித்து தாயகம் திரும்புவோரின் தொழில், வேலைவாய்ப்பு, பொருளாதாரம் போன்ற விடயங்களில் எத்தகைய வாய்ப்புக்கள், வசதிகள் உள்ளன?

- சமவலுச்சான்றிதழ் பெறப்பட வேண்டும் **(UGC)**.
- பிரதேச செயலகத்தில் உள்ள மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் விண்ணப்பம் செய்து பதிவு செய்தல்.

• மாவட்டச் செயலகத்தில் (கச்சேரி) **EB** விண்ணப்ப படிவம் பெற்று பதிவு செய்தல்.

• இலங்கை அரச வர்த்தமானி **(Government Gazaette)** விளம்பரங்களை பார்த்து தகுதிக்கேற்ற வேலைக்கு விண்ணப்பிக்கலாம். 18-35 வயதுக்குள் இருந்தால் அரசு வேலை வாய்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

• தனியார் வேலைகளுக்கு அந்தந்த நிறுவனங்களுளின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வேலைகள் கிடைக்கும். அரசு வேலைவாய்ப்புக்களுக்கும் நுழைவுத்தேர்வுகள் எழுத வேண்டும். இந்தியாவில் பட்டப்படிப்பு நிறைவு செய்பவர்களுக்கு அரசு வேலைக்கு அதிக வாய்ப்பு உள்ளது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வேலைவாய்ப்பு போன்ற நிறுவனங்களில் வேலை செய்யலாம். (மேலதிக தகவல்களுக்கு இணையத்தளங்களை பார்க்கலாம்) -**http://www.gazette.lk/**

### 2.3.2. பொறியியல் தொடர்பாக என்னென்ன வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது?

பொறியியல் படிப்பு முடித்தவர்கள் சமவலுச்சான்றிதழ் பெற்று தகுதியின் அடிப்படையில் தொழில்நுட்ப அலுவலராக பணி செய்யலாம்.

### 2.3.3. கல்வி மற்றும் தொழில் தொடங்க வங்கிக்கடன் பெற வழிகள் என்ன?

வங்கிகளுக்கு ஏற்ப சட்டதிட்டம் மாறுபடும். வங்கி அங்கத்தவராக பதிவு செய்து இருக்கவேண்டும் திட்டத்திற்கான அறிக்கை செய்து கொடுக்கவேண்டும். அரசுப்பணியில் இருப்பவர் இருவர் பிணை நிற்க வேண்டும். (நிபந்தனைக்கு உட்பட்டது)

### 2.3.4. இராணுவத்தில் தமிழர்கள் ஆட்சேர்க்கை பற்றிய தகவல்கள் அறிய முடியுமா?

இராணுவத்தின் சட்டத்திற்கு அமைவாக சேர்த்துக் கொள்ளப் படுவர். அனைவருக்கும் இராணுவத்தில் பணியாற்ற உரிமை உண்டு.

### 2.3.5. தமிழ்மாணவர்கள் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற உள்ள வாய்ப்புகள் என்ன?

• கணினிப்பதிவு உத்தியோகஸ்தர்

• கணினி தொழில்நுட்பவியாளர்

• கணினிப்பயிற்சி ஆசிரியர் போன்ற பணிகளில் பணியாற்ற வாய்ப்பு உள்ளது.

### 2.3.6. இந்தியாவில் மருத்துவராக படித்து நாடு திரும்புபவர்கள் அங்கு மருத்துவ பணியை தொடர முடிகிறதா? இல்லையெனில் ஏதேனும் நடைமுறைகள் பின்பற்ற வேண்டியுள்ளதா?

மருத்துவ படிப்பு முடித்தவர்கள் மருத்துவக் கவுன்சிலில் **(Medical Council)** பதிவுசெய்து தேர்வுகளை எழுதி சட்டதிட்டங்களுக்கு ஏற்ப வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்.

### 2.3.7. அரச பணியில் சேர வயது எல்லை எவ்வளவு? நாடு திரும்பியவர்களுக்கு தளர்வு தர வாய்ப்பு உள்ளதா?

வயதெல்லை 21 தொடக்கம் 35 அல்லது 45 வரை.நாடு திரும்பியோருக்கு தளர்வு கிடையாது. தகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

### 2.3.8 இலங்கையில் பணியில் இருக்கம் போது தந்தை அல்லது கணவர் மரணமடைந்தால் அவர்களது அரசு வேலை வாய்ப்புக்களை மனைவி அல்லது மகள் அல்லது மகனுக்கு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

தபால்துறை, நீர்ப்பாசனம், இரயில்வேத்துறை போன்ற சில துறைகளில் உண்டு. ஆனால் எல்லாத்துறைகளிலும் இல்லை.

### 2.3.9 நான் ஒரு தடகள வீராங்கனை. மாவட்ட மட்ட போட்டிகளில் பங்கு பெற்றுள்ளேன். நான் இலங்கை திரும்பி இத்துறையில் பிரகாசிக்க வாய்ப்புள்ளதா? வழிமுறைகள் என்ன?

வாய்ப்புக்கள் உள்ளன. பிரதேச செயலகங்களில் விளையாட்டு உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றுகிறார்கள். இவர்கள் தொடர்ந்து உங்களுக்கான வாய்ப்புக்களையும் வழிகாட்டலையும் பிரதேச

மட்டத்தில் வழங்குவார்கள். பிரதேச மட்ட விளையாட்டுக் கழகங் களிலும், போட்டிகளிலும் பங்கு பெறலாம். அங்கு சாதித்தால் தொடர்ந்து முன்னேற வாய்ப்புண்டு. பல்கலைக்கழகத்தில் உடற் கல்வி டிப்ளோமோ என்னும் கற்கை நெறியும் நடைபெற்று வருகிறது.

### 2.3.10 தற்போது அங்கு நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வூதிய திட்டம் எந்த வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தற்போது இலங்கையில் அரசு பணியில் உள்ள ஒருவர் தனது பணி ஓய்வு காலத்திற்கு முன்னர் ஓய்வூதியத்தை பெறவிரும்பினால் குறைந்தது எத்தனை ஆண்டுகள் சேவையாற்றியிருக்க வேண்டும்?

இலங்கையில் அரச சேவையில் ஓய்வு பெறும் வயதெல்லை 55 ஆகும். எனினும் சேவை நீடிப்பினைப் பெற்று 60 வயது வரை பணியாற்ற முடியும். 55 வயதினை பூர்த்தி செய்த அரசு அலுவலர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதிய நன்மையினை பெற்றுக்கொள்ள முடியும். 55 வயதினை அடையாவிடினும் அரசு உத்தியோகஸ்தர்கள் விரும்பினால் 20 வருட சேவையினை நிறைவு செய்தால் அரசு சேவையிலிருந்து ஓய்வு பெறலாம். எனினும் அவருக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு 55 வயதிற்குப் பின்னரே வழங்கப்படும். பெண் அரச ஊழியர்களுக்கு அவர் 20 வருட சேவையைப் பூர்த்தி செய்து பணி ஓய்வு பெறும் போது அவருக்கான ஓய்வூதிய நன்மைகளை அந்த காலப்பகுதியிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும்.

### 2.3.11 இலங்கையில் பணியில் சேரும் வயது மற்றும் ஓய்வு வயதெல்லை சேவைக்கு சேவை மாறுபாடுள்ளதா? அவை எவ்வாறு?

ஆம். தற்போழுது அரசு சேவையில் இணைவதற்கான ஆகக்கூடிய வயதெல்லை 45 வயதாக உள்ளது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் அரசு சேவைக்கான விண்ணப்பங்கள்கோரும் போது வயது வரம்பெல்லை சேவைக்குச் சேவை வேறுபடுகின்றது. இதே போன்று **SLAS** தேர்வுக்கு வயது வரம்பெல்லை 29. இதே போன்று ஓய்வூதியத்திற்கும் ஆசிரியர் சேவைக்கும் மருத்துவ சேவைக்கும் உரிய ஓய்வு பெறும் வயதெல்லை மாறுபடுகின்றது.

## 3.1. ñ¼^¶õ‹

### *“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”*

நம் வாழ்வில் பல விடயங்களிலும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து நாடு கடந்து வாழும் நமது தாயக மக்கள் இந்திய மருத்துவ சேவைகளுக்கும் இலங்கை மருத்துவ சேவைகளுக்கும் இடையில் வித்தியாசங்கள் உள்ளனவா? தாயகத்திற்கு திரும்பிய பின்பு இந்திய மருத்துவ சேவைகள் போல் இலங்கையிலும் பெறமுடியுமா? என்பதை தெளிவு படுத்திக் கொள்வதற்காகவும், மீண்டும் தாயகம் திரும்புவதற்கு தமக்கு முக்கிய தேவைகளுள் ஒன்றாக கருதப்படும் மருத்துவ சேவைகள் தொடர்பான விளக்கங்களை தெரிந்துகொள்ளும் வகையிலும் பல வினாக்களை தொடுத்துள்ளனர். இவ்வினாக்களுக்கு தற்போது தாயகத்தில் வாழும் எம் மக்களால் வழங்கப்பட்ட பதில்களின் தொகுப்பாக இதனை வழங்குகின்றோம்.

### 3.1.1. தொடர் நோயாளிகளுக்கு இங்கு கிடைப்பது போன்று மருத்துவ வசதிகள் கிடைக்கின்றதா?

நோயாளர் ஒருவர் முதலில் போதனா வைத்தியசாலை அல்லது ஆரம்ப வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் தன்னிடம் உள்ள மருத்துவ அறிக்கைகளை மருத்துவரிடம் காண்பித்து அவர் அதனைப் பார்வையிட்டு நோய்க்குரிய விசேட பகுதிக்கு அனுப்பி வைப்பார். பின்னர் மாதாந்த கிளினிக்கில் பதிவு செய்து மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம்.

### 3.1.2. தொடர் நோயாளர்கள் அவர்களது தொடர் சிகிச்சையை நாடு திரும்பும் பட்சத்தில் அங்கு தொடர்வதற்கான எவ்வித ஆயத்தங்களுடன் சென்றால் பாதிப்பில்லாமல் இருக்கும்?

தாயகம் திரும்பும் மக்கள் தங்களது நோய்களுக்கான தொடர் சிகிச்சையினை தடையில்லாமல் தொடர்வதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எவ்வாறு எனில் அவர்களது நோய்க்கான முழுமையான மருத்துவ சான்றுகள்

- மருத்துவ ஆலோசனை குறிப்புகள்
- சத்திர சிகிச்சை செய்திருப்பின் அதற்கான ஆவணங்கள்

• கழக நலப்பணியாளரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்ட **POMR** மற்றும் மருத்துவ கோப்புகள் போன்றவற்றை தவறாது கொண்டு வரும்பட்சத்தில் நாட்டில் உள்ள எந்த மருத்துவ மனையிலும் பதிவு செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

### 3.1.3. இலங்கையில் நோயாளர்கள் தொடர் சிகிச்சை பெற வாய்ப்பில்லை எனில் இந்தியா வந்து சிகிச்சையை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் உண்டா? தற்போதைய நடைமுறைகள் என்ன?

இலங்கையில் எல்லா நோய்களுக்கும் தொடர் சிகிச்சை இருக்கிறது. தற்போதைய நடைமுறை, நீங்கள் எங்கு வந்து இருக்கிறீர்களோ அந்த இடங்களுக்கு அருகில் உள்ள பொது வைத்தியசாலை ஆதார வைத்தியசாலைகளில் தொடர் சிகிச்சையை பெற்றுக் கொள்ளலாம்

## 3.2.ñù ïô‹ ð£F,èŠð†«ì£˜

### 3.2.1.மனநலம் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் மற்றும் மூளை முடக்குவாத நோய் பாதிப்பிற்கு உள்ளான பிரிவினருக்கு அங்குள்ள மருத்துவ மற்றும் பராமரிப்பு வசதிகள் என்ன?

அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் இதற்கான சிகிச்சை வசதிகள் உள்ளன. ஆதார வைத்தியசாலை மனநல பிரிவு மூலமாக களப்பணி கண்காணிப்புக்குழு உள்ளது. இந்நோய்களுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக

**உ-ம்**

- தெல்லிப்பளை - யாழ்ப்பாணம்
- அங்கொட - கொழும்பு

போன்ற மருத்துவமனைகள் சிறப்பாக செயல்படுகின்றது. மேலும் அரசு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சித்த வைத்தியசாலைகள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் நிலையில் கைதடி - யாழ்பாணம், 4ம் கட்டை - வவுனியா போன்ற இடங்களிலும் செயல்பட்டு வருகிறது. இதுபோன்ற சிறப்பு தேவை

உடையோருக்காக அரசு திட்டங்களும் உள்ளது. சில மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் இலவச சித்த மருத்துவ வசதிகள் உள்ளன.

### 3.2.2. இலங்கையில் மன அழுத்தம் மற்றும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் என்ன?

ஒவ்வொரு கிராமங்களிலும் பயிற்றுவிக்கப்பட்ட தன்னார்வ ஆற்றுப்படுத்துநர்கள் அரச மட்ட குழுக்களில் பணியாற்றி வருகின்றனர். அரசு செவிலியர்கள் மூலம் ஆற்றுப்பணி நடைபெறுகிறது. குடும்பநிலையில் பின் தங்கியுள்ளவர்களுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கோடு உதவிகளும் அளிக்கப்படுகிறது. அனைத்து போதனா வைத்தியசாலைகளிலும் மாவட்ட மருத்துவமனைகளிலும் படுக்கை வசதிகளுடன் கூடிய சிறப்பான சிகிச்சை வசதிகள், சிறப்பு நிபுணர்கள் மேற்பார்வையு டன் நடைபெற்று வருகிறது. மேலும் இந்நோய்களுக்கான பணிகளை அரசோடு இணைந்து குறிப்பிட்ட சில தொண்டு நிறுவனங்களும் மேற்கொண்டு உள்ளன.

### 3.2.3. மனநிலை பாதிக்கப்பட்டவர்களில் மோசமான நிலையில் உள்ளோரை கடவுச்சீட்டுப் பெற்று இலங்கைக்கு அழைத்து வரமுடியுமா? அதில் பிரச்சினை உள்ளதா? இவர்களுக்கான தொடர் சிகிச்சை மையங்கள் எங்கு உள்ளது?

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை கடவுச்சீட்டு மூலம் இலங்கைக்கு அழைத்து வரலாம். இவர்களுக்கான மருத்துவ வசதி எல்லா மாவட்டத்திலும் இருக்கின்றது. இதில் ஏதும் பிரச்சினைகள் இல்லை.

## 3.3 . è˜ŠH E èœ ñŸÁ‹ ð£Ö†´‹ î£Œñ£˜èœ

### 3.3.1.கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார் ஊட்டக் குறைவான குழந்தைகளுக்கான ஊட்டத் திட்டம் ஏதாவது உள்ளதா?

கிராம சுகாதார மருத்துவ தாதியின் மூலம் கர்ப்பிணி என்று உறுதி செய்யப்பட்ட மாதத்திலிருந்து குழந்தை பிறந்த ஆறு

காலம் வரை தாய்மார்களுக்கு அதற்கான பரிசோதனை அட்டை பிரதேச செயலகத்தின் சமூகசேவை உத்தியோகஸ்தர் ஊடாக சத்துணவு படிவம் பெற்று பூர்த்தி செய்து குடும்பநல மருத்துவரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் உலர் உணவு முத்திரை மாதம் ஒன்றிற்கு 2000- ரூபாய் என்ற அடிப்படையில் கிராமிய கூட்டுறவு சங்கத்தில் உலர் உணவாக பெற்றுக் கொள்ள முடியும் (அரிசி, பருப்பு, கொ.கடலை, நெத்திலிக்கருவாடு மற்றும் பயறு போன்றவை). தவிர கர்ப்பம் உறுதி செய்யப்பட்ட மாதம் முதல் குழந்தை பிறந்து ஆறு மாதம் வரை திரிபோசா (சத்துமா) வழங்கப்படுகிறது. குழந்தைக்கு பிறந்து ஆறு மாதம் முதல் ஆறு வயது வரை திரிபோசா வழங்கப்படுகிறது. நலிவுற்ற நிலையில் உள்ள கர்ப்பிணிகள் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### 3.3.2. கர்ப்பிணிகளுக்கான மருத்துவ, ஊட்ட வசதிகள் அங்கு என்னென்ன உள்ளது?

கிராம தாதியரின் மாதாந்த தொடர் கவனிப்பு

1. மாதம் 2000/- ரூபாய் வீதம் 10 மாதங்கள் வழங்கப் படுகிறது. இவ்வழங்கல் கர்ப்பம் உறுதியான மாதத்தில் இருந்து குழந்தை பிறந்து 3 மாதம் வரை வழங்கப்படுகிறது.

2. மாதாந்தம் நிறை எடுக்கப்பட்டு கால்சியம், இரும்புச்சத்து மாத்திரை மற்றும் சத்துமா வழங்கப்படுகிறது.

3. குழந்தை வயதிற்கேற்ப நிறை குறைவாக இருக்குமானால் சத்துமா (திரிபோசா) வழங்கப்படும்.

### 3.3.3 இந்தியாவில் உள்ளது போல் எத்தகைய மருத்துவ வசதிகள் இலங்கையில் உள்ளது என்பதை தெளிவுபடுத்துக?

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ வசதிகள் போல் இலங்கையில் பல்வேறு மட்டங்களில் மருத்துவ வசதிகள் உள்ளன அவையாவன:

- கிராமிய வைத்தியசாலை
- கிராம ஆதார வைத்தியசாலை
- பிரதேச வைத்தியசாலை

- மாவட்ட வைத்தியசாலை
- போதனா வைத்தியசாலை

என்ற அடிப்படையில் மருத்துவ வசதிகள் உள்ளடங்கும். ஒருசில மருத்துவமனைகளில் தான் **MRI** ஸ்கேன் போன்ற வசதிகள் உள்ளன.

### 3.3.4. ஆபத்து நிலை கர்ப்பிணிகளுக்கான சிறப்பு பராமரிப்புகள் தொடர்பான நிலைப்பாடுகள் என்ன?

**V.O.G** (பெண்நோயியல் பிள்ளைபேற்று மருத்துவம்)

கிராமத்தை சேர்ந்த ஆபத்து நிலை கர்ப்பிணி ஒருவர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வைத்தியம் பார்ப்பது சிக்கலானது. யாழ்ப்பாணம், வவுனியா போன்ற **V.O.G** (பெண்நோயியல் பிள்ளைபேற்று மருத்துவர்) விசேட வைத்தியர் இருக்கும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும். இதற்கு கிராம தாதியர் (மிட்வைப்) அவர்கள் மூலம் கர்ப்பம் உறுதியானதில் இருந்து அவரது கண்காணிப்பு இருக்கும். ஆபத்தான நிலை இருந்தால் அவர் முன்கூட்டியே அறிவித்து சம்மந்தப்பட்ட கர்ப்பிணியை மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார். அவசர தேவைக்கு அம்புலன்ஸ் வசதி உண்டு. பிள்ளைபேற்று நாளுக்கு முன் 10 நாட்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும். இவை அனைத்தையும் இலவசமாக பெறலாம். திருமணம் நிச்சயித்த பெண்ணுக்கு 3 மாதங்கள் முன்பிருந்து கவனிப்பு உண்டு.

### 3.3.5. தாயகத்தில் குழந்தைப்பேறு கட்டுப்பாடுகள் உள்ளனவா? கர்ப்பத்தடை செய்யும் திட்டம் அரசினால் கடுமையாக கடைபிடிக்கப்படுகிறதா? விளக்கம் தருக.

தாயகத்தில் குழந்தைப்பேறு கட்டுப்பாடுகள் கட்டாயம் என்பது இல்லை. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் 3 பிள்ளைகள் இருத்தல் வேண்டும், 35க்கு கூடியவராக இருத்தல் வேண்டும். கடைசிப் பிள்ளைக்கு 5 வயது இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பின் கணவரின் அனுமதியுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்படுவர். இது நிரந்தர கர்பத்தடை முறையாகும்.

கர்ப்பத்தடை செய்யும் திட்டம் அரசினால் கடுமையாக

கடைபிடிக்கப்படுவதில்லை. எமது விருப்பத்திற்கு ஏற்ப கையில் ஊசி போடுதல், லூப் வைத்தல், மாத்திரைகள் பயன்படுத்துதல் போன்ற தற்காலிக முறைகளும் பின்பற்றப்படுகிறது

### 3.3.6. தாயகத்தில் மகப்பேறு தொடர்பான திட்டங்கள் உள்ளனவா?

1. 20,000/- பெருமதியான ஊட்ட உணவு திட்டம். மாதம் 2000/- என்ற விதத்தில் 10 மாதம் வழங்கப்படுகிறது (நெத்திலி கருவாடு, சோயா, பருப்பு, கொண்டக்கடலை) கர்ப்பம் உறுதி செய்த மாதத்தில் இருந்து குழந்தைப் பிறந்து 3 மாதம் வரை வழங்கப்படுகிறது. மாதாந்தம் எடை எடுக்கப்படுகிறது. சத்துமா வழங்கப்படுகிறது. இரும்புச்சத்து மற்றும் கால்சியம் மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

### 3.3.7. பாலூட்டும் மற்றும் கர்ப்பிணிகளுக்கான இலங்கை அரசின் விசேட திட்டங்கள் யாவை?

**கர்ப்பவதிகள்**

கர்ப்பவதியாக இனங்காணப்பட்டதிலிருந்து சத்து மாத்திரைகள், தடுப்பூசிகள், இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை **(Ultra Sound Scan),** நிறை, உயரம், **BMI** பார்த்தல் நடைபெறுகிறது.

கர்ப்பமான உறுதி செய்த மாதத்திலிருந்து குழந்தை பிறந்து 3 மாதம் வரை மாதம் 2000/- ரூபா வீதம் 20000/- பெறுமதியான சத்துணவு பொருட்கள் வழங்கப்படும்.

**பாலூட்டும் தாய்மார்**

1. குழந்தை பிறந்து 4 மாதத்திலிருந்து 1 வயது வரையில் சத்து மாத்திரைகள், தடுப்பூசிகள் போடுதல், நிறை உயரம் எடுத்தல். பேறுகால முன் பின் பராமரிப்பு ஆலோசனைகள், தற்காலிக கர்ப்பத்தடை வழிமுறைகள் பற்றியும் சுகாதார விழிப்புணர்பு தொடர்பான சேவைகளும் வழங்குவார்கள்.

2. தாய் குழந்தை இருவருக்கும் நிறை குறைவாக இருக்கும் பொழுது பெண்கள் சிறுவர்கள் பிரிவினருக்கும் **MOH**

மருத்துவருக்கும் மேல் முறையீடு செய்து அரசாங்கத்தின் திட்டத்திலும் இணைத்து கொள்வார்கள் (மேலதிக போசாக்கு உணவு திட்டம்)

## 3.4. î£òè^F™ à œ÷ ñ¼^¶õ õêFèœ

### 3.4.1. இலங்கையில் உள்ள கிராமப்பகுதியில் அவசர நிலையில் முதலுதவி தேவைப்படுபவர்களுக்கு எவ்வாறான சேவைகள் உள்ளது?

இலங்கையில் கிராமப்பகுதியில் அவசரநிலையில் முதலுதவி தேவைப்படுபவர்களுக்கான சேவைகள் காணப்படுகின்றன. அவைகள் பின்வருமாறு

இலங்கையைப் பொருத்தவரையில் பொதுவாக வைத்தியசாலைகளுக்கு இடையிலான தூரம் மிக குறைவாகவே காணப்படுகின்றன. எனவே இங்கு நடைமுறையில் உள்ள அம்புலன்ஸ் சேவை மூலமாக அவசரநிலையில் உள்ள நோயாளிகளை உடனடியாக வைத்திய சாலைகளுக்கு கொண்டு செல்லக் கூடியதாக உள்ளது. அம்புலன்ஸ் சேவைகளுக்கான பிரத்யேக தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளது. அவை 021 222 4444; 021 222 5555. இதன் மூலமாக ஒரு அவசர நிலையில் உடனடியாக சேவையை பெறக்கூடியதாக உள்ளது.

மேலும் இங்கு ஆரம்ப பொது சுகாதார மருத்துவமனை உள்பட அனைத்து மருத்துவமனைகளிலும் அவசரநிலை நோயாளிகளுக்கான உடனடி முதலுதவி மற்றும் உயிர்காப்பு நடவடிக்கைகள் சம்மந்தமான அனைத்து ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. அத்தோடு இம்மருத்துவ மனைகளில் 24 மணிநேர நடமாடும் மருத்துவ சேவைகளும் காணக்கூடியதாக உள்ளது. இந்த 24 மணிநேர வைத்திய சேவை சட்டரீதியான முறையில் கட்டாயமானதாகும்.

### 3.4.2. தமிழ்நாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு செய்யும் நலத்திட்டங்கள் போன்று இலங்கையில் எவ்வகையான நலத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளது?

இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வழங்கும் உதவி நலத்திட்டங்கள் பின் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது. மேலும் தொண்டு நிறுவனங்களும் இவர்களுக்கு உதவி வருகின்றனர்.

***(உ.ம்)***

- ஜெய்பூர் காலனி, சுண்டுக்குளி - யாழ்ப்பாணம்
- ஞானம் அறக்கட்டளை
- உதவும் கரங்கள்
- **SEED** நிறுவனம்

போன்ற இடங்களில் உபகரணங்கள் பெறமுடியும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு இல்லங்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளது.

### 3.4.3. இலங்கையில் அரசினால் செயல்படுத்தப்படும் அல்லது ஊக்கப்படுத்தப்படும் அடிப்படை சுகாதார மேம்பாட்டு திட்டங்கள் என்னென்ன உள்ளன?

• நடமாடும் மருத்துவ சேவைகள் மிகவும் கஷ்டமான கிராமங்கள் வரையில் நடைபெறுகிறது.

• அரசு மட்டுமின்றி தொண்டு நிறுவனங்களும் இணைந்து ஆலோசனை மற்றும் **MOH** அனுமதியுடன் செயல்படுகிறது (தகவல் **MOH** அலுவலகத்தில் பெற வேண்டும்).

• அனைத்து பாடசாலைகளிலும் சுகாதார விழிப்புணர்வுகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடைபெறுகிறது.

• தொற்று நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கைகள் அரசி பணியாளர்கள் மூலம் (இராணுவம், காவல்துறை உட்பட) பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

• அரசு மருத்துவமனை மூலம் **(AMC)** கொசுவலை வழங்கல், நுளம்புகளை கட்டுப்படுத்தல் போன்ற பணிகள் இலவசமாக

அனைவருக்கும் செய்யப்படுகிறது.

**3.4.4. சிறுநீரக பாதிப்புற்ற நோயாளிகள் இரத்தச்சுத்திகரிப்பு சிகிச்சைப் பெற்று வருபவர்கள் நாடு திரும்பினால் இச்சிகிச்சையை எவ்வாறு பெறுவது?**

இதற்கான சிகிச்சைமுறை அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் உள்ளது. இந்தியாவில் தொடர் சுத்திகரிப்பு சிகிச்சை பெற்றதற்கான அனைத்து குறிப்புகளும் வைத்திருக்க வேண்டும்.

**3.4.5. அறுவை சிகிச்சை செய்திட வேண்டிய நிலையில் உள்ள இதய நோயாளர்கள் நாட்டிற்குச் சென்று அவ்வாறான அறுவை சிகிச்சை செய்திட எவ்வாறான வசதிகள் உள்ளன. இதற்கான செலவீனத்தை பொறுத்தவரையில் இலங்கையில் செய்வது சிறப்பானதா?அல்லது இங்கேயே அறுவை சிகிச்சை செய்துவிட்டு செல்வது நல்லதா?**

இதய அறுவை சிகிச்சை அங்கு உள்ளது போல் இங்கும் உள்ளது. தனியார் மருத்துவமனைகளில் உடனடியாகச் செய்யலாம் (இரண்டு மாதத்திற்கு முன்பு பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் ரூபாய் 7,00,000/-) அரசு மருத்துவமனையில் செய்வதாக இருந்தால் நோயாளர் இருக்கும் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை சென்று பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கைகளைப் பெற்று கொழும்பு தலைமை அரசு மருத்துவமனை வைத்தியரிடம் காண்பித்து முன்பதிவுசெய்வதன் மூலம் நோயாளர் வரிசை அடிப்படையில் சத்திரசிகிச்சை செய்யலாம்.

**3.4.6. இந்தியாவில் உள்ளது போல் அம்புலன்ஸ் வசதிகள் இலங்கையில் எப்படி? அதைப்பற்றி தெளிவுப்படுத்துங்கள். உயிருக்கு ஆபத்தான நிலையில் இங்கு உள்ளது போன்று அம்புலன்ஸ் வசதி கிடைக்க அங்கு அரசினால் செய்யப்பட்ட ஒழுங்குகள் என்ன?**

அவசர அம்புலன்ஸ் சேவை வடமாகாண சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவசர மருத்துவ நிலைகளின் போதும்

விபத்துகளின் போதும் இந்த தொலைபேசி இலக்கத்திற்கு இலவசமாக அழைக்கலாம்: 021 222 4444; 021 222 5555

1. மாவட்ட அரச போதனா வைத்தியசாலை, ஆதார வைத்திய சாலைகளில் அம்புலன்ஸ் வசதிகள் உள்ளது. அவசரநிலைகளில் உடனடியாக செயல்படும்.

2. சிலவேலைகளில் அம்புலன்ஸ் தூர இடங்களுக்கு சென்று விட்டால் (கொழும்பு, யாழ்ப்பாணம், அநுராதபுரம்) அருகில் உள்ள மருத்துவமனையில் இருந்து வரவழைக்கப்பட்டு நோயாளர்களை உடனடியாக மேலதிக வைத்தியத்திற்கு அனுப்பி வைப்பார்கள்.

இந்தியாவில் இருப்பதைவிட இங்கு ஆம்புலன்ஸ் சேவை மேம்பட்டுள்ளது.

***உ.ம்.***

கிளிநொச்சி வைத்தியசாலையில் தங்கியிருந்து மருத்துவம் செய்யும் நோயாளர்களுக்கு மேலதிக சிகிச்சை தேவை ஏற்படும்போது அவர்களை அம்புலன்சில் யாழ்பாணம் அல்லது வவுனியா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவர்களுக்குரிய வைத்தியம் செய்து முடித்தபின்பு திரும்பவும் அம்புலன்ஸ் மூலம் ஏற்றி வந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் இறக்கி விடுவார்கள்.

### 3.4.7. இந்தியாவில் கிராமப்புறங்களில் உள்ள துணை சுகாதார நிலையங்கள் போன்று இலங்கையில் எவ்வாறான வசதிகள் உள்ளன?

**கிராமிய வைத்தியசாலை:**

கிராமிய மட்டத்தில் சுகாதார மையங்கள் உள்ளன. அவற்றில் வழங்கப்படும் சேவைகள்:

- மாதாந்தம் குழந்தைகள் நிறை எடுத்தல், தடுப்பூசி போடுதல், சொட்டு மருந்து கொடுத்தல், சத்துமா (திரிபோசா) வழங்கல்

- கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நிறை எடுத்தல்.

• நிறை குறைவானவர்களுக்கு சத்துமா வழங்கல்.

### 3.4.8 மாற்றுத்திறனாளிகளுக்கு இலங்கை அரசு சேவையில் முன்னுரிமை கிடைக்க வாய்ப்புகள் உள்ளதா?

இலங்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை உள்ளது. மேலும் பாதிப்பின் தன்மை 60% மேல் இருப்பின் மாதாந்த அரசு உதவித்தொகை 3000/- வழங்கப்படுகிறது.

### 3.4.9. இந்தியாவில் வழங்கப்படும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் போன்று இலங்கையில் என்ன திட்டம் உள்ளது?

இலங்கையில் எல்லாவித நோய்களுக்கும் இலவசமாக சிகிச்சை வசதிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. எந்த கிராமத்தில் இருந்தும் ஆகக்கூடியது 10 கிலோமிட்டர் தூரத்திற்குள், பிரதேச மட்ட, மாவட்ட மட்ட மருத்துவமனைகள் உள்ளன.

**குறிப்பு:** எல்லாவிதமான நோய்களுக்கும் இலவச மருத்துவ வசதி அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்றது.

### 3.4.10. கிராமப் பகுதிகளில் போதிய வசதியுடன் அரசு மருத்துவமனைகள் இயங்கும் நிலை, போதிய மருத்துவர் நியமனம் போன்றவை அரசினால் செய்யப்பட்டுள்ள ஒழுங்குகள் யாவை?

**i** பொது வைத்தியசாலை **(General Hospital)**

**ii** மாவட்ட வைத்தியசாலை **(District Hospital)**

**iii** கிராமிய வைத்தியசாலை **(Rural Hospital)**

### (i). பொது வைத்தியசாலை (General Hospital)

விசேட வைத்தியர்கள் **(VOG) VS/ENT specialist/ eye specialist / skin specialist)**

√ சிறப்புக் கண் மருத்துவர்

√ எலும்புமுறிவு சிறப்பு மருத்துவர்

√ சலம் தொடர்பான சிறப்பு மருத்துவர்

√ புற்றுநோய் சிறப்பு மருத்துவர்

√ காசநோய்

√ பொது மருத்துவர் **(VP - Visiting Physician)**

√ நோயாளர்கள் தங்கியிருந்து வைத்தியம் செய்யலாம்

√ நோயாளர்களுக்கு தொடர் சிகிச்சை (கிளினிக்) செய்தல்

√ சலரோகம் (நீரழிவு)

**(ii) மாவட்ட வைத்தியசாலை (District Hospital)**

1. மருத்துவப் பிரிவு **(medical ward)**
2. அறுவை சிகிச்சை பிரிவு **(surgical ward)**
3. பிரசவ பிரிவு **(maternal ward)**
4. ஒன்றுக்கு மேற்பட்ட மருத்துவர்கள் இருப்பார்கள்
5. சிறப்பு மருத்துவர்கள் இருப்பார்கள்.

**(iii) கிராமிய வைத்தியசாலை (Rural Hospital)**

1. மருத்துவர்
2. மருத்துவ தாதி **(Nurses)**
3. சிற்றூழியர்கள்
4. சுத்திகரிப்பு தொழிலாளர்கள்
5. பகுதி நேர மருத்துவர்கள்

நிறை குறைவான பிள்ளைகளுக்கு சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தினால் போஷாக்கு பொதி வழங்கப்படுகிறது. 4 - 6 வயதுவரை குழந்தைகள் முன்பள்ளிக்கு உள்வாங்கப்பட்டு, முன்பள்ளி போஷாக்கு வழங்கப்படுகிறது (பால், கடலை, இலைக்கஞ்சி, அவல், பயறு மற்றும் சத்துமா)

**இவை தவிர்த்த ஏனைய பணிகள்:**

- முதலுதவி சிகிச்சை (ஆம்புலன்ஸ்) வழங்கப்படுகிறது.
- வெளிநோயாளர் பிரிவு
- தொடர் நோயாளர் பிரிவு

(இவர்களை 3 மாதத்திற்கு ஒரு முறை பொது மருத்துவமனைக்கு அனுப்பி பரிசோதனை முடிவில் நோயின் தன்மைக்கேற்ப சிகிச்சை வழங்கப்படுகிறது)

- பிரசவப் பிரிவு/கர்ப்பத்தடை ஆலோசனை பிரிவுகள் உள்ளது.

**பரிசோதனை:**

இரத்தப்பரிசோதனை, சிறுநீர், குருதி அழுத்தப் பரிசோதனை செய்யப்படுகிறது.

### 3.4.10. இந்தியாவில் உள்ளது போன்று இலங்கை கிராமங்களில் மருத்துவ தாதிகள் பணியில் உள்ளனரா - அவர்களின் முக்கிய பணிகள் என்ன?

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கு ஒரு தாதி வீதம் பணியில் உள்ளனர். கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், குழந்தைகள் உள்ளிட்டோரை கண்காணிக்கும் பணிகள், தடுப்பூசி போடுதல், எடை வளர்ச்சி கண்காணிப்பு **(BMI)**, ஊட்ட உணவு வழங்கல் கண்காணிப்பு, தேவையான விழிப்புணர்வு, முன்பள்ளி சிறார்களுக்கான பசும் பால் விநியோகம் கண்காணிப்பு, திருமணத்திற்கு தயார் ஆன இளைஞர்/ யுவதிகளுக்கான முன் ஆற்றுப்படுத்தல் பணிகள், பேறுகால முன்பின் ஆலோசனைகள், வீட்டு விஜயம், போலியோ சொட்டு மருந்து வழங்கல், பாடசாலைக்கான உணவூட்டல் திட்டம் கண்காணிப்பு, பாடசாலை பிள்ளைகளுக்கான விழிப்புணர்வு, குழந்தைகளுக்கான பூச்சி மாத்திரைகள் வழங்கல், ஊட்டம்/மருத்துவம் தொடர்பான அனைத்து தேவைகளுக்கும் தொடர்புகளை ஏற்படுத்துதல். பேறுகால சிக்கல்கள் ஏற்படும் நிலையில் துரித நடவடிக்கை எடுத்தல்.

### 3.4.11. பாரிய அறுவை சிகிச்சைக்காக மாவட்ட மருத்துவமனைகளில் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதா?

ஆம், வட மாகாண மருத்துவமனையில் உள்ளது:

- யாழ்பாணம் மருத்துவமனை
- கொழும்பு
- கண்டி
- நீர்கொழும்பு
- மட்டக்களப்பு
- திருகோணமலை
- அனுராதபுரம்

**கிடைக்கக்கூடிய வைத்திய வசதிகள்**

1. பெண்ணியல் நோய் (பிரசவம், பெண்ணியல் நோய்)
2. இதய வைத்தியம்
3. சிறுநீரக வைத்தியம்
4. நரம்பியல்
5. எலும்பு முறிவு
6. காச நோய்
7. புற்றுநோய் (தெல்லிப்பளை) (மகரகம)
8. கண்நோய்

போன்ற சத்திர சிகிச்சைகள் உள்ளது. வைத்தியசாலையில் தங்கியிருந்து வைத்தியம் பார்த்த பின்பு கிளினிக்கில் பதிவு செய்து பூரணமாக குணமடையலாம். தனியார் மருத்துவமனையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டால் ஜனாதிபதி நிதியில் இருந்து 1 1/2 லட்சம் உதவித்தொகை பெறுவதற்கு திட்டங்கள் உள்ளது.

### 3.4.12 இலங்கையில் அரச சித்த ஆயுர்வேத கல்லூாிகள் உள்ளனவா? இத்துறைகளில் சேர்ந்து படிக்க தகுதி மற்றும் வழிமுறைகள் என்ன?

சித்த வைத்திய துறையானது தற்பொழுது பல்கலைக்கழக பாடநெறியில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதற்காக தனியான பீடம் இயங்கி வருகிறது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடமானது கைதடியில் அமைந்துள்ளது. இதற்கு வருடாந்தம் நடைபெறுகின்ற உயர்தரப்பரீட்சை வெட்டுப்புள்ளி களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகிறார்கள். வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்படும் நியமனங்கள் போன்று அதே சம்பள அளவுத்திட்டத்துடன் அரசு சித்த ஆயூர்வேத மருந்தகங்களுக்கு சித்த மருத்துவத்துறையில் கல்வி கற்று வெறியேறும் மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**குறிப்பு:-** லங்கா சித்த ஆயூர்வேதக் கல்லூாி ஒன்று மருதனார் மடத்தில் இயங்கி வருகிறது. இங்கு பரம்பரை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இங்கு கல்வித் தகுதிகள் முக்கியமில்லை **DAM** என்னும் பட்டம் வழங்கப்படுகிறது. ஆனால் இப்பட்டத்தின் அடிப்படையில் அரசாங்க வேலை பெறமுடியாது. தமது சொந்த முயற்சியில் மருத்துவம் மற்றும் மருந்து தயாரிப்பு போன்றவற்றை நடத்த வேண்டும்.

### 3.4.13 இந்தியாவில் சித்த ஆயுர்வேத படிப்புக்களை நிறைவு செய்து வந்தால் இலங்கையில் வேலைவாய்ப்புக்கள் பெற முடியுமா? பெறுவதற்கான வழிமுறைகள் என்ன?

மாகாண சுதேச வைத்தியத்துறை பணிப்பாளர், அவர்களின் கருத்துப்படி இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வெளியேறும் சித்த மருத்துவ பட்டதாரிகள் மட்டுமே சித்த வைத்தியத்துறை அரசு வேலை வாய்ப்புக்களில் கருத்தில் கொள்ளப்படுவார்கள். சித்த மருத்துவத்துறையில் வெளிநாடுகளில் கற்று வருபவர்களுக்கு அரச நியமனங்களில் உள்வாங்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

## 4.1. è£E ñŸÁ‹ Mõê£ò‹

மனிதவாழ்வில் அத்தியாவசிய ஆதாரமாக இருப்பது அவன் வாழும் காணி நிலமே. ஆண்டாண்டு காலம் ஏற்பட்ட போர்களும் சண்டைகளும் நிலத்தை மையப்படுத்தியே நடைபெற்றுள்ளது. இதையே காணி நிலம் வேண்டும் பராசக்தி; காணி நிலம் வேண்டும் என்றான் மகாகவி பாரதி. அதற்கமைவாக நம்முன்னோர்கள் தாம் வாழ்ந்த காணி நிலம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினர். இந்த வகையில் இந்தியாவில் வாழும் எம் உறவுகளும், இங்குள்ள தம் காணிகள் நிலங்கள் தொடர்பாக ஐயப்பாடுகளுக்கும் அது தொடர்பான கேள்விகளுக்குமான பதில்களே இத்தொகுப்பு ஆகும்

### 4.1.1 நாங்கள் இலங்கையில் விட்டு வந்த எங்கள் சொந்த இடங்களை மீண்டும் பெற என்ன செய்ய வேண்டும்?

ஆக்கிரமிப்பு அற்ற எந்தக்காணியையும் நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் **LDO** - பெர்மிட் உள்ள உங்களது காணியில் வேறொருவர் ஆக்கிரமிப்பு செய்து அதற்கு அவரது பெயரில் புதிதான பெர்மிட் வழங்கப்பட்டு இருந்தால், காணியின் பரப்பளவை பொறுத்து சரிபாதி அளவினை பெற்றும் கொள்ளலாம்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தில் இருக்கும் “காணிப்பிரிவில்” - உள்ள **LO** விடம் முறையிட்டு நிவர்த்தி செய்து கொள்ளலாம். அங்கும் குறை நிவர்த்தி ஆகாவிட்டால் பிரதேச மட்ட “இணக்கசபை” **(Mediation Board)** மூலம் பெற்றுக்கொள்ள முடியும். அங்கும் குறை நிவர்த்தி செய்யப்படாதிருப்பின் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும்.

உறுதிக்காணி எனில், முதலில் பிரதேச செயலத்தில் இருக்கும் காணிப்பிரிவில் **LO** விடம் முறையிட்டு பெற்றும்கொள்ளலாம். அங்கு தீர்வு ஏற்படாத நிலையில் இணக்கசபையில் **(Mediation Borard)** முறையிட்டு தீர்வுகாண முடியும். இணக்கசபை மூலமாகவும் தீர்வு ஏற்படவில்லை எனில், நீதிமன்றத்தில் வழக்குப்பதிவு செய்து முழுக்காணியையும் ஒருவர் பெற்றுக்

கொள்ளமுடியும்.

### 4.1.2 வேறு நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட எங்கள் காணிகளை முழுமையாக திரும்பிப்பெற யாரை அணுகவேண்டும்? வழிமுறைகள் என்ன?

காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் உள்ள காணிப்பிரிவை **(Land Department)** தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்யவேண்டும்.

1. காணிக்குரிய உண்மையான பிரதி இருக்க வேண்டும்.

2. தங்களிடம் ஆவணம் இல்லையென்றால் கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்தி கடிதம் பெறல் வேண்டும்.

3. தங்கள் காணியின் எல்லைப்புறங்களான வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு காணிகளின் குடியிருப்பவர்களில் உறுதிபிரதிகள் பெற்று வைத்துக் கொள்ள வேண்டும்.

4. மேற்படி விவரங்களுடன் நீங்கள் காணிப்பதிவுக் கிளையில் முறையிடுதல் வேண்டும் அல்லது இணக்கசபையில் முறையிடல் வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும்.

### 4.1.3 காணி இல்லாதவர்களுக்கு அரசுநிலம் தரப்பட்டு வீடு கட்டித்தர ஏதேனும் அரசுதிட்டங்கள் உள்ளதா?

ஆம். காணி இல்லாத நபர், அல்லது வீடு இல்லாத குடும்பம் வீட்டுத் திட்ட பயனாளியாக தெரிவு செய்யப்பட்டிருப்பின் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவினால் அரை ஏக்கர் காணி வழங்கப்படுகிறது.

### 4.1.4 தகப்பனார் இறந்துவிட்ட நிலையில் அவரது காணியை மகன் பெற என்ன செய்யவேண்டும்?

மகனுக்கு பின் உரித்து இருப்பின் மகன் காணியை பெற்றுக் கொள்ளலாம்.

- தகப்பனார் இறந்திருத்தால், அவரது காணியைப் பெற முதலில் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

- இரண்டாவதாக, சம்பந்தப்பட்ட காணியினுடைய உறுதிப்பத்திரம் வேண்டும்.

- மூன்றாவதாக, தகப்பன் இறந்து விட்ட நிலையில், அவருடைய பெயரில் இருக்கும் காணி அவருடைய மனைவிக்குச் சொந்தமானதாக கருதப்படும். பின் தாயாரின் விருப்பத்தின் பேரில் பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்கலாம்.

### 4.1.5 இலங்கை அரசினால் வழங்கப்பட்டிருந்த "பெர்மிட்" காணிகளை மீளப்பெற என்ன செய்யவேண்டும்?

காணி பயன்படுத்தப்படாமல், ஆக்கிரமிப்பு செய்யப்படாமல் இருந்தால் நேரடியாக நாம் துப்புரவு செய்து பயன்படுத்திக் கொள்ளலாம். ஒரு வேளை அரசு தேவைகளுக்காக அந்தக்காணி கையகப்படுத்தப்பட்டு இருந்தால், அதற்குப் பதிலாக மாற்றுக்காணிக்கு பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்து வேறுகாணி பெற முயற்சி செய்யலாம்.

### 4.1.6 எவ்வித ஆவணமும் இன்றி கோவில் காணிகளில் வசித்த எங்களுக்கு அக் காணிகளை அந்நிர்வாகம் மீளத்தர வாய்ப்புகள் எந்த வகையில் உள்ளது?

குறித்த காணியின் கோயில் நிர்வாகத்தின் முடிவினை பொறுத்தது. ஒரு வேளை அக்காணி அரசுகாணியாக இருப்பின் அதில் வேறுநபர் குடியிருக்காமல் இருந்தால் நாம் அதற்கு உரிமை கோரலாம்.

### 4.1.7 பெர்மிட் இல்லாத எமது காணிகளை அரசு எமக்கு கையளிக்ககூடியதாக இருக்குமா?

உங்கள் காணி அரசுகாணியாக இருக்கும் பட்சத்தில் அக்காணியில் வேறு நபர்கள் தங்கள் பெயரில் பெர்மிட் பெற்றிருந்தால் அதில் நீங்கள் உரிமை கோர முடியாது. மாறாக எவ்வித அபிவிருத்தியும் செய்யப்படாமல் இருந்தால், அதை திருப்பவும் சீரமைத்து நீங்கள் எடுத்துக் கொள்ள முடியும்.

### 4.1.8 உறவினர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட காணிகளை மீறப்பெற என்ன செய்யலாம்?

தங்கள் காணி உறுதிக் காணியாக இருப்பின் பிரதேச செயலக காணிப் பதிவுப் பிரிவில் முறையிட்டு பெற்றுக் கொள்ளலாம். தங்கள் காணி பெர்மிட் காணியாக இருப்பின் தங்கள் உறவினர்கள் தங்கள் பெயரில் பெர்மிட் பெற்றிருந்தால் காணியின் பரப்பளவைப் பொறுத்து அவற்றின் ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளலாம்.

### 4.1.9 உறவினர்களால் விற்பனை செய்யப்பட்டுள்ள எமது காணிகளை மீளப்பெற இலவச சட்ட ஆலோசனை உதவிகள் கிடைப்பதற்கான ஒழுங்கு அரசினால் செய்யப்பட்டுள்ளதை விவரிக்கவும்?

ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலும் இலவச சட்ட உதவிக்குழு இயங்கி வருகின்றது. நமக்காக வழக்கினைத் தாக்கல் செய்ய, கட்டணம் இல்லாமல் இலவசமாக வாதிடச் சட்டத்தரணி ஒருவரை இலவசச் சட்ட ஆலோசனைக்கு நியமித்துக் கொடுக்கின்றது.

### 4.1.10 ஒருவர் எவ்வளவு நிலம் வைத்திருக்கலாம்? - என்ற சட்டம் நடைமுறையில் உள்ளதா? எவ்வளவு காணி வைத்திருக்க முடியும்?

அதற்கான சட்டம் உள்ளது. அதிகபட்சம் 50 ஏக்கர் வைத்திருக்க முடியும்.

### 4.1.11 நாடு திரும்பும் மக்கள் தனது விருப்பத்திற்கு அமைவாக நாட்டின் எந்தப்பகுதியிலும் வசிப்பதற்கு அரசினால் காணிகள் வழங்கப்படுமா?

காணிகள் வழங்கப்படமாட்டாது. அவர்கள் ஏற்கனவே நாட்டின் எந்தப் பகுதியில் குடியிருந்தாரோ அந்த ஊரில் காணி வழங்கப்படும். அந்த ஊரில் அவருக்கு வழங்க அரசு காணி இல்லையெனில் அந்த மாவட்டத்துக்குள் காணி வழங்கப்படும். அந்த மாவட்டத்துக்குள் காணி இல்லையெனில் அரசு அனுமதிக்கும் வேறு மாவட்டங்களில் குடியிருக்க காணி வழங்கப்படும்.

### 4.1.12 நாடு திரும்பும் மக்களில் அங்கு சொந்தக் காணி இல்லாதவர்களுக்கு எவ்வகையான இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படுகிறது?

நாடு திரும்பும் மக்கள் தாங்கள் எந்தப் பகுதியில் வசிக்க விரும்புகின்றார்களோ அந்த இடத்தில் உள்ள உறவினர் வீட்டில் தற்காலிகமாக குடியிருந்து கொண்டு, குறித்த பகுதி கிராம சேவையாளரிடம் பதிவுகளை மேற்கொண்டபின் புது குடியிருப்பு காணி கோரி விண்ணப்பித்தால் குடியிருப்புக்காணி அரை ஏக்கர் வழங்கப்படும்.

### 4.1.13 இந்தியா வரும் பொழுது நாங்கள் எங்கள் காணிகளுக்கான ஆதாரங்கள் எதையும் கொண்டு வரவில்லை. எனவே அங்கு சென்றால் அதை நாங்கள் எப்படி பெற முடியும்?

காணிகள் பிறரால் ஆக்கிரமிக்கப்படாமல் அல்லது அரசினால் கையடக்கப்படாமல் இருந்தால் தங்களால் பெறமுடியும். ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தால் உறுதிக் காணி எனில் கச்சேரி காணிக் கிளையில் உறுதியின் நகல் (பிரதி) பெறமுடியும். காணி அபகரிக்கப்பட்டிருப்பின் தங்கள் பிரதியைக் கொண்டு தாக்கல் செய்து பெற முடியும். இதனை பிரதேசபை **(LDO),** அல்லது இணக்கசபை மூலம், நீதிமன்றம் மூலம் தாக்கல் செய்து பெறமுடியும்.

### 4.1.14 இலங்கையில் எமக்கும் சொந்தமான காணிகளை அரசு மற்றும் பிற நபர்கள் கையகப்படுத்தி இருப்பதாக அறிகின்றோம். அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட காணிகளை நாம் மீளப் பெறுவதற்கான வழிமுறைகளை தெரிந்துகொள்ள விரும்புகிறோம்?

காணியை அரசு கையகப்படுத்தி இருந்தால் காணியை திரும்பப் பெறமுடியும் **LDO** பெர்மிட் காணியாக இருந்தால் அதற்குப் பதிலாக மாற்றுக் காணியை விண்ணப்பித்துப் பெறலாம். ஆவணங்கள் எதுவும் இல்லையென்றால் காணிகளை திரும்பப் பெறமுடியாது.

### 4.1.15 நாடு திரும்பினால் எனது குடும்பத்திற்கு சொந்த ஊரில் காணி கிடைக்குமா? அல்லது இந்தியாவில் இருந்து திரும்பியவர்கள் என தனிமைப்படுத்தி இருப்பிட வசதி செய்துதரப்படுமா?

நாடு திரும்பியவுடன் உங்கள் சொந்த ஊரில், உங்களுக்குரிய காணி இருந்தால் நீங்கள் குடியிருக்கலாம். காணி இல்லாத பட்சத்தில் பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்து அவர்களால் கொடுக்கப்படும் பகுதியில் குடியிருக்க முடியும்.

### 4.1.16 நாங்கள் தாயகம் திரும்பியவுடன் எங்களது நிலம் வேலைவாய்ப்பு மற்றும் இதர தேவைகளுக்காக யாரை/எங்கு சென்று சந்தித்துப் பேசவேண்டும்?

தங்களது நிலம் தொடர்பாக பிரதேச செயலகத்தில் காணிப்பிரிவையும் மற்றும் கிராமசேவகர் அவர்களையும் சந்தித்துப் பேசவேண்டும். வேலைவாய்ப்பு பெற வேண்டுமாயின் பட்டதாரிகளாக இருந்தால், மாவட்ட செயலகத்தில் பட்டதாரிகள் சங்கத்தில் பதிவு செய்ய வேண்டும். அரச வேலைவாய்ப்பு குறித்து அரச வர்த்தமானியின் அறிவிப்பு செய்யப்படும் போது அதனைக் கவனித்து போட்டித் தேர்வு எழுத வேண்டும். தனியார் துறைசார்பான வேலை வாய்ப்பைப் பொறுத்தமட்டில், அந்தந்த தனியார் நிறுவனங்களை அணுகி வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியும். சுயதொழில் செய்ய ஊக்கமுடையவராக இருப்பின், அதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

4.1.17 தமிழ்ப் பகுதிகளில் எங்கெல்லாம் சிங்கள குடியேற்றம் உள்ளது?

அரசினால் திட்டமிட்ட வகையிலான சிங்கள குடியேற்றங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. ஆனால் ஏற்கனவே வடக்கு கிழக்கு பகுதிகளில் வசித்த சிங்களவர்கள் அவர்களின் குடும்ப உறவுகள் எனக்கூறி சில இடங்களில் பாதுகாப்புப் படையினரின் அனுசரனையுடன் கூடிய எண்ணிக்கையில் குடியமர்ந்துள்ளதால் வாழ்வாதாரத்தின் அடிப்படையில் சில இடங்களில் சர்ச்சைகள் எழுகின்றன. எனினும் இதற்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றது.

### 4.1.18 நாடு திரும்பும்போது நாங்கள் இருந்த சொந்த இடங்களில் குடியமர்த்துவார்களா? அரசு கைப்பற்றி இருந்தால் அந்த இடம் மீளக் கிடைக்குமா?

சொந்தக் காணிகளின் முறையான உறுதி இருந்தால் அங்கு குடியேற எந்தத் தடையும் இல்லை. அதேசமயம் உறுதி இல்லாத பட்சத்தில் வேறு நபரால் கையகப்படுத்தப்பட்டிருந்தால் சற்று சிரமமாக இருக்கும். மேலும் நாம் வசித்த நிலத்தை உறுதி இல்லாவிடினும் அயலவர்களின் சாட்சிய ஒத்துழைப்புடன் பெறமுடியும். அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களிலிருந்து தற்போது இராணுவத்தினர் கூடியவகையில் வெளியேறி வருகின்றனர். எனினும் அரசு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு இருந்தால் வேறு இடத்தில் அரசால் காணி வழங்கப்பட வாய்ப்புள்ளது. காணியின் அமைவிட அடையாளம் தெரியாத நிலை இருந்தால் உறவினர்களின் உதவியுடன் **DS Office** இல் பதிவு செய்து பெறமுடியும்.

### 4.1.19 நாடுதிரும்பும் போது விவசாயம் மட்டுமே தெரிந்த எங்களுக்கு வீடு வழங்கும் திட்டம் போல் வீட்டுக்கடனுடன் விவசாய காணிகள் சேர்த்து வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா? அல்லது விவசாயத்திற்கான காணிகள் தனித்து வழங்கப்படுமா?

அரசாங்க வீட்டுத்திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆனால் வீட்டுக்கடன் வசதிகள் வழங்கப்படுவதில்லை. விவசாயக் காணிகள் தனித்து வழங்கும் திட்டம் இதுவரையில் இல்லை. ஆனால் விவசாயம் செய்ய முன் வருவோர்களுக்கு விவசாய திணைக்களத்தால் நியாய விலையில் விதைகள் வழங்குதல், விவசாய மானியம் வழங்குதல், மற்றும் இலவச ஆலோசனைகள் வழங்கும் திட்டங்கள் உண்டு.

### 4.1.20 விவசாய காணிகள் அற்றவர்கள் முன்னர் தாமாகவே காடுகளை வெட்டி பண்படுத்தி விவசாயம் செய்ய வாய்ப்பிருந்தது. இப்போதும் அத்தகைய வாய்ப்புக்கள் வழங்கப்படுகிறதா?

தற்பொழுது காடுகளை வெட்டி பண்படுத்தி விவசாயம் செய்ய

அரசு அனுமதி இல்லை. ஆனால் தனியார் காணிகளை விலைக்கு வாங்கியோ, அல்லது குத்தகைக்கு வாங்கியோ விவசாயம் செய்ய முடியும். இதற்கு அரசு ஊக்குவிப்பும் உண்டு.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் குடியிருப்புக்கு வழங்குவதற்கு அரசு காணிகள் கிடையாது என்பதுடன் காணியற்றவர்களின் கோரிக்கைக்கு அமைய வன்னி மாவட்டத்திலேயே அரச காணிகள் காணப்படுவதனால் அங்கு குடியிருப்புக்காணிகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கும் காணிகள் வழங்கப்படலாம். வன்னி மாவட்டங்களில் காணியற்றவர்களுக்கு காணிகள் காணிக் கச்சேரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.1.21 எம் பெற்றோர் வாழ்ந்த இடங்களில் அப்போது அயல் கிராமங்களில் குடியிருந்த சிங்களவர்களின் வாரிசுகள் குடியேறி விவசாயம் செய்வதாக அறிகின்றோம். (பெர்மிட் காணி, ஆனால் இப்போது அதற்கான பெர்மிட் கைவசம் இல்லை) இதனை நாம் மீளப்பெற முடியுமா? இதற்கான வழிமுறை என்ன?

காணி பெர்மிட் கைவசம் இருந்தால், பெர்மிட் வழங்கப்பட்டதில் இருந்து 30 வருடங்களுக்கு காணி உரிமையினைக் கோர முடியும். பெர்மிட் இல்லாவிட்டாலும் பிரதேச செயலகங்களில் பெர்மிட் பதிவினை உறுதி செய்து கொள்ள முடிந்தால் பெர்மிட் வழங்கப்பட்டதில் இருந்து 30 வருடங்களுக்கு காணியினை உரிமைகோர முடியும். பெர்மிட்டும் இல்லாமல் பிரதேச செயலகங்களின் பதிவினையும் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களும் இல்லாவிடில் காணியினை மீளப் பெற இயலாது.

## 5.1 ñèO˜ «ñ‹ð£´

பெண்களுக்கான சமூக நீதி மற்றும் ஆண்களுக்கு இணையான பாலினச் சீர்மையினை உருவாக்க வேண்டும் என்பது ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக சமூக நலத்திட்டங்களின் அடிப்படை குறிக்கோள்களில் ஒன்றாக இருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்தும் விதமாக சமூகப் பொருளாதார ரீதியிலான முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளும், விழிப்புணர்வு மற்றும் சுயசார்பினை அதிகரிக்கும் வழிமுறைகளும் இத்திட்ட செயலாக்கத்தின் அனைத்து மட்டங்களிலும் முறையாக அமல்படுத்தப்படுகிறது.

### 5.1.1 தாயகத்தில் தற்போது பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது?

1. இலங்கையில் பெண்கள் பாதுகாப்பாகவே காணப்படுகிறனர்.

2. இலங்கையில் பெண்களின் அன்றாட வாழ்க்கையில் பாதுகாப்பு காணப்படுகிறது.

3. வேலைத் தளங்களில் பெண்கள் பாதுகாப்பாக பணியாற்றுகின்றனர்.

4. பாடசாலை, மாலை நேர வகுப்பு போன்ற இடங்களுக்கும் பொது இடங்களுக்கும் ஏனைய சுய தேவைகளுக்காக பெண்கள் மிகவும் பாதுகாப்பாகவே சென்று வருகின்றார்கள்.

5. சில இடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில பிரச்சினைகள் நடந்தாலும் இலங்கையில் பெண்கள் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ்கின்றார்கள்.

6. சில பெண்கள் (ஆண்துணையற்ற) தங்களின் பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களுக்கு இரவில் சென்று தனியாகவே அழைத்து வருகின்றனர்.

7. பெண்கள் தாங்கள் விரும்பும் பாடங்களை எடுத்துப் படிக்கும் சுதந்திரம் பாதுகாப்பு சிறப்பாகவே காணப்படுகிறது.

8. தாயகத்தில் பெண்கள் தொழில் செய்ய வாய்ப்புகள் உண்டு, பெண்கள் சுயதொழில் செய்வதற்காக அரசும் உதவிகள்

வழங்குகின்றது. மேலும் படித்த பெண்கள் அரசு வேலைகளில் சென்று பணியாற்றவும் அதிக வாய்ப்புகள் உள்ளது. கிராமத்தில் உள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து சுய தொழில்கள் செய்யும் நிலையும் உள்ளன.

பெண்கள் குழுக்களாக ஒன்று சேர்ந்து சுதந்திரமாக செயல்பட்டு சுய தொழில்கள் செய்ய அதிக வாய்ப்புகள் உண்டு. தற்பொழுது அவ்வாறான குழுக்கள் இயங்கி வருகிறது.

### 5.1.2.அரசு தொழில் திணைக்களங்களில் பெண்களுக்கான வேலை வாய்ப்பு உள்ளனவா? பெண்களுக்கான அரசு வேலை வாய்ப்புகள் உள்ளன.

கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். பொதுவாக பெண்களுக்கு அவரவர் கல்வி தகைமைக்கு ஏற்ப அரசு வேலைகள் கிடைக்க அதிக வாய்ப்புகள் உள்ளன இந்தியாவில் பட்டப்படிப்பு முடித்த பெண்கள் தற்பொழுது அரசு வேலைகளில் உள்ளனர்.

### 5.1.3.பெண்களுக்கு பாதுகாப்பு திட்டங்கள் உள்ளனவா?

ஆம். பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் இலங்கை அரசினால் தேசியரீதியில், மாகாணமட்ட ரீதியாகவும், கிராமங்களிலும் பெண்கள்மகளிர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு அடிப்படை பாதுகாப்பும், உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றது. அதன் அடிப்படையில்

1. காவல் நிலையங்களில் பெண்கள், சிறுவர் பகுதிதனித்து உண்டு.

2. பிரதேச செயலகங்களில் மகளிர் அமைப்புகள் உருவாக்கப்பட்டு பயிற்சிகளும், பாதுகாப்பும் வழங்கப்படுகின்றது.

3. கிராமங்களில் மகளிர் சங்கம், சமூக சேவைகள் இயக்கம் மற்றும் மாதர் அமைப்புகள்.

4. பாலின வன்முறை ஒழிப்பு.

5. இலங்கை அரசின் பெண்களுக்கான விசேட பாதுகாப்பு சட்டநடவடிக்கை முறைகள் தொடர்பான விழிப்புணர்வுகள்

6. மருத்துவ பாதுகாப்பு பெண்களை பாதிக்கின்ற பெண்ணியல் உளநலம் சார்ந்த ரீதியில் உதவிகள் உண்டு.

(இதனை விட கிராம புறங்களில் வறிய நிலையிலுள்ளவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதை கருதி முதலீடுகளில் 25% நிதி ஒதுக்கீட்டை பெண்களுக்கான கிராமிய பொருளாதார அபிருத்திக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும் என்ற அரசாணை மகளீர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது).

## 5.1.4.பெண்களுக்கு மருத்துவ உதவிகள் எவ்வாறு உள்ளது?

பெண்களுக்கான மருத்துவ உதவிகள் அரசு மருத்துவமனைகளில் - பெண்களுக்கு தனித்து பெண் மருத்துவ அதிகாரிகளால் மருத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது

• பெண்களுக்கான தொடர் மருத்துவ சிகிச்சை.

• தாய் சேய் பராமரிப்பு **(MOH)** நிலையங்கள்கிராமம், பிரதேசம், மாவட்டங்களில் அமைக்கப்பட்டு மாதர்களுக்கானவிசேட பாதுகாப்பு, சிகிச்சைஅளிக்கப்பட்டு வருகின்றது.

• பெண்களின் விசேடநலங்களையும் பாதுகாக்கும் நோக்கில் அரசு, அரசு சார்பற்ற ஸ்தாபனங்கள் பெண்களுக்கான செயல்பாடுகளில் அங்கம் வகிக்கின்றன. பாதுகாப்பு வழங்குகின்றன.

## 5.1.5.பெண்கள் தயாரித்த பொருட்களை சந்தைப்படுத்தக் கூடிய விற்பனை நிலையங்கள் உள்ளனவா?

1. பனை அபிவிருத்தி சங்கம் (மகளிர் மட்டும் - கூடை, தொப்பிகள், சுளகு, நீத்துப் பெட்டி, இடியப்பம், ஒடியல் மா தயாரித்தல் - அலங்கார பூக்கள், பூக்கூடை)

2. மாவட்டம் தோறும் கைவினைப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பொருட்கள் தயாரிக்கும் பெண்கள் ஓர் குழுவாக இணைந்து பிரதேச செயலகத்தில் முறைப்படி பதிவுசெய்து அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கிறார்கள்.

3. பெண்கள் மாதர் சங்கங்கள் ஊடாக நல்லெண்ணை தயாரிப்பு நிலையமும், விற்பனை நிலையமும் உள்ளது. - பாண்டியன்குளம்.

### 5.1.6.பெண்களுக்கான கல்லூரி/பள்ளி/விடுதிகள் தனித்தனியாக உள்ளனவா?

இலங்கையில் பெண்களுக்கான பாடசாலைகள் உள்ளன. அதனோடு இணைந்த விடுதிகளும் காணப்படுகின்றன. ஆனால் மேற்படிப்புக்கான கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கென்று தனியாக இல்லை. இருபாலருக்கும் ஏற்ற வகையில் காணப்படுகின்றன. இருந்தாலும் இதற்கான விடுதிகள் தனித்தனியாக உள்ளன.

### 5.1.7.பெண்களிடம் சீதனம் வாங்கும் செயற்பாடுகள் குறைந்து காணப்படுகிறதா அல்லது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதா?

பெண்களிடம் சீதனம் வாங்கும் முறை இடத்துக்கிடம் வேறுபடுகின்றன. சில இடங்களில் கல்வி கற்று உயர் பதவிகளில் இருப்பவர்கள் சீதனம் பெற்றுக் கொள்வதனை கௌரவமாக கருதுகின்றனர். இதனால் மேல் மட்டங்களில் இது தொடர்ந்து நடைமுறையில் காணப்படுகின்றது. பெண்பிள்ளைகளை திருமணத்துக்கு தயார்படுத்தும் போது பெற்றோரும் சீதனம் கொடுப்பதனை கௌரவமாக கருதுகின்றனர்.

தற்சமயம் இது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. யுத்தம் முடிவடையும் முன்னர் வடக்கு, வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தளவில் இது குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்றும் பெரும்பாலான இடங்களில் நடைமுறையில் இருக்கின்றது.

### 5.1.8.பெண்களுக்கான தொழிற்பயிற்சி

பெண்களுக்கான தொழிற்பயிற்சிகளை நிறுவனங்கள் வழங்குகின்றன. மேலும் அரசினாலும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

**அரசு:-**

- பெண்கள் அபிவிருத்தி திணைக்களம்
- தையல் பயிற்சி
- சிவில் தொழில்நுட்பம் சம்மந்தமான பயிற்சிகள்
- உணவு, கால்நடை சம்மந்தமான பயிற்சிகள்
- ஆடை உற்பத்தி
- கணினி பயிற்சி
- அலங்கார வடிவமைப்பு
- பனைப்பொருள் உற்பத்தி
- வீட்டுத்தோட்டம், விவசாயம்

இவை அனைத்தும் கல்வித்தகுதி அடிப்படையிலும், மொழித்திறன் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன.

### 5.1.9.படித்த பெண்களில் காவல்துறை மற்றும் இராணுவத்தில் எவ்வளவு சதவீதம் பேரை சேர்த்து கொள்கின்றார்கள்?

இலங்கையை பொறுத்தவரையில் அரசு, அரசு சார்பற்ற வேலைகளில் கல்வி தகைமையை அடிப்படையாக கொண்டே உள்வாங்கப்படுகிறார்கள். அதே போல காவல்துறை மற்றும் இராணுவத்தில் சேர்வதற்கான விருப்பம் இருப்பின் கல்வி தகைமை அடிப்படையில் பரீட்சை அடிப்படையில் சேர்த்து கொள்ளப்படுகின்றனர்.

### 5.1.10.பெண்களுக்கான தனியான விளையாட்டு துறைகள் உள்ளதா?

பெண், ஆண் என்ற பாலின அடிப்படையில் விளையாட்டுகள் இல்லை. இரு பாலருக்கான விளையாட்டுகள் உள்ளன. எ.கா. கிரிக்கெட், மகளிர் உதைப்பந்தாட்டம், ஹாக்கி.

### 5.1.11.பெண்கள் குழந்தைகளுக்கான பாதுகாப்பு சட்டங்கள் எவ்வாறு உள்ளது?

விசேடமாக பெண்கள், குழந்தைகளுக்கான வன்முறைகளை ஒழிப்பதற்கும் குறைப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் எடுப்பதற்கும்

- பெண்கள் விவகார அமைச்சு
- காவல் நிலையங்கள்
- பிரதேச செயலகங்கள் - சிறுவர் நன்னடத்தை பிரிவு
- சிறுவர் மேம்பாட்டு கழகங்கள்
- கிராம குழுக்கள், மகளிர் குழு அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
- பெண்கள் அமைப்புகள்.

இவை அனைத்திலும் தனித்து ஓர் விசேட பிரிவு அமைக் கப்பட்டு உடனடி பாதுகாப்பு வழங்கப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்கின்றன.

(அரசு சார்பற்ற நிறுவனங்களிலும் பெண்களுக்கான தனித்த பாதுகாப்பு, பயிற்சிகள், சம்பந்தமாக சட்ட திட்டங்களை இயக்கி வருகின்றார்கள்)

### 5.1.12. இளம் பெண்களுக்கான விளையாட்டினை ஊக்குவிக்க அரசின் நடவடிக்கை என்ன?

அதற்கான பிரத்யேக பயிற்றுநர்களை நியமித்து அதற்கான பயிற்சிகளை வழங்குகிறது.

### 5.1.13. பெண்களுக்கான மருத்துவ வசதிகள் என்ன?

பெண்களுக்கான கர்ப்பகால மருத்துவ வசதிகள் இங்கு அதிகமாக காணப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார அமைச்சின் திட்டத்தின் ஊடாக போசாக்கு, ஊசி போன்றவைகள் வழங்கப்படுகின்றன. நோயுற்ற பெண்களுக்கு மாதாந்த ஊக்கத் தொகை அரசினால் வழங்கப்படுகிறது.

**5.1.14. பெண்கள் பாதுகாப்பு தொடர்பாக இலங்கையிலுள்ள தன்னார்வ அமைப்புகள் என்ன? பெண்களின் பிரச்சினைகள் அடிப்படையில் ஒருங்கிணைக்க முடிகிறதா?**

1. ஆஃபர் சிலோன்

2. மாதர் சங்கம்

3. பெண்கள் சுயஉதவிக் குழு

4. சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அதிகாரசபை

5. பொதுவாக அனைத்து அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களிலும் பெண்களுக்கு தேவையான உதவிகள் அனைத்துமே செய்யப்படுகிறது.

**5.1.15.பாலியல் சார்ந்த வேறுபாடுகளைக் களைய இலங்கை அரசின் நடவடிக்கை என்ன?**

1. ஆணுக்கு பெண் சரி சமமானவர்கள் என்பதற்கு ஏற்ப அனைத்து துறையிலும் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

2. பெண்கள் தாங்கள் விரும்பிய தொழிலை செய்ய சட்டம் காணப்படுகிறது.

3. பெண்கள் ஆண்களோடு இணையாக அரசியலில் சேர்ந்தும், சுயமாகவும் அரசியல் புரிய சட்டத்தில் இடமுண்டு.

4. பெண்கள் எந்த துறையிலும் தாங்கள் விரும்பிய தொழில், கல்வி, அரசியல் போன்றவற்றை மேற்கொள்ள சட்டத்தில் இடமுண்டு.

5. உயர் பதவிகளில் ஆண்களுக்கு சமமாக தங்களை நிலைநிறுத்த இடமுண்டு.

**5.1.16.பெண்களுக்கு எதிரான செயலை, பலாத்காரம் போன்ற தீய செயல்களை கட்டுப்படுத்த அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?**

காவல் நிலையங்களில் பெண்களுக்கு என ஒரு பிரிவு 24 மணிநேர சேவையில் உள்ளது.

காவலர்கள் மற்றும் பெண்காவலர்கள் ஒவ்வொரு ஊரிலும் இரவில் ரோந்து செல்கின்றனர்.

### 5.1.17.வளர் இளம்பருவ பெண்களுக்கான விசேட ஊட்டச்சத்து திட்டங்கள் அரசினால் செயல் படுத்தப்படுகிறதா?அது பற்றிய தகவல்களை குறிப்பிடுக.

1. சுகாதார அமைச்சின் கிளினிக்கின் மூலம் ரூபெல்லா ஊசி போடபப்படுகிறது

2. ஊட்டச்சத்து தொடர்பான வேலைத் திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

## 5.2 õ£› õ£î£ó‹ ñŸÁ‹ «ñ‹ð£´

### 5.2.1. நாட்டில் தற்போதைய சூழலில் எத்தகைய தொழில்களுக்கு வாய்ப்புகள் உள்ளது?

அனைத்து அபிவிருத்தி சம்மந்தமான தொழில்களுக்கு அதிகவாய்ப்பு உள்ளது. விவசாயத்துறை பணிக்கு அதிக வாய்ப்புகள் உள்ளது. விவசாயத்துறை, மீன்பிடித்துறை போன்ற தொழில்கள், விலங்கு வேளாண்மை தொடர்பான வாய்ப்புகள், சுற்றுலாத்துறை, வியாபாரம், தச்சு வேலைகள், மரவேலைகள் போன்ற தொழில்களுக்கு அதிக தேவையுள்ளது.

### 5.2.2. நாட்டில் சொந்த தொழில்கள் செய்வதற்கு அதற்கான அரசு உரிமம் பெறுவது, ஏற்றுமதி சந்தைப்படுத்தல் வாய்ப்புகள் தொடர்பான நிலவரங்கள் எந்தநிலையில் உள்ளன? அவற்றை பெறுவதற்கு என்னென்ன நடைமுறைகள் பின்பற்றபடுகிறது?

(எ.கா. பால்பண்ணை, மின்சாரவசதி, கார்மன்ஸ், மீன் மார்கெட்)

வியாபாரப் பதிவினை பிரதேச செயலக கணக்கு கிளையில் மேற்கொள்ளலாம். மாவட்ட செயலகம் **(Kachcheri)** மேலும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல், வாய்ப்புக்கள் **(EDB)**, நம்பிக்கை ஊட்டுவதாகவே உள்ளது. மேலும் இது விடயத்தில் அரசும் ஊக்குவிப்பு முயற்சிகளை மேற்கொள்கின்றது.

### 5.2.3 . இங்கு பிறந்து இளைஞர்களாக வாழும் நாங்கள் தாய்நாட்டில் உள்ள தொழில்துறைகளை தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். அதற்காக இங்கு பயிற்சி பெற வேண்டிய கைத்தொழில் என்ன? தொழில்துறை சார்ந்த பயிற்சிகள் எவை?

- தகவல் தொழில் நுட்பம் - கணினி

- தையல், பனைவேலை, மெழுகுதிரி உற்பத்தி, நெசவு, அழகியற்கலை, அலங்காரப் பொருள் உற்பத்தி, தச்சுத்தொழில், மரவேலை போன்றவை.

### 5.2.4. கடற்தொழிலை ஊக்குவிக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை செய்துள்ளது?

அரசின் மூலம் பல திட்டங்கள் உள்ளது குறிப்பாக மானியவிலையில் மீன்பிடி பொருட்கள் வழங்கல். இலவசமாக பொருட்கள் வழங்கல், வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் கடல் மீன்வளர்ப்பு, நன்னீர் மீன்வளர்ப்பு போன்ற வாழ்வாதார முயற்சிகளுக்கான ஊக்குவிப்பு செய்யப்படுகிறது. மீன்பிடி படகிற் கான மானிய விலையில் எஞ்சின், எரிபொருள் வழங்கப்படுகிறது. இத்திட்ட செயல்பாடுகள் நாடு திரும்பியவர்களில் தகுதியுடையவர்களுக்கும் வழங்கப்படுகிறது. ஊர் மீன்வளர்ப்பு சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் அரசால் வழங்கப்படும் உதவிகளுக்கு இச்சங்கம் பரிந்துரை செய்யும். நாடு திரும்பியவுடன் ஏற்கனவே மீன்பிடியில் ஈடுபட்டுள்ள உறவினர்களுடன் இணைந்து வேலைக்கு செல்லலாம். பின்தொடர்ந்து அரசு உதவிப்பொருட்களைப் பெற்று மீன்பிடித் தொழிலை சுயமாக செய்து வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது.

### 5.2.5 இலங்கையில் அரசு ஊதியம் போதுமானதாக உள்ளதா?

போதுமானதாகவுள்ளது. மேலும் அரசு வேலையில் கடன் திட்டமும் உள்ளது. ஓய்வுதியமும் கிடைக்கின்றது.

### 5.2.6 இங்கு கற்ற சுயதொழில்களை இலங்கையில் செய்ய அரசு அனுமதி மற்றும் சந்தைப்படுத்தும் வசதி எப்படி உள்ளது?

அரசு சேவையில் தொழில்துறை திணைக்களத்தின் ஊடாகவும், பிரதேச செயலகத்திலும் சந்தை வாய்ப்புகள் உள்ளது. இலங்கையில் ஆடைத் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளது. மற்றும் அரிசி ஆலைகள், இறால் பண்ணைகள், பால்பண்ணைகள் என்பன அதிகமாக உள்ளது.

### 5.2.7 காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை இயங்குகிறதா?

தற்போது இயங்கவில்லை. முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

## 5.3. æ†´ï˜ àKñƒèœ ñŸÁ‹ õ£èùƒèœ

### 5.3.1. இந்தியாவில் கல்வி கற்ற சான்றிதழை பயன்படுத்தி இலங்கையில் ஓட்டுநர் உரிமம்பெற அரசு விசேடஏற்பாடுகள் செய்யவாய்ப்பு உள்ளதா?

இந்தியாவில் பெற்ற அரசுகல்விச் சான்றிதழ் இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படும். அதனை இலங்கை அரசு சான்றிதழாக மாற்றம் செய்து கொடுக்கின்றனர். இந்திய உரிமம் பெற்ற அரசு மோட்டார் சைக்கிள் மற்றும் கார் வாகனங்களின் சான்றிதழை ஏற்றுக்கொண்டு அதை இலங்கைச் சான்றாக மாற்றம் செய்துக் கொடுக்கின்றனர்.

**இதற்கானஆவணங்கள்**

- இந்தியாவில் பயன்படுத்திய வாகன ஓட்டுனர் உரிமங்கள்
- நாடு திரும்பியதற்கான கடவுச்சீட்டு
- இந்திய அகதி அடையாள அட்டை அல்லது வெளிப்பதிவாயின் காவல்துறை பதிவு
- இலங்கை அரசு சார்ந்த மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் மருத்துவச் சான்றிதழ்
- இலங்கை தேசியஅடையாள அட்டை

• ஒட்டுனர் உரிமங்கள் பெறுவதற்கானபணம் ரூபாய் 2500 செலவிடவேண்டும்.

இவைகளை போக்குவரத்து திணைக்களத்தின் கொழும்பு அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு**

• கனரகவாகனங்கள்ஒட்டுனர் சான்றிதழ் இலங்கையில் பரிசீலிக்கப்பட்டு தேர்வு மற்றும் பயிற்சிகள் மூலம் அரசு உத்தியோகத்தர்கள் வாகனத்தை செலுத்தவிட்டு தேர்வில் தேர்ச்சிப்பெற்ற பின் தான் வாகனத்திற்கான ஓட்டுனர் சான்றிதழ்கள் வழக்கப்படும்.

• மோட்டார்சைக்கிள், கார் போன்ற வாகனத்திற்கு தேர்வுபயிற்சிகள் எதுவும் இல்லை. மேலே குறிப்பிட்ட சான்றிதழ்கள் இருந்தால் அப்படியே மாற்றி கொடுக்கின்றனர்.

**போக்குவரத்து விதிமுறைகள்**

• மோட்டார்சைக்கிள் வேகம் நகரத்தின் உள்ளே - 50 (கி.மீ), நகரத்திற்கு வெளியே - 70(கி.மீ) தெருவில் போகும்போது தொடர்ச்சியாக இரண்டு வாகனத்தை கடக்ககூடாது

• தெருவில் போடப்பட்டு இருக்கும் தொடர்கோட்டை விட்டு வாகனம் போகும் போது கடக்கக் கூடாது. அப்படி கடந்தால் அது இலங்கையின் சட்டத்தின்படி குற்றம்.

• தலைக்கவசம் அணிந்து இருக்க வேண்டும்.

• பொது இடங்கள், மருத்துவமனை, நீதிமன்றம் போன்ற இடங்களில் வாகன ஒலி எழுப்பும் கருவியினைப் பயன்படுத்தக்கூடாது.

• குற்றத்தின் தன்மைக்கேற்ப, பிரிவின்படி தண்டப்பணம் வசூலிக்கப்படும்.

• மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்தினால் ஓட்டுனர் உரிமங்கள் தடைசெய்யப்படும் தண்டனையும் உண்டு (சிறைத்தண்டனை).

### 5.3.3 இலங்கையில் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு எவை அடிப்படைத் தகுதிகள்?

இலங்கையில் ஓட்டுனர் உரிமம் பெறுவதற்கு 18 வயது பூர்த்தி அடைந்து இருக்க வேண்டும். கிராமசேவகர் உறுதிப்படுத்திய கடிதம் இருக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும்.

### 5.3.4 இந்தியாவில் இருந்து இலங்கை கொண்டு செல்லும் மோட்டார் சைக்கிளை அங்கு பயன்படுத்த எவ்வாறான பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்?

இந்தியாவில் இருந்து கொண்டு வரும் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்கள் இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதற்கான வழிமுறைகள் தொடர்பாக அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5.3.5 இங்கு பட்டப்படிப்பு முடித்து தாயகம் திரும்புவோரின் தொழில் வேலைவாய்ப்பு, பொருளாதாரம் போன்ற விடயங்களில் எத்தகைய வாய்ப்புகள், வசதிகள் உள்ளன?

• சமவலுச்சான்று பெறப்பட வேண்டும் **(UGC)**

• பிரதேச செயலகத்தில் உள்ள மனிதவள அபிவிருத்தி உத்தியோகஸ்தரிடம் விண்ணப்பம் பெற்று பதிவுசெய்தல்

• மாவட்டசெயலகத்தில் **(EB)** விண்ணப்பப்படிவம் பெற்று பதிவுசெய்தல்

• இலங்கை அரசுவர்த்தமானி விளம்பரங்களை பார்த்து தகுதிகேற்ற வேலைக்கு விண்ணப்பிக்கலாம் 18-35 வயதுக்குள் இருந்தால் அரசு வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்

• தனியார் வேலை அந்தந்த நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப (சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு) வேலைகள் கிடைக்கும். (மேலதிக தகவல்களுக்கு இணையதளங்களைப் பார்க்கலாம்

• அரசு வேலைகளுக்கும் நுழைவுத்தேர்வு எழுத வேண்டும்.

• இந்தியாவில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு இலங்கையில் அரசு அரசு வேலைக்கு அதிகவாய்ப்பு உள்ளது.

• தகவல் தொழில்நுட்பம் தொடர்பான வேலைவாய்ப்பு, தொலைத்தொடர்பு **(telecom)** போன்ற நிறுவனங்களில் வேலை செய்யலாம்

**http://www.gazette.lk/**

**Annexes**

| **பெயர்** | **கல்வித்தகுதி** | **மாவட்டம்** | **உத்தியோகம்** |
|---|---|---|---|
| ஜெயமாலா.**A** | பி.ஏ. வரலாறு | வவுனியா | அபிவிருத்தி உத்தியோகஸ்தர் |
| ஜெயக்குமார்.**P** | பி.ஏ. சமூகவியல் | திருகோணமலை பிரதேசசெயலகம் | வாழ்வின் எழுச்சி முகாமையாளர் |
| லதா.**U** | எம்.ஏ சமூகவியல் | வவுனியா | மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர் |
| அமல்குருஸ் | **BSW** | மன்னார் | சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தர் |
| பிரவின்.**P** | **B.Sc CS** | மன்னார் | பிரதேச செயலகம் முகாமைத்துவ உரிமையாளர் |
| தமயந்தி | **B.Sc** | கிளிநொச்சி | அபிவிருத்தி உத்தியோகஸ்தர் |

# 6.1. Ý õ í ‹

## 6.ஆவணங்களின் முக்கியத்துவம்:

### 6.1.1.பிறப்பு சான்றிதழோ, குடியுரிமையோ பெற தகுதியில்லாத ஒரு குழந்தை இலங்கையில் படிக்கவோ, வேலை வாய்ப்பு பெறவோ, சொத்துக்கள் வாங்கவோ, முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் இவர்களின் வாழ்க்கை நிலை என்ன?

மிகவும் ஆராயப்பட வேண்டிய ஒரு விடயம். குழந்தை இந்தியாவில் உள்ள முகாமில் பிறந்து பதிவு செய்யப் படவில்லையாயின் அவர்களின் குடும்ப பதிவு அட்டையின் விபரங்களை அடிப்படையாக வைத்து அக்குழந்தையின் பிறப்பு இந்தியாவில் பிறந்தது என்பதை உறுதி செய்து, அதன் பின்னர் அங்குள்ள நடவடிக்கைகளை படிப்படியாக மேற்கொள்ள வேண்டும். அதற்கு இங்குள்ள கழகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதன் பின்னர் இலங்கைக்கான **CBC** (தூதரக பிறப்புச்சான்று) **CTS** (குடியுரிமைச் சான்று) பெற்று அவரின் கல்வி ஆவணங்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியும். மேற்கூறிய நடைமுறைகள் சீராக மேற்கொள்ளும் நிலையில் அவரின் வாழ்க்கை நிலையில் சிக்கல் இல்லை.

### 6.1.2 இந்தியரை திருமணம் செய்தவர்களை இலங்கைக்கு அழைத்து செல்வதற்கான வழிகள் என்ன?

இந்தியாவில் அந்நாட்டு சட்டப்படி திருமணம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். திருமண சான்றிதழை அடிப்படையாக வைத்து சுற்றுலா விசாவிற்கு விண்ணபித்து 3 மாத கால விசா பெற்று நாடு திரும்பி இங்கு கிராம சேவையாளர் மூலம் பதிவை மேற்கொண்டு மீண்டும் காவல் நிலையத்தில் பதிவினையும் மேற்கொள்ள வேண்டும். நன்னடத்தையாக செயற்பட்டு தொடர்ந்தும் விசாவை புதுப்பித்து தொடர்ச்சியாக குடும்பமாக இருக்க முடியும். எந்த வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாமல் 06 மாதத்தின் பின்னர் காவல்துறை நற்சான்று பெற்று கிராமசேவையாளர் நன்னடத்தை சான்றினையும் பெற்று நிரந்தர (06) விதிவிலக்கினைப் பெற்று அனுமதி பெற்று இருக்கலாம். ஒரு வருட நிறைவில் கணவன் பிறப்பு சான்றிதழ், குடும்ப

அட்டை, குழந்தையின் பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ், தொடர்ச்சியாக பெற்ற விசாவின் பதிவுகள், இந்திய குடும்ப அட்டை, போன்ற ஆவணங்களுடன் குடியுரிமை பெறலாம்.

### 6.1.3.திருமணத்தை பதிவு செய்யவில்லை.கணவர் இறந்து விட்டார். இங்கு 2 குழந்தைகள் பிறந்துள்ளனர். இவர்கள் நாடு திரும்பும் போது அந்த இரு குழந்தைகளுக்கும் இலங்கை பிறப்புச் சான்று, குடியுரிமைச் சான்று எவ்வாறு பெற முடியும்?

• திருமணத்தை பதிவு செய்ததற்கான கோயில் நிர்வாகத்திடம் திருமணம் நடைபெற்றதற்கான சான்றை பெற்றிட வேண்டும்.

• கணவரின் இறப்புச் சான்றிதழ்

• மனைவியின் பிறப்புச் சான்றிதழ் இருப்பின் இவற்றுடன் பிள்ளைகளின் பிறப்பு சான்றிதழ்களை இணைத்து ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தினூடாக முகாம் அடையாள அட்டை உட்பட தேவையான ஆவணங்களை இணைத்து சென்னையில் உள்ள துணைத் தூதரகத்தில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கான முதற்கட்ட இலங்கை தூதரக சான்றிதழ் பெற்றிட முடியும்.

• 21 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளாக இருப்பின் தூதரகத்திலேயே குடியுரிமைச் சான்றிதலுக்கும் விண்ணப்பித்து பெற்றிட முடியும்.

**முக்கிய குறிப்பு:-**

கணவரின் இந்திய இறப்புச் சான்றிதழை முகாம் விவரங்களுடன் இணைத்து விண்ணப்பம் செய்தால் கணவருக்கான தூதரக இறப்புச்சான்றிதழ் **(CDC)** பெறமுடியும்.

### 6.1.4.இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்பு சான்றிதழ் இந்தியாவில் பெறாமல் செல்லும் நிலையில் இலங்கையில் பிறப்பு மற்றம் குடியுரிமை சான்றிதழைப் பெறுவது எப்படி?

இந்தியாவில் பிறந்த குழந்தைக்கு இந்தியாவில் குழந்தை பிறந்த இடத்தில் பிறப்பு சான்றிதழ் பெற்றுக் கொண்டு வர வேண்டும், அவ்வாறு பிறப்புச் சான்றிதழ் இல்லை எனில் இலங்கையில் பிறப்பு சான்றிதழ் பெற இயலாது. குடியுரிமையும் பெற முடியாது.

**படிமுறை - 1**

இந்தியப் பிறப்பு சான்றிதலுடன் வரும் குழந்தைகளுக்கு இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும், பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகங்களிலும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அவ்விண்ணப்பங்கள் கொழும்பில் மாளிகாவத்தையில் அமைந்துள்ள பதிவாளர் நாயகத் திணைக்களத்திற்கு குறித்த பிரதேச செயலகங்களால் அனுப்பி வைக்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான கடித நகல் ஒன்று உரியவருக்கு வழங்கப்படுகிறது.

**படிமுறை - 2**

சகல ஆவணங்களுடனும் பி6 விண்ணப்பத்தை பூரணப்படுத்தி விண்ணப்பதாரர் கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள பதிலாளர் நாயகத் திணைக்களத்தில் நேரடியாக சென்றும் விண்ணப்பிக்கலாம்.

**முக்கிய குறிப்பு:**

18 வயதிற்கு குறைந்தவர்கள் தூதரகத்திற்கு விண்ணப்பிக்கும்போது தாய் / தந்தையர் நேரடியாக கையளிக்க வேண்டும்.

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களே நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

**6.1.5.கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகங்கள் இலங்கையில் எங்கெங்கு உள்ளது எல்லா நாடுகளுக்கும் செல்வதற்கான கடவுச்சீட்டு விண்ணப்பித்து எத்தனை நாட்களில் கிடைக்கும். விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்கள், நடைமுறைகள் என்ன?**

- வவுனியா மற்றும் கொழும்பில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் உள்ளன.
- ஒரு நாள் சேவையில் ரூ.10000 செலுத்தி உடனடியாக

பெற்றுக் கொள்ளலாம்.

• சாதாரண சேவையாயின் ரூ.3500 செலுத்த வேண்டும். 10 வேலை நாட்களில் கிடைக்கும்

• பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டையின் மூலப் பிரதியுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து **JP** கையெழுத்து பெற்று விண்ணப்பிக்கலாம்.

### 6.1.6. இந்தியாவில் பிறந்த மலையக தமிழர்களாகிய நாங்கள் நீண்டகாலம் அகதியாக இருந்துவிட்டு நாடு திரும்பும்போது எங்களுக்கு எழக்கூடிய பிரச்சனைகள் என்ன?

தற்போதுள்ள நடைமுறையில் இந்திய தமிழர் இலங்கைத் தமிழர் என்கின்ற வேற்றுமை குடியுரிமையில் இல்லை. எல்லோருக்கும் பொதுவான நடைமுறையே உண்டு.

### 6.1.7.இந்தியாவில் பிறந்து 21 வயது நிறைவடைந்து இலங்கை குடியுரிமை பெற முடியாது நாடு திரும்புபவர்கள் அங்கு எவ்வாறு குடியுரிமை பெறுவது?

இந்திய பிறப்புச் சான்றிதழ், இந்திய குடும்ப அட்டை, தாய் தந்தையின் பிறப்பு சான்றிதழ், தாய் தந்தையின் திருமண சான்றிதழ், நாடு திரும்பிய பாஸ்போர்ட், இலங்கையில் வாழ்விடத்தை உறுதிப்படுத்திய **GS, DS** கடிதம், போன்ற ஆவணங்களுடன் உரிய விண்ணப்பத்தை பூர்த்தி செய்த வேண்டும். இதற்கு மேலதிகமாக தாய்வழி பாட்டன் தந்தை வழி பாட்டன் பிறப்பு சான்றிதழ்கள் அல்லது அதனை உறுதிப்படுத்த கூடிய இணைப்பு ஆவணங்கள் தேவை.

விண்ணப்பித்த பின்னர் பாதுகாப்பு அதிகாரிகளின் விசாரணைகள் முடிந்தவுடன் ரூ.25,000 அபராதக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக விண்ணப்பித்து பத்து மாதம் முதல் ஒரு வருடகாலம் வரை செல்லும்.

### 6.1.8.இந்தியப் பெண்ணை திருமணம் செய்து பிறந்த குழந்தைகளுக்கு அவர்களது விருப்பத்திற்கு இணங்க குடியுரிமை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் என்ன?

இதில் எந்த விதமான சிக்கல்களும் இல்லை. குழந்தைகளின் தந்தை இலங்கைக் குடியுரிமை உடையவராக இருப்பதால் குழந்தைகளுக்கு குடியுரிமை எடுக்க முடியும்.

### 6.1.9.கல்விச்சான்று, பிறப்புச் சான்று, இறப்புச் சான்று, திருமணச் சான்று போன்றவற்றில் உள்ள திருத்தங்களை நாடு திரும்புவதற்கு முன்னால் அரசு நடவடிக்கை எடுக்குமா?

இந்திய அரசிடம் இதற்கான கோரிக்கையை நாடு திரும்புவோர் சார்பாக முன் வைத்து தீர்வினை பெற வேண்டும்.

### 6.1.10.இந்தியரைத் திருமணம் செய்தவர்களை இலங்கைக்கு அழைத்துச் செல்வதற்கான வழிகள் என்ன?

- இலங்கை ஆண் இந்தியப் பெண்ணை திருமணம் செய்திருந்தால் இந்திய திருமணச் சான்றிதழுடன் கடவுச்சீட்டு மூலம் இலங்கை திரும்பிடலாம்.
- இலங்கை திரும்பியபின் விசா முடிவடையும் காலங்களை அறிந்து வைத்திருந்து அடிக்கடி விசாவை புதுப்பிக்க வேண்டும்.
- சேவையாளரிடம் குறித்த நபர் தனது குடும்பத்தை பதிவு செய்து வைத்திருக்க வேண்டும்.

### 6.1.11.பிள்ளைகளின் பிறப்புச்சான்று, கல்வி ஆவணங்களில் தகப்பனாரின் பெயர் தவறாக இருக்கும் பட்சத்தில் நாடு திரும்பினால் இச்சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுமா?

தற்போதைய நடைமுறையில் பெயரில் எழுத்துப் பிழைகள் இருந்தால் சத்தியக் கடதாசி **(JP)** மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இரண்டு ஆவணங்களிலும் பெயர் முற்றிலும் மாற்ற வேண்டி இருந்தால் அரசிடம் கோரிக்கை வைத்து நிர்த்தி செய்ய வேண்டும்.

### 6.1.12.இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட திருமணப் பதிவுகளை இலங்கை அரசு எதுவித சிக்கலுமின்றி ஏற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளதா?

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட திருமணப் பதிவு சான்றிதழ்களை இலங்கை அரசு ஏதுவித சிக்கலுமின்றி ஏற்றுக்கொள்கிறது. ஏற்கனவே தாயகம் திரும்பிய பெரும்பாலானோர் இவ்வகை சான்றிதழ்களை தன்வசம் கொண்டு வந்து தமக்கான ஆவண தேவைக்காக அரசு அலுவலகங்களில் சமர்ப்பித்து அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

தூதரக திருமண சான்றிதழ் மாற்றி பெற வேண்டிய அவசியம் பற்றி ஆராயப்பட வேண்டியுள்ளது.

### 6.1.13. இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கு இலங்கை துணை தூதரகத்தால் வழங்கப்பட்ட இலங்கைக் குடியுரிமை சான்று, இலங்கையில் அதே நிலையில் ஏற்றுக் கொள்ளப்படுமா? அல்லது இதனை காண்பித்து இலங்கையில் புதிய சான்று பெற வேண்டுமா?

இலங்கை துணைத் தூதரகத்தால் வழங்கப்பட்ட குடியுரிமை சான்று அதே நிலையில் சகல ஆவணத் தேவைகளுக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதனை பயன்படுத்துவதில் எந்த வித சிக்கலும் இல்லை. அதனை காண்பித்து புதிய சான்று எந்தவித சந்தர்ப்பத்திலும் பெற வேண்டிய அவசியம் இல்லை.

### 6.1.14. இந்தியாவில் பிறந்த 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலங்கை துணை தூதரகத்தில் இலங்கை குடியுரிமை வழங்கப்படுவதில்லை. நாடு திரும்பிய பின்னர் ரூ.25,000/- கால தாமத கட்டணம் செலுத்தி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

நாடு திரும்பிய அகதிகளுக்கான அரசு மட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக அறவிடப்படும், கால தாமதக் கட்டணமாகிய ரூ.25,000/-க்கு விலக்கு அளிக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. இக்கோரிக்கை

பரிசீலிக்கப்பட்டு விலக்களிக்க வாய்ப்பு உண்டு.

**6.1.15.நாடு திரும்புகிறவர்கள் கடவுச்சீட்டு மூலம் இந்தியா வருவதாயின் நாடு திரும்பி எத்தனை நாட்களுக்குள் கடவுச்சீட்டு விசா பெற முடியும்.அதற்கான நடைமுறைகள் என்ன?**

கடவுச்சீட்டு பெற தேவையான அனைத்தும் தன் வசம் வைத்திருந்தால் ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை தேவைப்படும்.

**தேவையான ஆவணங்கள்:**

இந்தியாவில் இருந்து வந்த ஒரு வழி பாஸ்போர்ட், இலங்கை பிறப்புச் சான்றின் மூலப் பிரதி, கிராம சேவையாளரின் உறுதிப்படுத்துதல், இந்திய விசா பெறுவதாயின் விண்ணப்பிப்பவரின் பெயரில் வங்கி கணக்கில் ரூ. 15,000 மிகுதி வைப்பு தொகையாக விண்ணப்பிக்கும் திகதியில் காணப்படல் வேண்டும்.

**6.1.16.அகதி மக்கள் தம் சொந்த நாட்டிற்கு திரும்பிட ஏதுவாக கப்பல் சேவையை நடாத்திட நடவடிக்கை எடுக்கப்படுமா? அவ்வாறு ஆரம்பிக்கப்படும் போது நாம் இங்கு சேர்த்த அனைத்து பொருட்களையும் எடுத்துச் செல்ல அனுமதி கிடைக்குமா? இதன் போது சுங்கத்தீர்வை அற்ற நிலையில் செய்யப்படுகிற நடவடிக்கை என்ன?**

கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கான ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தைகள் இரு நாட்டு அரசாங்க மட்டத்திலும் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.இரு அரசு தரப்பிலும் முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் கப்பல் சேவை ஆரம்பிக்க வாய்ப்புகள் உண்டு. கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் அதிகமான பொருட்களை கொண்டு வர முடியும். நிபந்தனைகள் விதிக்கப்படலாம். இரு நாட்டு அரசு மட்டத்தின் பேச்சு வார்த்தையின் பின்னரே தீர்வு விலக்கு பற்றி முடிவுகள் கிடைக்கும்.

## 6.1.17. தேசிய அடையாள அட்டையைப் பெற வேண்டிய வழிமுறைகள் என்ன?

தாங்கள் தற்போது வசித்து வரும் பகுதிக் கிராம சேவையாளரிடம் தொடர்பு கொண்டு வதிவிடத்தை பதிவு செய்து குடும்ப அட்டையைப் பெற்று, அத்துடன் பிறப்பு சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும். பின்பு கிராம சேவையாளர் ஊடாக இதற்குரிய படிவத்தை பூரணப்படுத்தி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தேவையான ஆவணங்கள்:-**

- குடும்ப அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- புகைப்படம் 4
- முத்திரை (பெறுமதியான முத்திரை)

**முக்கிய குறிப்பு**

இலங்கையில் 16 வயது பூர்த்தியானவுடன் கட்டாயமாக தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். கால தாமதமாக விண்ணப்பம் செய்தால் தண்டப் பணமும் அறவிடப்படும். அத்துடன் தண்டப்பணத்துடன் தேசிய அடையாள அட்டை வழங்கப்படும்.

## 6.1.18. கலவர காலங்களில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்பு பதியப்படாமல் இங்கு அழைத்து வரப்பட்டவர்கள் நாடு திரும்பும்போது அவர்களுக்கு பிறப்புச்சான்றிதழ் பதிவு செய்திட விசேட ஒழுங்கு என்ன?

- விசேட ஒழுங்கு என்று ஒன்றும் இல்லை.
- இலங்கையில் காலம் கடந்த பிறப்புக்களை பதிவு செய்யும் வகையில் சட்டம் உள்ளது.
- இலங்கையில் பிறந்த எந்த நபரும் எந்த இடத்தில் பிறந்தார் என்று அவருக்கு தெரியும் என்றால் அந்த இடத்தின் பிரதேச செயலகத்திற்கு சென்று விண்ணப்பம் செய்திட முடியும்.

**விபரம் பின்வருமாறு**

**படிமுறை 1)**

குறித்த நபர் அந்த பிரதேச செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பம் செய்யப்பட்டு பிறப்பு பதியப்படவில்லை என்று ஒரு தேடுதல் விளைவுச் சான்று பெற்றிட வேண்டும்.

**படிமுறை 2)**

பெற்ற தேடுதல் விளைவுச் சான்றை அதே பிரதேச செயலக பதிவாளர் பிரிவில் வழங்கி /காட்டி காலம் கடந்த பிறப்புக்கு விண்ணப்பம் தாருங்கள் என்று அதற்கான விண்ணப்பப்படிவ தொகுதிகளைப் பெற்றிட வேண்டும். 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் என்றால் தாய்/தந்தை விண்ணப்பங்களை பூரணப்படுத்தி பதிவாளர் பிரிவில் கையளிக்க வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்டவர் எனில் அவரே பூரணப்படுத்தி நேரடியாக விண்ணப்பம் செய்யலாம்.

**முக்கிய குறிப்பு**

- தங்கள் விண்ணப்பம் என்ன நிலையில் உள்ளது/மேலதிக விபரம் தேவையா என விண்ணப்பம் பெறுவோர்களை அடிக்கடி சந்தித்து வருவதால் குறைந்த பட்சம் ஒரு மாதத்தில் பிறப்புச் சான்றிதழை விரைவாக பெறமுடியும்.

- மேற்படி சான்றிதழை விரைவாக பெற்றிட வேண்டுமானால் தாயகம் திரும்பியதை காலம் தாழ்த்தாது தங்கள் வசிப்பிட கிராம சேவையாளரிடம் தங்கள் வருகையைப் பதிவு செய்தல் முக்கியமானது.

### 6.1.19.தொலைந்து போன எங்கள் பெற்றோர்களின் பிறப்புச் சான்றிதழ்களை இலங்கையில் கால தாமதமின்றி எப்படி பெற முடியும்?

**5 படிவம் நிரப்புதல் :**

**விண்ணப்பம் செய்பவர் பெயர் :**

**விண்ணப்பம் பெற இருப்பவர் பெயர்:**

**பிறந்த இடம்** ..................................... :

**பிறந்த கிராமம்** ..................................... :

**பிறப்பு நடந்த இடம்: வைத்தியசாலை** :
**வீடு** :

**தந்தையின் முழுப்பெயர்** :

**தாயின் கன்னிப் பெயர்** :

**பிறப்பு அத்தாட்சிப் பத்திர இல** :

**பிறப்புப் பதிவு செய்த திகதி** :

**பிறப்பு பதிவு செய்த இடம்** :

மேற்படி தகவல்களுடன் பிறப்பு/இறப்பு பதிவாளர் அலுவலகம் சென்று படிவம் நிரப்பி பெற்றுக் கொள்ள முடியும்.

### 6.1.20.சான்றிதழ்களிலுள்ள திருத்தங்களை ஏற்றுக்கொள்ள அரசு ஏதேனும் விசேட ஏற்பாடுகள் செய்துள்ளதா?

பிறப்பு/இறப்பு சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான சட்டப்பிரிவுகள் ஏற்கனவே உள்ளது. திருத்தம் செய்யப்பட வேண்டிய ஆவணங்களின் தன்மையைப் பொறுத்து மூலப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். திருத்தம் செய்யப்பட வேண்டிய ஆவணப் பிரதியுடன் உறுதி செய்யக் கூடிய ஆவணங்களை இணைத்து தங்கள் பிரிவிலுள்ள பிறப்பு/இறப்பு அலுவலகத்தில் திருத்தம் செய்யலாம்.

### குறிப்பு:

ஓர் பிறப்பு/இறப்பு சான்றிதழின் ஒவ்வொரு கூறுகளிலும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களிலும் பிறப்பு/இறப்பு பதிவாளர் பகுதியில் பெற்று விண்ணப்பிக்கலாம். பெற்றுக்கொள்ளும் விண்ணப்பங்களுடன் எவ்வாறான விபரங்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற துண்டுப் பிரசுரமும் இணைக்கப்பட்டுள்ளது.

### 6.1.21. நாடு திரும்புகிறவர்கள் கடவுச்சீட்டு மூலம் இந்தியா வருவதாயின் நாடு திரும்பி எத்தனை நாட்களுக்குள் கடவுச்சீட்டு விசா பெற முடியும். அதற்கான நடைமுறைகள் என்ன?

கடவுச்சீட்டு பெற தேவையான அனைத்தும் தன் வசம் வைத்திருந்தால் ஒரு வாரம் முதல் ஒரு மாதம் வரை தேவைப்படும்.

**தேவையான ஆவணங்கள்:**

இந்தியாவில் இருந்து வந்த ஒரு வழி பாஸ்போர்ட், இலங்கை பிறப்புச் சான்றின் மூலப் பிரதி, கிராம சேவையாளரின் உறுதிப்படுத்துதல், இந்திய விசா பெறுவதாயின் விண்ணப்பிப்பவரின் பெயரில் வங்கி கணக்கில் ரூ. 15,000 மிகுதி வைப்பு தொகையாக விண்ணப்பிக்கும் திகதியில் காணப்படல் வேண்டும்.

தேவையான ஆவணங்கள் வைத்திருந்தால் ஒரு வாரம் முதல் 3 மாதம் வரை. (இந்தியாவில் இருந்து வந்த ஒரு வழி கடவுச்சீட்டு, இலங்கை பிறப்பு சான்று மூலப் பிரதி, கிராம சேவையாளர் உறுதிப்படுத்துதல், இந்திய விசா பெறுவதாயின் விண்ணப்பிப்பவரின் பெயரில் வங்கி கணக்கில் ரூ.15000 மிகுதி விண்ணப்பிக்கும் திகதியில் காணப்படல் வேண்டும்.

### 6.1.22.ஒரே அகதிப் பதிவில் இரு குடும்பங்கள் உள்ளனர். இவர்கள் நாடு திரும்பும் போது தனித்தனி குடும்பங்களாக பதிவு செய்து நிவாரண உதவிகள் வழங்கப்பட வாய்ப்பு உள்ளதா?

இந்தியாவில் குடும்ப பதிவில் ஒரே குடும்பங்களாக இருந்தால் நாடு திரும்பிய பின்னர் வெவ்வேறு குடும்பங்களாக பதிவினை மேற்கொண்டு நிவாரண உதவிகள் பெற்றுக் கொள்ள எந்த வித சிக்கலும் இல்லை.

### 6.1.23. இலங்கை குடியுரிமை இருந்தும் எங்கள் தலைமுறைக் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழில் இந்தியத் தமிழன் என்று எழுதுகிறார்கள். நாடு திரும்பும்போது இந்த குழந்தைகளுக்கு அரசு வேலை வாய்ப்பில் சிக்கல் ஏற்படாதா?

- தந்தை பரம்பரை மூலம் இலங்கை குடியுரிமையுடையவர்:
- தந்தையின் பரம்பரையை வைத்து குடியுரிமை

மேற்படி இரு விபரங்களையும் ஆதாரமாக வைத்து வேலைக்கு விண்ணப்பம் செய்யலாம். இதில் சிக்கல்கள் ஏதும் ஏற்படாது.

### 6.1.24. இலங்கை பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்படுமா?

இலங்கை பிறப்புச் சான்றிதழ் இல்லாமல் தேசிய அடையாள அட்டை பெற முடியாது. இதற்கான மாற்று வழிமுறைகள். அவரது உத்தேச வயது சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அவருக்கான தேசிய அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ள முடியும்.

### 6.1.25. இலங்கையில் தாய் தந்தை, காலி, மாத்தளை போன்ற தென்பகுதியில் பிறந்தவர்களின் பிறப்பு சான்றுகள் இன்னும் பெற முடியவில்லை. இவர்களின் குழந்தைகளுக்கு இலங்கை தூதரகச் சான்றிதழ், குடியுரிமை சான்று பெறுவது எப்படி?

இலங்கையில் தென்பகுதிகளில் பிறந்தவர்களுக்கான பிறப்பு பதிவு முறைப்படி பதியப்பட்டிருந்தால் அதனை அந்தந்த மாவட்ட காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அவை பதியப்படவில்லையாயின் விண்ணப்பித்து கிடைக்கக்கூடிய தேடுதல் விளைவு சான்று பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட பிறப்பு சான்றோ அல்லது தேடுதல் விளைவு பெற்றுக் கொண்டால் அவர்களின் தூதரகப் பிறப்புச் சான்றிதழ், இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழ் **CBC, CTS** பெறுவதற்கு எந்தவித சிக்கல்களும் இல்லை. மேற்குறிப்பிட்ட 02 ஆவணங்களை வைத்து வழக்கமான **CBC, CTS** பெற்றுக்கொள்ள தேவையான இணைப்பு ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ள முடியும்.

**CBC,** தூதரக பிறப்பு சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் இடம் கொழும்பு மாளிகாவத்தை (இணைப்பில் உள்ளது)

**CTS** குடியுரிமைப் படிவம் பெற்றுக்கொள்ளும் இடம் கொழும்பு குடிவரவு திணைக்களம் (இணைப்பில் உள்ளது)

### 6.1.26. இலங்கை சென்றவுடன் வெளிநாடு செல்ல போதிய ஆவணங்களை இலங்கை அரசு எதுவித சிக்கலும் இன்றி வழங்க வாய்ப்பு உள்ளதா?

இலங்கை வந்த ஒருவர் தான் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டுமாயின் பின்வரும் ஆவணங்கள் முறைப்படி பெற்றுக்கொண்டு செல்வதற்கு எந்தவித தடைகளும் இல்லை.

- நாடு திரும்பிய பின்னர் முறைப்படி பிறப்புச் சான்றிதழ் பெற வேண்டும்.
- பிறப்புச் சான்றிதழ் பெற்றவுடன் அவரது அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- கடவுச்சீட்டை புதுப்பித்தல் வேண்டும்.
- அதன் பின்னர் அவர் செல்ல விரும்பும் நாட்டிற்கான விசாவினை முறைப்படி பெற்று செல்ல முடியும்.
- மேற்படி படிமுறைகளை சரியான வகையில் பெற்றுக்கொள்ளும் போது எந்தவித தடைகளும் இல்லை.

**குறிப்பு:**

- பிறப்பு சான்று பெற்றுக்கொள்ளும் இடம் (இணைப்பில் உள்ளது)
- தேசிய அடையாள அட்டை பெறும் இடம் (இணைப்பில் உள்ளது)
- கடவுச் சீட்டு பெறும் இடம் (இணைப்பில் உள்ளது)

### 6.1.27. கலவரங்களின் போது அகால மரணடைந்திருந்தால், அவர்களின் இறப்பினை பதிவு செய்ய, சிறப்பு ஏற்பாடுகள் ஏதேனும் உள்ளதா?

இதற்கென சிறப்பு சட்டங்கள் எதுவும் இல்லை. ஏற்கெனவே நடைமுறையிலுள்ள சட்டங்களின் அடிப்படையில் பதிவு செய்திடலாம். (அதாவது காவல்துறை சான்று அல்லது உடற்கூறு ஆய்வு அறிக்கை, மருத்துவமனை அறிக்கை, நேரடி சாட்சிகள்)

### 6.1.28. மலையக பகுதிகளில் பிறந்த பலருக்கும் தங்களது பிறப்பு தொடர்பான எந்த ஆவணமும் இல்லை. பெற்றோர்களும் இறந்துவிட்டனர். இந்த நிலையில் நாடு திரும்பினால் பிறப்புச்சான்று, தேசிய அடையாள அட்டை என்பவற்றை எவ்வாறு பெறுவது?

உலகில் எங்கு பிறந்தாலும் பிறந்த இடத்தில் பதிவினை மேற்கொள்ள வேண்டும். இதற்கான பதிவு மேற்கொண்டு இருந்தால் அந்த ஆவணங்கள் பிரதேச, மத்திய பதிவேட்டு அறைகளிலும், கணனியிலும் இருக்கும். தேவை ஏற்பட்டு விண்ணப்பித்தால் அவற்றினை பெற முடியும். பதிவு செய்யப்படவில்லை எனில் பிறப்பு பதியப்படவில்லை என்ற சான்றினை பெற்று பிறப்பு சான்றினை பெற்றுக் கொள்ளலாம்.

### 6.1.30. தொலைந்து போன அல்லது கிழிந்துபோன தேசிய அடையாள அட்டைகளுக்கு பதிலாக புதிய அடையாள அட்டைகள் உடனடியாக வழங்கிட ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? எவ்வாறு புதிப்பிக்கலாம்?

இலங்கையில் தொலைந்து போன அல்லது கிழிந்து போன தேசிய அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

முதலில் தொலைந்து போன அடையாள அட்டையில் நகல் பிரதி அல்லது அடையாள அட்டையின் குறியீட்டு எண்ணைக் குறிப்பிட்டு தொலைந்து போன இடம் மற்றும் தொலைந்த விதம் போன்ற தகவல்களை கொண்ட புகார் மனுவினை சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தில் பதிவு செய்து, அதன் நகல் பிரதியை பெற்று

சம்மந்தப்பட்ட கிராம சேவகரிடம் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கிராம சேவகர் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தேசிய அடையாள அட்டை தொலைந்ததை/அல்லது கிழிந்து பழுதடைந்ததை உறுதிப்படுத்தி கையொப்பமிட்டு அதை இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள தேசிய அடையாள அட்டை வழங்கல் பிரிவுக்கு அனுப்பி வைப்பார். அங்கு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்ட பின்பு, குறிப்பிட்ட அளவில் கட்டணம் செலுத்தி ஒரே நாளில், புதிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ள முடியும், என்ற திட்டம் இலங்கை அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**6.1.31. 1983ம் ஆண்டு அகதிகளாக இலங்கையிலிருந்து இந்தியா வந்தவர்களில் சிலருக்கு குழந்தைகள் பிறந்துள்ளது. இந்த குழந்தைகளுக்கு பிறப்புச்சான்று பெறாமலே நாடு திரும்பி மீண்டும் இந்தியா வந்தவர்கள், இக்குழந்தை திருமணமாகி அவர்களுக்கு குழந்தைகள் பிறந்துள்ளது. இரண்டு தலைமுறைக்கும் இலங்கை பிறப்புச்சான்று குடியுரிமைச்சான்று இல்லாத நிலை. இப்படியானவர்களுக்கு என்ன செய்வது?**

**பெற்றோருக்கு:**

1. தேடுதல் விண்ணப்பம் செய்தல்
2. தாய் தந்தையின் பிறப்புச் சான்று
3. திருமணச் சான்று
4. சகோதரரின் பிறப்புச் சான்று
5. இந்திய குடும்ப அட்டை
6. இலங்கை குடும்ப அட்டை

7. தாய் தந்தை பிறப்புச் சான்று இல்லை என்றால் பாட்டன் பாட்டியின் பிறப்புச் சான்று இணைக்கலாம்.

8. இவை அனைத்தும் இல்லை என்றாலும் உத்தேச வயது சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம்.

9. தாங்கள் தெரிவிக்கும் தகவலின் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படும்.

**குழந்தைகளுக்கு:**

1. பெற்றோரின் பிறப்புச் சான்று
2. திருமணச்சான்று
3. பிள்ளையின் இந்திய பிறப்புச் சான்று
4. இந்திய குடும்ப அட்டை
5. கடவுச் சீட்டு
6. கிராம சேவையாளரின் உறுதிப்படுத்துதல் கடிதம்
7. இலங்கை குடும்ப அட்டை
8. விண்ணப்ப படிவம்
9. தூதரக சான்றிதழாக மாற்றி மேற்கொண்ட ஆவணங்களை சமர்ப்பித்து குடியுரிமை விண்ணப்பம் நிரப்பிப் பெறல் வேண்டும்.

**6.1.32. கணவரும் இறந்துவிட்டார், மனைவியும் இறந்துவிட்டார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். பெற்றோருக்கு எந்த வித ஆவணங்களும் இல்லை - குழந்தைகள் பாட்டியின் பராமரிப்பில் உள்ளனர். இவர்கள் நாடு திரும்பினால் ஏற்படக்கூடிய சிக்கல்களுக்கு பதில் என்ன?**

1. பெற்றோருடன் குழந்தைகள் இணைந்து எடுத்த முகாம் குடும்ப அட்டை
2. பெற்றோரின் இறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
3. பெற்றோரின் இந்திய நிவாரண அட்டை
4. தற்போது பாட்டியுடன் இணைந்த குடும்ப அட்டை.

மேற்குறிப்பிட்டவை இவர்கள் வசித்து வந்த முகாமில் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றை பெற்றுக்கொண்டு தாயகம் திரும்பிய பின்:-

- கிராம சேவகர் (வதிவிட) பதிவு

- இலங்கை குடும்ப அட்டை
- குழந்தைகளின் இந்திய பிறப்பு சான்றுப் பத்திரம்
- குழந்தைகளின் வைத்திய **(clinic)** சான்றுக் குறிப்புகள் **(baby card)**

**மு.குறிப்பு:**

இந்தியாவில் இருந்து கொண்டே மேற்படி விபரங்களை கொண்ட குழந்தைகளுக்கும் இலங்கை தூதரக பிறப்பு சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்தியாவில் உள்ள துணை தூதரகத்தில் பிறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பிக்க முடியும்.

**இணைக்க வேண்டிய ஆவணங்கள்:-**

1. முகாம் அடையாள அட்டை (பெற்றோருடன் இணைந்து எடுத்தது)
2. பெற்றோரின் இறப்பு சான்றிதழ்
3. நிவாரண அட்டை

**குறிப்பு:**

பிள்ளைகளுக்கு தூதரக பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பம் செய்வதற்கு முன் பெற்றோர்களுக்கான தூதரக இறப்பு சான்றிதழ் பெற்றிட முடியும்.

**6.1.33 முதல் திருமணத்தைப் பதிவு செய்யவில்லை கணவரோ அல்லது மனைவியோ இறந்துவிட்டனர். அவர்களுக்கு குழந்தைகள் உள்ளனர். உயிருடன் இருப்பவர் மறு திருமணம் செய்து திருமணத்தை பதிவு செய்து உள்ளார். இவர்கள் நாடு திரும்பும் போது இக் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்று, குடியுரிமைச் சான்று பெற என்ன செய்ய வேண்டும்?**

1. குழந்தைகள் பெற்றோருடன் இணைந்து எடுக்கப்பட்ட குடும்ப அட்டை
2. இறப்புக்கு உரியவரின் மரணச் சான்று

3. குழந்தைகளுடன் இணைந்து பெற்றுக் கொண்ட நிவாரண அட்டை.

4. உரிய முகாம் தாசில்தாரின் இறப்பை உறுதி செய்த கடிதம் (மனு)

5. தற்போது குழந்தை இணைந்து இருப்பவர்களது பதிவு அட்டை.

தாய் அல்லது தந்தை - உயிருடன் இருப்பவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

குழந்தைகளின் அத்தாட்சிப்பத்திரம் இவற்றுடன், இந்தியாவில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் சென்று பிறப்புச் சான்றினை பெற்றுக் கொள்ள முடியும்.

2002ம் ஆண்டு குடியுரிமை திருத்த சட்டத்தின் கீழ் இலங்கையில் பிறந்த அனைவரும் இலங்கை குடியுரிமை பெற்றவர்கள். இந்தியாவில் முகாம்களில் வசித்தாலும் அவர்கள் இலங்கையில் வசித்தவர்களாக கருதி அவர்களின் பிள்ளைகள் எவ்வித சிரமமும் இன்றி வழக்கமாக நடைமுறையிலுள்ள குடியுரிமை சட்டத்தின் கீழ் பதிவினை மேற்கொள்ளலாம்.

### 6.1.34 இலங்கையில் குடியுரிமை, இலங்கைக்கான பிறப்புச்சான்றிதழ், இலங்கையின் தேசிய அடையாள அட்டை பெறுதல் ஆகியவற்றிற்கான முகவரியையும், தொடர்பு எண்ணையும் குறிப்பிடுக?

விபரம் இணைப்பில் உள்ளது.

### 6.1.35 இந்தியாவிற்கு வரும் வழியில் மரணித்தவர்கள், போரினால் மரணித்தவர்கள் ஆகியாருக்கு இலங்கையில் மரணச்சான்றினை பெற முடியுமா? வழிவகை என்ன?

இந்தியாவிற்குப் போகும் வழியில் எந்த இடத்தில் மரணம் ஏற்பட்டதோ, அந்த இடத்தில் வழக்குப் பதிவு செய்து இரண்டு சாட்சியங்களுடன் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் இறப்புச்சான்றிதழுக்கு விண்ணப்பம் செய்ய முடியும்.

## 7.1. ºFÒõ˜èœ, ñ£ŸÁˆFøù£Oèœ, è í õó£™ ¬èMìŠð†«ì£˜, Mî¬õèœ, Ý îóõŸ«ø£˜èœ

### 7.1.1. முதியோர்க்கான அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் சலுகைகள், மருத்து வசதிகள், பராமரிப்பு தொடர்பாக என்னென்ன வசதி வாய்ப்புகள் உள்ளன

70 வயதுக்குமேற்பட்ட முதியோர்களுக்கு அரசு மாதந்தோறும் ரூ.1000 சமூகசேவைகள் திணைக்களத்துடன் இணைந்து வழங்குகின்றது. அரசு மற்றும் தனியார் முதியோர் இல்லங்கள் உள்ளன.

எந்த ஒரு முதியோரும் சலுகைகளை பெறுவதற்கு காத்திருக்க வேண்டியதில்லை. முன்னுரிமை வழங்கப்படுகிறது. சலுகை விலையில் பயணச்சீட்டும் வழங்கப்படுகிறது. மேலும் சிறப்பு மருத்துவ சிகிச்சை முறைகளில் முன்னுரிமை உள்ளது.

முதியோர்களுக்கு நிலையான வைப்புகளுக்கு கௌரவ வட்டிவீதம் (உயர்ந்த வட்டிவீதம்) வங்கிகளில் வழங்கப்படுகின்றன.

அந்திமகால சகாயநிதி (மரணச் சடங்குகளுக்கான சேமிப்பு நிதி) திட்டத்தில் இணைந்தால் இறுதி சடங்கிற்கான உதவி வழங்கப்படும்.

இது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் உள்ள சமூக சேவைப்பகுதி ஊடாக தபால் நிலையத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இது நபருக்கு நபர் மாறுபடலாம். 250 முதல் 500 வரை.

### 7.1.2. மாற்றுத் திறனாளியாகிய எனக்கு இலங்கை அரசு வேலையில் முன்னுரிமை கிடைக்குமா?

60 வீதத்திற்கு மேல் மாற்று வலுவுள்ளோர்களாயின் அவர்களுக்கு மாந்தோறும் 3000ம்-வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்பு, கல்வியில் முன்னுரிமை வழங்கப்படுகிறது

அரசின் அனைத்து திட்டங்களிலும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

சுயதொழில் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

பிரதேச செயலகத்தில் **(DS Office)** உள்ள சமூக சேவைபிரிவின் **(SSO)** ஊடாக விதவைகள், கைவிடப்பட்டோருக்கான, ஆதரவற்றோருக்கான, நலத்திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கத்தின் புதிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அண்மை காலங்களில் மாற்றுத் திறனாளிகளின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் மதித்து அதற்கேற்ற வகையில் அவர்களுக்கான கல்வி, மருத்துவ வசதிகள், விளையாட்டு, போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு, தொழிற்பயிற்சிகளும் அதற்கேற்ற வேலை வாய்ப்புகளும் சட்டரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

மாற்றுதிறனாளிகளின் சதவிகிதத்திற்கேற்ப அவர்களுக்கு தற்போது சட்டரீதியாக சகல துறைகளிலும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

### 7.1.3. தமிழர் பகுதிகளில் அதிகமான விதவைகள் உள்ளதாகவும், அவர்களை பலர் தவறாக பயன்படுத்தி வருவதாகவும் செய்திகள் வருகின்றதே உண்மையா?

தமிழர் பகுதிகளில் அதிகமான விதவைகள் இருப்பதாக முழுமையாகக் கூறிவிட முடியாது. இருப்பினும் அவ்வாறானவர் தவறான முறைகளில் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் அவர்களை பாதுகாக்கும் விதமாக ஒவ்வொரு கிராமப் பகுதிகளிலும் அவசர பொலிஸ் உதவிக்கான தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பெண்கள் மற்றும் கைவிடப்பட்ட பெண்கள் என்ற அடிப்படையிலான பல்வேறு விழிப்புணர்வு செயற்திட்டங்கள் அரசினாலும் ஏனைய சமூக நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## 7.1.4. போரினால் பெற்றோரை இழந்தவர்கள், கைகால்களை இழந்தவர்கள், இவர்களைப் பராமரிப்பவர்கள் அரசா, தொண்டு நிறுவனங்களா?

போரினால் பெற்றோரை இழந்தவர்கள், கைகால்களை இழந்தவர்களுக்கு அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. பெற்றோரை இழந்தவர்களுக்கு அரசினால் மாதம் 3000- வீதம் வழங்கப்படுகின்றது.

2. கை,கால்களை இழந்தவர்களுக்கு உதவித் தொகையும் மற்றும் அவர்களுக்குத் தேவையான பயன்படுத்தும் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

3. பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக மாதம் தோறும் 1000/= வழங்கப்படுகிறது.

4. அரசுசார்பற்ற நிறுவனங்களால் மாற்று கை, கால் உபகரணங்களும், சுயதொழில் வேலைவாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன.

5. பெற்றோரை இழந்தவர்கள், கை கால்களை இழந்தவர்களுக்கு வீட்டு திட்டத்தில் வீடு வழங்கப்படுகிறது.

## 7.1.5. நாடு திரும்பும்போது மாற்றுத் திறனாளிகளுக்கு இந்தியாவில் வழங்குவது போன்று உதவித்தொகை வழங்கப்படுகிறதா? அதனைப் பெற என்ன செய்யவேண்டும்?

நாடு திரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பல்வேறு சலுகைகளை செய்து வருகிறது. அந்த வகையில்

1. அவர்களுக்கான உதவிதொகை (3000ம்/-)
2. தொழிற் பயிற்சிகள்
3. தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
4. அவர்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அவர்கள் பெற்றுக்

கொள்வதற்கு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் அதற்கான சிறப்பு பிரிவுகளை ஏற்படுத்தி நடைமுறைப் படுத்தியுள்ளது.

**7.1.6 தமிழக முகாம்களில் அரசு பணக்கொடையை மட்டுமே நம்பி சில முதியோர் வாழ்கின்றனர். உறவு என்று சொல்வதற்கு அவர்களுக்கு யாரும் இல்லை. இவர்கள் நாடு திரும்பும்போது அவர்களை பராமரிக்க ஏதேனும் விசேட ஏற்பாடுகள் உருவாக்கப்படுமா? தமிழ்ப் பகுதிகளில் முதியோர் இல்லங்கள் ஏதேனும் உள்ளதா? இதன் பராமரிப்பில் அரசின் செயற்பாடு என்ன?**

தமிழக முகாம்களில் முதியோர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிதொகையினை போன்று இலங்கையிலும் காணப்படுகின்றது. முதியோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கான நிதி, மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் இலங்கையில் மாவட்ட, பிரதேச ரீதியில் முதியோர் இல்லங்கள் உருவாக்கப் பட்டுள்ளதுடன் அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து அவர்களுக்கான பாதுகாப்புடன் அடிப்படை வசதிகளை வழங்கி அவர்களை பாதுகாத்து வருகின்றனர். இதே போன்று அவர்களுக்கான முதியோர் கொடுப்பனவும் மாதாந்தம் பிரதேச சேவையாளர் ஊடாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முதியோர் இல்லங்களின் செயற்பாடுகளை பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் பணிபுரிகின்ற சமூகசேவை உத்தியோகஸ்தர், சிறுவர் பெண்கள் முதியோர் பாதுகாப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாகக் கண்காணித்து தேவையான சட்ட நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்தப்பட்டுத்தி வருகின்றனர். மேலும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் நிதிமற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய அபிவிருத்தி சார்ந்த விடயங்களையும் அரசுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

### 7.1.7 இலங்கையில் நலிவடைந்த பிரிவினருக்கான அரசு நலத்திட்ட உதவிகள் சமூகசேவை பகுதியின் ஊடாக வழங்கப்படுகிறது என தகவல் அறிந்தோம். இவற்றை பெறுவதற்கான வழிமுறைகள் என்ன?

**சமுர்த்தி திட்டம்**

இலங்கை அரசாங்கத்தினால் வறுமை ஒழிப்பிற்காக தேசிய அடிப்படையில் வாழ்வெழுச்சி திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டமே சமுர்த்தி திட்டம் ஆகும். மாவட்டம், பிரதேசம் என்ற அடிப்படையில் பயனாளிகளின் எண்ணிக்கையை திணைக்களம் வரையறை செய்துள்ளது. குறித்த வரையறுக்குள்ளேயே இத்திட்டத்தின் பயனாளர்கள் எண்ணிக்கை காணப்படும். குறித்த வருமான இலக்கினைப் பயனாளி குடும்பம் அடைந்தவுடன் அவர் பயனாளி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு புதிய பயனாளிகள் அந்த வெற்றிடத்திற்கு வாழ்வின் எழுச்சி திணைக்கள உத்தியோகத்தரினால் சிபார்சு செய்யப்பட்டு பிரதேச செயலாளரின் அனுமதியுடன் சேர்த்துக் கொள்ளப்படுவார். இந்த திட்டத்தில் இணைந்து கொள்வதற்கான அடிப்படைத் தகமை குடும்பத்தின் மாதாந்த வருமானம் 3500 உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

**இத்திட்டத்தின் மூலம் மக்களுக்கு**

- இலவச முத்திரை
- 1 மற்றும் 2 நபர்களுக்கு 1500 மாதாந்தம்
- 3 நபர்களுக்கு 2500 மாதாந்தம்
- 4 நபர்களுக்கும் அதற்கு மேலும் - 3500 மாதாந்தம்
- வாழ்வாதாரக் கடன் 100000 ரூபா வரை வழங்கப்படும், அதை மானிய அடிப்படையில் அதாவது 50%மட்டும் மீளச் செலுத்துதல் வேண்டும்.

**குழுக் கடன் திட்டம்:**

- குழு சேமிப்பின் அடிப்படையில் வாழ்வெழுச்சி வங்கிகள் மூலம் 25000 முதல் 50000 வரை 5% - 8%வட்டியுடன் கடன்

வழங்கப்படும்.

• சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளுக்கு உதவியாக மரணச் உதவிச் செலவு 15000 வழங்கப்படும்.

• முத்திரைப் பயனாளிகளுக்கு 3 பிரசவங்களுக்கு 7500/- ரூபாய் வீதம் வழங்கப்படும்.

• குடும்ப தலைவன் அல்லது தலைவிக்கு வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் 5 நாட்களுக்கு மேற்பட்டும் 30 நாட்களுக்கு உட்பட்டும் இருந்தால் ஒரு நாளுக்கு 250 வீதம் 30 நாட்கள் வழங்கப்படும்.

• திருமண உதவி 7500.00 வழங்கப்படும்.

• பயனாளிகளுக்கு வருடாந்த சீட்டிழுப்பு நடாத்தப்பட்டு வெற்றியாளருக்கு பரிசுத் தொகையாக ரூபா 200000.00/- வழங்கப்படுகின்றது.

**கல்வி உதவி**

சமுர்த்தி நன்மைபெறும் குடும்பத்தில் க.பொ.த (சா.த) **O/L** தேர்வில் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூபாய் 1500/- மாதாந்தம் வழங்கப்படும்.

**முதியோர் விதவைகள் உதவித்திட்டம்**

• முதியோர் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்

• மாதாந்த வருமானம் 3500 உட்பட்டவர்கள்.

• மாதாந்தம் 2000 வழங்கப்படும்

• கிராம சேவையாளர் ஊடாக சிபாரிசு செய்யப்பட்டு பிரதேச செயலக சமூக சேவை கிளையினால் வழங்கப்படும்.

• மாதாந்த கொடுப்பனவினை தபால் நிலையம் ஊடாக பெற்றுக் கொள்ளலாம்

**விதவைகள், பெண் தலைமைத்துவ குடும்பம்**

பிரதேச செயலகத்தின் சமூக சேவை கிளை உத்தியோகத்தரினால் **(SSO)** கிராம சேவையாளரின் சிபாரிசுடன்

மாதாந்தம் ரூபாய் 500/- முதல் 750/- வரை வழங்கப்படும். தொழிலுக்கான நன்கொடையாக அத்தொழில் செய்வதற்கான பொருளாதாரத்தேவை மற்றும் அத்தொழிலில் அவர்கொண்டுள்ள தகைமைகளின் அடிப்படையில் ரூபாய் 30,000/- வரை உதவித்தொகையாக வழங்கப்படுன்றது.

### மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி திட்டம்

மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான உபகரணம் இலவசமாக வழங்கப்படும். உதாரணம்: ஊன்றுகோல், முச்சக்கரவண்டி, கண்புரை சாதனம் மற்றும் கண்ணாடி.

### கர்ப்பிணி பெண்களுக்கான உதவித்திட்டம்

கர்ப்பிணிகளின் கர்ப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாதாந்தம் 2000 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு 20000 ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் இலவசமாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் (வழங்கப்படும் பொருட்கள்: அரிசி, உளுந்து, பயறு, கௌப்பி, கடலை, நிலக்கடலை, நெத்தலி கருவாடு, முட்டை, டின்மீன், பருப்பு, சோயா இவற்றில் விரும்பிய 9 உணவுகளை பெற்றுக்கொள்ள முடியும்)

### சிறுநீரக பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான உதவித்திட்டம்

- சிறுநீரக பாதிப்பிற்க்கு உள்ளவர்கள் மாதாந்தம் 1000 ரூபாய் அரசு உத்தியோகத்தர்கள் அல்லாதவர்கள் சமூக சேவைக் கிளையின் ஊடாக பெற்றுக் கொள்ளமுடியும்.

### நலிவடைந்தோருக்கான வீடு திருத்தத் திட்டம்

இத்திட்டத்தில் வீட்டுத் திருத்தத்திற்கான கொடுப்பனவாக ரூபா 200000.00/- உதவி வழங்கப்படும்.

| **நலத்திட்ட உதவிகள்** | **உரிமைப் பங்காளர்** | **சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **அணுக வேண்டியவர்** |
|---|---|---|---|
| சமுத்தி திட்டம் (ரூபா. 4500க்கு குறைவாக வருமானம் பெறுவோர் உதவு தொகை பெறலாம்) | குறைவான வருமானம் பெறும் வறிய குடும்பத்தினர் | குடும்ப அட்டை, அடையாள அட்டை | சமுத்தி உத்தியோகத்தர் (கிராம சேவகர் அபிவிருத்தி உத்தியேகத்தரின் பரிந்துரை) |
| முதியோர் திட்டம் (மாதாந்தம் ரூபா.2000) | உதவிகளற்ற 70 வயதினை பூர்த்தி செய்தவர்) | விண்ணப் பப்படிவம், வயதினை உறுதிப் படுத்தக் கூடிய ஆவணம், (முதியோர் அட்டை, கடவுச்சீட்டு, அடையாள அட்டை) | முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம் |
| மாற்றுத்திறனாளி களுக்கான உதவித் திட்டம் (மாதாந்தம் ரூபா 3000) | 80 வீதம் உடல் செயல் திறன் இழந்த மாற்றுத் திறனாளிகள் | மருத்துவச் சான்று | சமூக சேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் |

| | | | |
|---|---|---|---|
| கர்ப்பிணி களுக்கான உதவித்திட்டம் (மாதாந்தம் 2000 பெறுமதியான உணவுப் பொருட்கள் 10 மாதங்கள் வரை) | கர்ப்பிணித் தாய்மார்கள் | மருத்துவச் சான்று | கிராம மருத்துவத் தாதியிடம் விண்ணப்பத்தைப் பெற்று, கிராம சேவையாளரின் பரிந்துரையுடன் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும். |

## 8.ªð£¶ Mù£,èœ

### 8.1அரசியல் கட்சி தொடங்க என்ன செய்ய வேண்டும்.?

குழுவாக இணைந்து இரண்டு ஆண்டுகள் செயற்பட்ட பின்னர் 100 நபர்களுக்கு குறையாமல் பொது கூட்டம் நடத்தி நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு கட்சிக்கான யாப்பு உருவாக்கப்பட்டு அந்த ஆவணங்களுடன் பதிவினை மேற்கொள்ளவேண்டும். பின்னர் தேர்தல் ஆணையர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு தேர்தலை எதிர்கொள்ளலாம்.

### 8.2. இலங்கை அரசியல் சட்டம் எவ்வாறு உள்ளது?

அடிப்படை உரிமை தொடர்பான ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பில் உள்ளது)

### 8.3. அரசு நிர்வாக அமைப்பு எவ்வாறு உள்ளது?

ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பில் உள்ளது)

### 8.4. தேர்தல் முறையில் மாறுப்பட்ட நிலை உருவாக் கப்பட்டுள்ளதா?

இல்லை. விகிதாசார தேர்தல் முறையே இன்றும் தொடர்கின்றது. கட்சியோ அல்லது தனிநபரோ எடுக்கின்ற வாக்குகளின்

அடிப்படையில் மொத்த வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப உறுப்பினர்களின் தேர்வு இடம் பெறும். விருப்பு வாக்குகள் அடிப்படையில் முதன்மைப்படுத்தப்படும்.

## 8.5. சமூக நல்லிணக்கத்திற்காக அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

இளைஞர் விவகார அமைச்சு ஊடாக கலாச்சார நிகழ்வுகள் திட்டமிட்டு ஒழுங்குப்படுத்தப்படுகின்றது. இதன் ஊடாக இனங்களுக்கு இடையே சந்திப்பு, குடும்பத்துடன் தங்கி செலவிட புரிந்து கொள்ள ஏற்பாடுகள் திட்டமிட்டு நடத்தப்படுகின்றது.

கிராமம் தோறும் சிவில் நிர்வாக குழுக்கள் காவல்துறையுடன் இணைந்து, அர்த்தமுள்ள வகையில் செயற்பட வழிவகை செய்யப்படுகின்றது. கிராமப் புறங்களிலுள்ள இராணுவ முகாம்கள் அவற்றிலிருந்து அகற்றப்பட்டு, மக்கள் சுதந்திரமாக நடமாட வழிவகை செய்யப்படுகின்றது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட காணிகள் நல்லிணக்க முயற்சி அடிப்படையில் பகுதி பகுதியாக விடுவிக்கப்படுகின்றது.

காவல் துறையினர் பயிற்சிக் காலத்தில் ஆறுமாத காலம் சிங்கள மொழி பேசுவோர் தமிழ் மொழியையும், தமிழ் மொழி பேசுபவர் சிங்கள மொழியையும் கற்று நிறைவு செய்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தராக கடமையாற்றுவோர் (இருமொழி பேசுபவர்களும்) கண்டிப்பாக மாற்று மொழியை நிறைவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் குழந்தைகள் மட்டத்திலும் இருமொழி கற்றல் கொள்கை நிறைவாக அமல்படுத்தப்படுகின்றது. இதற்கான ஆசிரியர்களும் பரவலான முறையில் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

பல இந்துக் கோயில்கள் சிறப்பான முறையில் புனரமைக்கப்படடு குடமுழுக்குகள் (கும்பாபிஷேகம்)

செய்யப்பட்டு வருகின்றது.

நாட்டின் சகல பாகத்திற்கும் இரு இன மக்களும் அச்சமின்றி சென்று வரும் வகையில் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக சமூகக் கலாச்சார பொருளாதார வர்த்தக நீதியான புரிந்துணர்வுகளும் செயற்பாட்டு நடவடிக்கைகளும் வலுப் பெற்று வருகின்றது.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள மக்கள், தாய்நாட்டிற்கு வந்து செல்வதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் முகமாக வட பகுதியிலும் தொழில் கூடங்களை அமைத்து இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

### 8.6 மதுபான விற்பனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா? குடிப்பழக்கத்தை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

கிராம புறங்களில் வடி சாராயம் பரவலாக தடுக்கப்பட்டுள்ளது. எனினும் வெளிநாட்டு மதுபானக்கடைகள் எண்ணிக்கை வீதம் அதிகரித்துள்ளமை கவலையளிக்கின்றது. இளைஞர்கள் அப்பழக்கத்திற்கு அடிமையாகும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இருந்தபோதிலும் அரசு மதுபான வரியை அதிகரித்துள்ளதுடன் மதுபாவனை கட்டணத்தையும் அதிகரித்துள்ளது.

மதுவிற்க்கு அடிமையானவர்களுக்கு மருத்துவ சிகிச்சையுடன் கூடிய மறுவாழ்வு மையங்களும் உள்ளன. இதுமட்டுமின்றி கிராம மட்டங்களில் அரசு மற்றும் அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்வுகளையும் திட்டமிட்டு நடத்தி வருகின்றது.

### 8.7 இலங்கை அரசியல் சட்டத்தில் தமிழர்களின் நிலைப்பாடு என்ன?

ஒரு நாட்டின் அரசியல் சட்டம் அந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் பொதுவானது. எனவே தமிழரது நிலைப்பாடும் அரசியல் சட்டத்திற்குட்பட்டு செயற்பட வேண்டியுள்ளது. எனினும்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை புதிதாக உருவாக்க உத்தேசித்துள்ள அரசியல் யாப்பில் இணைத்து கொள்வதற்கான பகிரத முயற்சிகள் தமிழர் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சிறுபான்மையினர்க்கான பாதுகாப்பு சரத்துக்கள் நீக்கப்பட்டமை, வடகிழக்கு இணைப்பு அகற்றப்பட்டமை போன்ற மனக்குறைகள் தமிழ்மக்கள் மனதில் தொடர்ந்தும் நிலவுகின்றது.

## 8.8 வேலைவாய்ப்பு பொருளாதார நிலைகளில் பின் தங்கியுள்ள பிரதேச மக்களுக்கு அரசினால் எவ்வாறான நிவாரணத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன?

வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு சமுர்த்தி உணவு முத்திரை வழங்கப்படுகின்றது. பெண்கள் சிறு குழுக்களாக இணைந்து பொருளாதார மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படுகின்றது. அத்தோடு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொழில்சார் பயிற்சிகளும், வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படுகின்றது. ஆரம்ப காலப்பகுதியில் மேற்கொண்ட தொழில்களை தொடர்ந்து மேற்கொள்ளவும். நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தொழில்களை உள்வாங்கும் சூழலும் சிறப்பாகவுள்ளன.

# 9.Þôƒ¬è êùï£òè„ «ê££êLê, °®òóC¡ ÜóCòô¬ñŠ¹ Ü^Fò£ò‹ III Ü®Šð¬ì àK¬ñèœ

| | |
|---|---|
| சிந்தனை செய்யும் சுதந்திரம் மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன. | 10. ஆளொவ்வொருக்கும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரமுட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம் மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும் |
| சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்குச் சுதந்திரம் | 11. ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடுராமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது. |
| சமத்துவத்துக்கான உரிமை | 12. (1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்:- அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள்.<br><br>(2) இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை அல்லது பிறப் பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது. |

எதேச்சையாகக் கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப் படாமலும் இருப்பதற்கான சுதந்திரம், கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயனுடைய வான தண்டனைச் சட்ட வாக்கங்களைச் தடைசெய்த லும்

13. (1) சட்டத்தினால் தாபிக் கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங் கவன்றி, ஆளெவரும் கைது செய் யப்படுதலாகாது. கைது செய்யப்படு வதற்கான காரணம் கைது செய் யப்படும் எவரேனும் ஆளுக்கு அறி விக்கப்படுதல் வேண்டும்.

(2) கட்டுக்காவலில் வைத்திருக் கப்படும், தடுத்துவைத்திருக்கப்படும் அல்லது வேறு வகையில் சொந்தச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் ஒவ் வொராளும், சட்டத்தினால் தாபிக் கப்பட்ட நடடிவடிக்கை முறைக்கிணங்க மிக்க அண்மையிலுள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி முன் னர் கொணரப்படுதல் வேண்டும் என் பதுடன் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடடிவடிக்கை முறைக்கிணங்க அத்தகைய நீதிபதியினால் ஆக்கப் படும் கட்டளைப்படியன்றியும், அதன் நியதிகளுக்கிணங்கவன்றியும், தொடர்ந்து கட்டுக்காவலில் வைந் திருக்கப்படுதலோ, தடுத்து வைக் கப்படுதலோ அல்லது சொந்தச் சுதந் திரம் பறிக்கப்படுதலோ ஆகாது.

(3) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட் டப்படும் எவரேனுமாள், தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் நடாத்தப்படும் நியாயமான விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்பதற்கு அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்பதற்கு உரித்துடைய

பேச்சுத் சுதந்திரம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு சேர்வதற் கான சுதந்திரம், முயற்சி செய்வதற்கான சுதந்திரம், தடையின்றி நடமாடு வதற்கான சுதந்திரம் முதலியன.

14. (1) ஒவ்வொரு பிரசையும் பின்வருவனவற்றுக்கு உரித்துடைய வராவர்.

(அ) வெளியிடுவதலுட்படப் பேச்சுச் சுதந்திரமும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரமும்.

(ஆ) அமைதியான முறையிலே ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்.

(இ) ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம்.

(ஈ) தொழிற் சங்கமொன்றை அமைக்கவும் அதிற் சேரவும் உள்ள சுதந்திரம்.

(உ) தனியாக அல்லது மற்றவர் களுடன் சேர்ந்து, பகிரங்கமாக வேனும் அந்தரங்மாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும் சாதனையிலும் போதனையிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம்.

(ஊ) தனியாக அல்லது ஏனையர் களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலா சாரத்தை அனுபவிப்பதற்கும் மேம் படுத்துவதற்கும், அத்துடன் தனது சொந்த மொழியை பயன்படுத்துவதற் கான சுதந்திரம்.

(எ) ஏதேனும் சட்டமுறையான முயற்சியில், உயர்தொழிலில், வியா பாரத்திலும், தொழிலில் அல்லது தொழில் முயற்சியில் தானாக அல்

| | |
|---|---|
| அடிப்படை உரிமைகளின் மீதான மட்டுப்பாடுகள் | 15. (1) 13. (5) ஆம், 13 (6) ஆம் உறுப்புரைகளினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமைகளின் பிரயோகமும் தொழிற்பாடும், தேசியப் பாதுகாப்பின் நலன்கருதி சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்கான “சட்டம்” என்பது பொதுமக்கள் பாதுகாப்புப் பற்றிய அப்போதைக்கான சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளையும் உள்ளடக்கும்.<br><br>(2) 14 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுக வாழ்வு என்பனவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை நீதிமன்ற அவமதிப்பு, மானநட்டம் அல்லத தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவரான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.<br><br>(3) 14 (1) (ஆ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும். இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுக வாழ்வு |

இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் தொடர்ந்தும் வலுவிலிருத்தல்

16. (1) இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வொதனவாக இருப்பினும் செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்.

(2) தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் கட்டளையின் பேரில் எவரேனும் ஆளை, இப்போதுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவிதமான ஒரு தண்டனைக்கேனும் உள்ளாக்குதல். இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகாது.

ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கெதிரான பரிகாரம்

17. ஆளொவ்வொருவரும், இந்த அத்தியாயத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவருக்குரித்தாகவுள்ள அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடிவடிக்கை மூலம் அல்லது நிருவாக நடவடிக்கை மூலம் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது உடன டியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் 126 ஆம் உறுப்புரையினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துரைடயவராதல் வேண்டும்.

அடிப்படை உரிமைகள் பற்றிய நியாயாதிக்கமும் அதனைப் பிரயோகித்தலும்.

126. (1) மூன்றாம் அல்லது நான்காம் அத்தியாயத்தால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதான ஏதேனும் அடிப்படை உரிமையானது ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிருவாக நடவடிக்கையால் மீறப்பட்டமை பற்றிய அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை பற்றிய ஏதேனும் பிரச்சினையை விசாரனை செய்வதற்கும் தீர்மானிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் தொடர்பிலான ஏதேனும் அடிப்படை உரிமை அல்லது மொழியுரிமை ஆட்சித்துறை நடிவடிக்கையால் அல்லது நிர்வாக நடவடிக்கையால் மீறப்பட்டுள்ளதென அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்த்துமிடத்து. அத்தகைய மீறல் தொடர்பில் நிவாரணம் அல்லது பரிகாரம் வழங்குமாறு கோரி, அந்த நிகழ்ச்சித் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் அத்தகைய நீதிமன்ற விதிகளுக்கிணங்க உயர் நீதிமன்றத்துக்கு முகவரியிட்டனுப்பிய எழுத்திலான மனுவொன்றின் மூலம், அவர் தாமாகவே அல்லது அவரது சார்பில் சட்டத்தரணியொருவர் மூலமாகவோ அத்தகைய நீதி

மன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து விசாரிக்கப்படுவதற்கான உயர்நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் கேட்டுப் பெற்ற பின்னரே அவ்விண்ணப்பம் மேற்கொண்டு செல்லப்படலாம். அத்தகைய அனுமதி இரண்டு பேர்களுக்குக் குறையாத நீதிபதிகளால் வழங்கப்படலாம் அல்லது மறுக்கப்படலாம்

(3) ஆட்கொணர் எழுத்தாணை, உறுதிகேள் எழுத்தாணை, தடையீட்டெழுத்தாணை, ஆணையீட்டெழுத்தாணை, மேற்செல் என்னும் எழுத்தாணை, அல்லது யாதுரிமை எழுத்தாணை என்ற இயல்பினவான கட்டளைகளுக்கான விண்ணப்பமொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றில் விசாரணை செய்கின்றபோது, அத்தகைய விண்ணப்பத்திற்கான கட்சிக்காரரர் ஒருவரால் **III** ஆம் அல்லது **IV** ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன என்பதற்கு முதற்தோற்ற வளவிலான சான்று உள்ளது என்று அத்தகைய நீதிமன்றத்துக்குத் தோன்றுகின்றவிடத்து. அத்தகைய நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதற்கென அத்தகைய விடயத்தை உடனடியாக ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

(4) உயர்நீதிமன்றம். இவ்வுறுப்புரையின் (2) ஆம் (3) ஆம் பந்திகளில்

குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மனு அல்லது ஆற்றுப்ட்டுத்துகை தொடர்பில், அச்சந்தர்ப்பத்தில் நீதியானதும் ஒப்புரவானதும் என அது கருதக் கூடியவாறான அத்தகைய நிவாரணத்தை வழங்குவதற்கு அல்லது அத் தகைய பணிப்புகளை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது அதன் அபிப்பிராயப்படி அடிப்படை உரிமை அல்லது மொழி உரிமை எதுவும் மீறப்படாவிட்டால் அந்தக் கருமத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்பதுல் வேண்டும்.

(5) உயர்நீதிமன்றம், இவ்வுறுப்பிரையின் கீழான ஏதேனும் மனுவை அல்லது ஆற்றுப்படுத்துகையை அத் தகைய மனு கோப்பிடப்பட்ட அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தகை செய்யப்பட்ட இரண்டு மாதங் களுக்குள்ளாக அதனை விசாரணை செய்யய முற்றாக முடிவு செய்தலும் வேண்டும்.

**CONSULAR BIRTH CERTIFICATE**
Assist Registrar General Department
Central Regard Room
Maligawatta
Colombo-10
Tel:0112889488/89
e-mail:info@rgd.gov.lk, rgd@sltnet.lk

**CITIZENSHIP OFFICE**
Department of Immigration and Emigration,
Ananda Rajakaruna Mawatta
Colombo-10

**DEGREE CERTIFICATE CHANGE**

The Chairman,

University Grants Commission,

No. 18,

Ward Place,
Colombo-7,
011-2694486,011-2697133

EQUAL CERTIFICATE OL/AL
Department of Examination,
Pelawatta, Batramulla
Colombo
Tel:0112786200

**DIPLOMA CERTIFICATE CHANGE**
NAITA Department,
No. 971,
Sri Jeyawardenapura Mawatta,
Welikada, Rajagiriya,
Sri lanka.
Tel:0112888782-7(General)
E-Mail:info@naita.gov.lk

· **Obtaining a National Identity Card (NIC) for the first time.**

· Eligibility criteria to apply for an ID for the first time

· Should be a citizen of Sri Lanka

· Should be attained 16 years of age

· Obtaining an Application

· From the Grama Niladhari of the applicant's residential area;

· From the Estate superintendant (if the applicant resides in an estate);

· From the School Principal or the "Parivenadhipathi" of the respective Pirivena in the case of school applicationsCompleted application along with the relevant documents should be handed over to the above respective officers as appropriate.

**Necessary documents to be submitted to obtain an ID for the first time:**

· Duly completed RPD Form 1

· Applicants under 50 years of age should compulsorily submit the Birth Certificate (BC) or the Probable Age Certificate issued by the Additional District Registrar in order to obtain an ID card.

· The Department considers 1st of July of the respective year as the date of birth in respect of the applicants who submit probable age certificates.

· Applicants over 50 years of age and do not possess the birth certificate or the probable age certificate, could submit two or more following alternative documents along with the results of search of registers and an Affidavit to confirm the age.

· School leaving certificate

· Certificate of Baptism

· Copies of Birth certificates of children of the applicant, (if the date of birth of the applicant indicated )

· Extract of the birth certificate of the applicant

· Citizenship certificate of Sri Lanka (if the date of birth indicated)

· Estate leaving certificate (if the date of birth indicated)

· Certified copies of relevant pages of the Passport

· Registration card issued by the Estate Superintendent

· Horoscope (if available)

· Applicants born in a foreign country should submit the citizenship certificates issued by the Department of Immigration & Emigration of Sri Lanka.

· Women applicants, who wish to include husband's family name in the ID card need to submit the original & a copy of the marriage certificate.

· Five colour photographs of the size of 1 $^{3}/_{8}$" X $^{7}/_{8}$"

· Stamp fees

· Stamps to a value of Rs. 3/= for the applicants under 17 years of age.

· Stamps to a value of Rs. 13/= for the applicants over 17 years of age.

· Applicants, who wish to include their occupation/ designation in the ID card, should submit a service certificate obtained during the last three months. Professionals also need to submit documentary evidence, in case if they wish to include their profession in the ID card. (I.e. Engineers, Doctors, Accountants, Lawyers should submit relevant Degree certificates). In case of the Businessmen, they need to submit a certified copy of the Business Registration certificate.

· Procedure to confirm the Priest status of applicants-

· Buddhist cleric should submit the "Certificate of Ordain" or "Upasampada Certificate" issued by the Department of Buddhist Affairs

· "Dasasil Matha" should submit the registration certificate issued by the Department of Buddhist Affairs

· Islamic priest should submit the certificate issued by the Department of Islamic Religious Affairs

· Hindu priest should submit the certificate issued by the Department of Hindu Religious Affairs

· Catholic priest should submit certificate issued by the head of relevant catholic religious chapters

**Organization Information**

Department of Registration of Persons

C45, Keppetipola Road,

Colombo 05.

Mr. A.P.G. Roshan Amarasinghe

Telephones:+94-11-2555616,

Fax Nos:+94-11-2593634

Email:info@drp.gov.lk

Website: www.drp.gov.lk

Deparment for Regisration of Persons,

District Secretariat, Kandy Tp. +94 81 223 47 52

Deparment for Regisration of Persons,

Manmunei North, Batticaloa. Tp. +94 65 222 9 449,

Fax. +94 65 222 9 448

Deparment for Regisration of Persons,

District Secretariat, Vavuniya Tp. +94 24 222 7201,

Fax. +94 24 222 7202

## (சொற்களஞ்சியம்) GLOSSARY

| S.No | மொழிபெயர்ப்பு | இந்திய நடைமுறை வழக்குச்சொற்கள் | ENGLISH |
|---|---|---|---|
| 1 | பாதுகாப்பு | | DEFENCE |
| 2 | வேலைவாய்ப்பு | | EMPLOYEMENT |
| 3 | வாழ்வாதார உதவிகள் | | LIVELYHOOD ASSISTANCE |
| 4 | விசாரணை குழு | | ENQUIRY COMMISION |
| | புலனாய்வு பிரிவு | | INVESTICATION SECTION |
| 5 | ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமை ஆணையம் | | UNITED NATIONS HUMAN RIGHTS COUNSIL |
| 6 | புனர்வாழ்வு | மறுவாழ்வு | REHABILITATION |
| 7 | வாழ்வாதார பயிற்சிகள் | | LIVELYHOOD TRAINING |
| 8 | பாரிய குற்றம் | | SERIOUS CRIME |
| 9 | சோதனை சாவடி | | CHECK POS |
| 10 | கூட்டுறவு கல்வி நிலையம் | | OFFICE COOPERATIVE EDUCATION DEPARTMENT |
| 11 | போர் | | WAR |
| 12 | மீள்குடியேற்றம் | | RESETTLEMENT |
| 13 | அடிப்படை வசதிகள் | | BASIC FACILITIES |
| 14 | போக்குவரத்து வசதி | | TRANSPORT FACILITY |
| 15 | உயர் பாதுகாப்பு வலயம் | | HIGH PROTECTION ZONE |
| 16 | இராணுவ முகாம் | | ARMY CAMPS |

| | | | |
|---|---|---|---|
| 17 | பாதுகாப்பு அச்சுறுத்தல் | | PROTECTION RISK |
| 18 | கிராம சேவையாளர் | | VILLAGE ADMINISTRATIVE OFFICER |
| 19 | கண்காணிப்பு | | MONITORING |
| 20 | பாதுகாப்பு சட்டம் | | DEFENCE LAW |
| 21 | குற்றம் | | CRIMES |
| 22 | புனர்வாழ்வு அமைச்சு | | ESETTLEMENT MINISTRY |
| 23 | காணாமல் போனவர்களுக்கான ஆணைக்குழு | | MISSING PERSON COMMISION |
| 24 | சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களம் | | DEPARTMENT OF PROBATION |
| 25 | கண்ணி வெடி | | LAND MINDS |
| 26 | பொரளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் | | ECONOMIC DEVELOPMENT OFFICERS |
| 27 | சமவலுச்சான்று | | EQUIVALENTLY CERTIFIED |
| 28 | கல்வி தராதர பொது சாதாரண பரிட்சை 10ம் வகுப்பு அரசு பொதுதேர்வு (உயர்நிலை கல்வி) | | GENERAL CERTIFICATE OF ORDINARY LEVEL |
| 29 | வதிவிட சான்று | இருப்பிடச்சான்று | RESIDENCIAL CERTIFICATE |
| 30 | திறனாய்வு தேர்வு | | ATTITUDE EXAMINATION |

| | | | |
|---|---|---|---|
| 31 | கல்வி தராதர பொது உயர்தர பரிட்சை 12ம் வகுப்பு அரசு பொதுதேர்வு (மேல்நிலை கல்வி) | | GENERAL CERTIFICATE OF ADVANCED LEVEL |
| 32 | நாற்றங்கால் பள்ளி | பாலர் பள்ளி | NURSERY SCHOOL |
| 33 | திறன் மேம்பாட்டு பயிற்சி | | SKILL DEVELOPMENT TRAININGS |
| 34 | புரிந்துணர்வு ஒப்பந்தம் | | MEMORUNDAM OF UNDERSTANDING |
| 35 | இளைஞர் விவகார அமைச்சு | | MINISTRY OF YOUTH AFFAIRS |
| 36 | பல்கலை கழக மானியங்கள் ஆணைக்குழு | | UNIVERSITY GRAND COMMISSION |
| 37 | மனித வள அபிவிருத்தி | மனித வள மேம்பாடு | HUMAN RESOURCE DEVELOPMENT |
| 38 | பிரதேச செயலகம் | வட்டாட்சியர் அலவலகம் | DIVISIONAL SECRETARY |
| 39 | மாவட்ட செயலகம் | மாவட்ட ஆட்சியரகம் | DISTRICT SECRETARY |
| 40 | வர்த்தமானி | அரசிதழ் | GAZETTE |
| 41 | மருத்துவ பரிந்துரை குழு | | MEDICAL COUNSIL |
| 42 | மருத்துவ சேவைகள் | | HEALTH SERVICE |
| 43 | தொடர் நோயாளி | | CHRONIC PATIENT |

| | | | |
|---|---|---|---|
| 44 | போதனா வைத்தியசாலை | மருத்துவ கல்லூரி மருத்துவமனை | TEACHING HOSPITAL |
| 45 | மனநலம் | | MENTAL HEALTH |
| 46 | கிராம வைத்தியசாலை | ஆரம்ப சுகாதார நிலையம் | VILLAGE HOSPITAL |
| 47 | கிராம ஆதார வைத்திய சாலை | | VILLAGE BASE HOSPITAL |
| 48 | பிரதேச வைத்திய சாலை | தாலுகா மருத்துவமனை | DIVISIONAL HOSPITAL |
| 49 | மாவட்ட வைத்திய சாலை | மாவட்ட மருத்துவமனை | DISTRICT HOSPITAL |
| 50 | காந்த ஒத்திசைவு படமெடுத்தல் | | MAGNETIC RESONANCE IMAGE |
| 51 | பெண்நோயியல் பிள்ளை பேற்று மருத்துவம் | மகப்பேற்று மருத்துவம் | VISITING OBSTRATIC GYNANEM Obstetrician & Gynecologist (VOG)(Valley Obstetrics and Gynecology) |
| 52 | தாதியர் | செவிலியர் | MIDWIFE |
| 53 | கருத்தடை | | FAMILY PLANNING |
| 54 | நல விழிப்புணர்வு | | HEALTH AWARNESS |
| 55 | வைத்திய அதிகாரி | மருத்துவ அலுவலர் | MEDICAL OFFICER OF HEALTH |
| 56 | நடமாடும் மருத்துவ சேவை | | MOBILE MEDICAL SERVICE |
| 57 | இரத்த சுத்திகரிப்பு | | DIALYSIS |
| 58 | சத்திர சிகிச்சை | அறுவை சிகிச்சை | SURGERY |
| 59 | அவசர ஊர்தி | | AMBULANCE SERVICE |
| 60 | மாற்றுத்திறனாளி | | PHYSICALLY CHALLENGED |
| 61 | காணி | நிலம் | LAND |

| | | | |
|---|---|---|---|
| 62 | இணக்க சபை | | MEDIATION BOARD |
| 63 | காணி அபிவிருத்தி அலுவலர் | | LAND DEVOLOPMENT OFFICER |
| 64 | காணி மூலப்பிரதி | | LAND ORIGINAL DOCUMENT |
| 65 | மாவட்ட பதிவாளர் | | DISTRICT REGISTRAR |
| 66 | இலவச சட்ட உதவி | | FREE LEGAL AID |
| 67 | மகளிர் மேம்பாடு | | WOMEN DEVELOPMENT |
| | அரசு தொழில் | | GOVERNMENT |
| 68 | திணைக்களம் தொழில் துறை | | DEPARTMENT OF INDUSTRY |
| 69 | பனை அபிவிருத்தி | | PALMYRAH DEVELOPMENT |
| 70 | பெண்கள் விவகார அமைச்சு | | MINISTRY OF WOMEN AFFAIRS |
| 71 | விவசாய துறை | | AGRICULTURE DEPARTMENT |
| 72 | மீன்பிடி துறை | | FISHERIES SECTORS |
| 73 | அரசு உரிமம் | | LICENSE |
| 74 | தகவல் தொழில்நுட்பம் | | INFORMATION TECHNOLOGY |
| 75 | ஓட்டுநர் உரிமம் | | DRIVING LICENSE |
| 76 | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | | DEPARTMENT OF MOTOR TRAFFIC |
| 77 | இலங்கை தேசிய அடையாள அட்டை | | SRI LANKAN NATIONAL IDENTY CARD |
| 78 | நுழைவு தேர்வு | | ENTRANCE EXAM |
| 79 | தொலை தொடர்பு | | TELECOM |
| 80 | தூதரக பிறப்பு சான்றிதழ் | | CONSULAR BIRTH CERTIFICATE |

| | | | |
|---|---|---|---|
| 81 | தூதரக இறப்பு சான்றிதழ் | | CONSULAR DEATH CERTIFICATE |
| 82 | தூதரக திருமண சான்றிதழ் | | CONSULAR MARRIAGE CERTIFICATE |
| 83 | கடவுச்சீட்டு அலுவலகம் | | PASSPORT OFFICE |
| 84 | சத்திய கடுதாசி | பிரமாண பத்திரம் | AFFIDAVIT |
| 85 | கப்பல் சேவை | | FERRY SERVICE |
| 86 | தேடுதல் விளைவு சான்றிதழ் | | NOT REGISTRATION CERTIFICATE |
| 87 | இலங்கை குடியுரிமை | | SRI LANKAN CITIZENSHIP |
| 88 | சமூக நலத்திட்டங்கள் | | SOCIAL WELFARE PROGRAMMES |
| 89 | அரசு பணக்கொடை | | GOVERNMENT CASH GRANT |
| 90 | அரசியல் கட்சி | | POLYTICAL PARTY |
| 91 | தேர்தல் ஆணையம் | | ELECTION COMMISSION |
| 92 | அடிப்படை உரிமைகள் | | BASIC RIGHTS |
| 93 | முதியோர் இல்லம் | | AGED HOME |
| 94 | சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு | | MINORITIES PROTECTION |
| 95 | பொருளாதார அபிவிருத்தி பொருளாதார மேம்பாடு | | ECONOMICAL DEVELOPMENT |